**(நபியே!) "இவர்களுடைய கல்வி, ஞானம் இவ்வளவு தூரம்தான் செல்கின்றது (இதற்குமேல் செல்வதில்லை) நிச்சயமாக உமதிறைவன், தன்னுடைய வழியிலிருந்து தவறியவன் யாரென்பதையும் நன்கறிவான்."** *(53 - 30)*

திருக் குர்ஆனுக்குள்ள தப்ஸீர் ஞானமும், ஹதீது பற்றிய வியாக்கியானமும் அறியாதவர்களுள் சிலர், தங்கள் மனம்போன போக்குக்கு, குர்ஆன் ஷரீப் ஆயத்துகளுக்கு ஸபப்-நுஜூல் தெரியாது, தப்பும் தவறுமாக, தமது சூழ்நிலைக்குத் தக்கவாறு பொருள் கூறி மேற்கோள்கள் காட்ட முற்பட்டிருக்கின்றனர்.

"குர்ஆனுக்கு ஒருவன் தனது யோசனையைக் கொண்டு வியாக்கியானம் செய்வானேயானால் காபிராகிவிட்டான்", என்றும், 'எவன் தன்னுடைய அறிவைக் கொண்டு குர்ஆனுக்கு வியாக்கியானம் செய்கின்றானோ, அவன் தன்னுடைய இடத்தை நரகத்தில் எடுத்துக்கொள்வான்' எனவும், அண்ணலெம் பெருமானார் (ஸல்) அருளியுள்ளார்கள்.

திருமறையில் அல்லாஹ்

**(நபியே!) உமதிறைவன், அவர்களுடைய இருதயங்கள் மறைத்து வைத்திருப்பதையும், (அதற்கு மாறாக) அவர்கள் வெளியிடுவதையும் நன்கறிவான் எனக் கூறுகின்றான்.** *(28 - 69)*

## 3-வது ஹத்யா
## தீனை (மார்க்கத்தை)ப் பின்பற்றுதல்

إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الْإِسْلَامُ

**"நிச்சயமாக அல்லாஹ்வினிடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கமாவது இஸ்லாமேயாகும்."**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மார்க்கப் பிரச்சாரம் செய்யும்படி இறைவன் புறத்தால் இருந்து கட்டளை வந்தபோது, அவர்கள் தங்கள் உறவினர்களை அழைத்து "முர்றத்தின் கூட்டத்



தார்களே! பனீ முத்தலிபுகளே! என் அருமை மகள் பாத்திமாவே! நீங்கள் அனைவரும் தீனுல் இஸ்லாத்தைத் தழுவாவிட்டால், உங்களுக்கு நேரிடும் சிரமத்தையும், துன்பங்களையும் தட்டி விலக்குவதற்கு என்னால் முடியாது" என்று எச்சரிக்கின்றேன். "ஆகவே நீங்கள் அனைவரும் பரிசுத்த தீனில் சேர்ந்து, உங்கள் உடல்களை நரகத்தின் கொடிய நெருப்பிலிருந்து காத்துக் கொள்ளுங்கள். ஒருவன் குரைஷி வம்சமாக இருப்பினும், அவன் தீனில் சேரா விட்டால் நரகமே அடைவான். ஒரு ஹபஷி தீனுல் இஸ்லாத்தைத் தழுவினால், அவன் அடிமையாக இருந்தாலும், சுவர்க்கவாதி ஆகுவான்" என்று கூறினார்கள்.

இஸ்லாம் என்பது 'தவ்ஹீதை'யும், 'ஷரீஅத்'தையும் ஏற்றுக் கடைப்பிடிப்பதேயாம். பாவா ஆதம் (அலை) அவர்கள் நபியாக வந்த காலம் முதல் இஸ்லாமே சன்மார்க்கமாக இருந்து வருகிறது. இதைத் தவிர மற்றவைகள் எல்லாம் திருத்தப்பட்டவைகளேயாம்.

கதாதா (ரலி) கூறுவதாவது:- இஸ்லாம் என்பது **"லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி"** என்று பகர்வதும், இறைவனிடமிருந்து வந்த திருகுர்ஆனை அங்கீகரித்து, அதன்படி நடந்து அவனுக்கு நன்றி பாராட்டுவதுமாகும். ஹதீது ஷரீபில் கண்டபடி, தீனுல் இஸ்லாத்தை நமக்கு அளிக்கப்பட்டதற்காக நாம் நமது ஆயுள்வரை இறைவனுக்கு இடைவிடாது நன்றி செலுத்தி வரவேண்டியது கடமை யாகும்.

இதனையே, தக்கலை அப்பா ஞானமேதை பீர்முஹம்மது ஸாஹிப் வலியுல்லாஹ் அவர்கள் தங்கள் ஞானப்புகழ்ச்சியில்:-

ஆதம் பெறு மக்களெல்லாரிலும் நன்மையன்பு கொண்டே
வேத நபியிர சூலும்மத்தாக்கும் வெகு நன்றிக்குப்
பாதங்கள் மேலுஞ் சிரங்கீழு மாய்ப்பத்து நூறாயிர மாண்
டோதித் தவஞ்செய்தாலும் போதா தாமன்று கந்ததுக்கே

எனக் கூறியுள்ளார்கள்.

அல்லா(ஹ்)வுத் தஆலா ஒரு மனிதனுக்கு நிஃமத்தைக் கொடுத்தால், அதற்காக அவன் நன்றி பாராட்ட வேண்டியவனாகின்றான். ஆனால் தீனுல் இஸ்லாம் என்னும் மார்க்கத்தை அல்லா(ஹ்) நமக்கு அளித்திருப்பது, மற்றெல்லா நிஃமத்தைக் காட்டிலும் மிக மிக மேலானதாகும். இதற்குரிய நன்றியை நாம் எவ்வளவு தூரம்

நிறைவேற்றினாலும் அது அந்த நிஃமத்துக்குச் சற்றும் ஈடாகாது. எனினும் நமக்குக் கிடைத்துள்ள ஆயுள் காலத்தில், அதை நினைந்து நினைந்து கொஞ்சம் கொஞ்சமாக நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். மவ்லானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) தங்கள் 'மஸ்னவீ'யில் கூறியுள்ள ஒரு பைத்து இதனை வலியுறுத்தும்.

ஷுக்ரி நிஃமத் அப்ஸூன் குநத்
குப்ரி நிஃமத் அஸ்கபத் பேரூன குநத்

பாக்கியங்களுக்காக உன்னால் (இறைவனைப்) பாராட்டப்படும் நன்றியானது, உன் பாக்கியங்களை அதிகப்படுத்தும். பாக்கியங்களின் நன்றியை நிராகரிக்கச் செய்யும் மறதியானது, அந்தப் பாக்கியங்களை உன் கையைவிட்டும் விலகச்செய்யும்.

## இறை நம்பிக்கையின் உறுதி:

## ஹஜ்ரத் பிலால் அவர்களும் மற்றைய ஆரம்ப முஸ்லிம்களும்:

அபிஸீனியா நாட்டைச் சேர்ந்த பிலால் அரபியரல்லர். 'ஹபஷி' என்றால் அபிஸீனியர் என்று பொருள். பிலால் மக்கா நகரில் பிறந்தார். தந்தையின் பெயர் 'ரப்பாஹ்' தாயார் பெயர் 'ஹமாமா' அபூ அப்துல்லாஹ் என்பது பிலாலின் இட்ட பெயர்.

இளமையிலேயே மக்கா நகரில் உமையா பின் கஃபு என்பவரிடம் பிலால் அடிமையாகயிருந்து பணியாற்றி வந்தார். எஜமானனுடைய விக்கிரக வணக்கமும், அஞ்ஞானமும் நிறைந்த சூழ்நிலையில் பிலால் வளர்ந்தார். இவரது இளமையும், வாலிபப் பருவமும் இவ்வாறே நிகழ்ந்தன. வயது முப்பத்து ஏழு ஆயிற்று, அப்போது தான் 'அல்லாஹ்' என்ற சொல் முதலாவதாக அவர் காதில் விழுந்தது. இந்த வார்த்தை இறுதியான இறை தூதர் முஹம்மது ஸல் அவர்கள் மூலம் வந்தது என்ற நம்பிக்கையோடு, பிலால் நபிகளாரின் அழைப்பைக் கேட்ட மாத்திரத்தில், அதற்குத் தலை சாய்ந்தார். அவருடைய உள்ளம் இஸ்லாமிய ஒளியில் பிரகாச மடைந்தது. அது சமயம் எட்டுப் பெயர்களே இஸ்லாமியத் தூதை ஒப்புக் கொண்டிருந்தனர்.

எஜமானன் வழிபட்ட அவரது குடும்பத் தெய்வங்களை பிலால் துச்சமாக மதித்தார். 'அல்லாஹ் ஒருவனே' என்று உறுதி கொண்டார்;



விக்கிரகம் வைத்திருந்த எஜமானன் வீட்டில் போய் கீழே விழுந்து வணக்கம் செய்யும்போது, அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்கிறவராக, 'அஹது', 'அஹது' ஒருவன்' ஒருவன் என்று சொல்லிக் கொண்டிருப்பார். அந்த அடிமை பிலால், முஹம்மது, அல்லாஹ்வுக்குப் பணிவதை உமையா தெரிந்து ''பிலாலே'' நீர் விக்கிரகங்களையே வணங்க வேண்டும். முஹம்மதுடைய ஆண்டவனை விட்டுவிடும்'' என்று பல முறை கூறியும், பிலால் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்துகொண்டிருப்பார்.

பிலால் ஈமான் கொண்டிருப்பது, நபிகள் நாயகம் (ஸல்) அவர் களுக்குத் தெரிந்து, அல்லாஹ்வை பாராட்டினார்கள்.

ஒரு நாள் எஜமானன் ஓய் ''பிலாலே! என் தெய்வங்ளை வணங்குகிறீரா? அல்லது முஹம்மதுவின் நாயனை வணங்குகிறீரா?'' என்று அதட்டிக் கேட்க, அதற்கு பிலால் கொடுத்த பதில் இதோ!

(நபிகள் நாதரின் உபதேசமான அல்லாஹ் ஒருவனே அவனுக்கு இணை வைக்காதீர் என்ற ஞான ஒளி பிலாலின் மனத்தில் தெளிவை உணர்த்த) 'உலகத்தை எல்லாம் அடக்கி அரசாளும் ஒருவனான, எங்கும் துலங்கும் ரப்பாகிய அந்த அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்து வணக்கம் செலுத்துகிறேனேயன்றி, உன் தெய்வங்களை நான் வணங்கவே இல்லை' என்று துணிச்சலுடன் விடையளித்தார்.

இதைக் கேட்ட உமையா கோபாவேசத்துடன் அவரைக் சிரமப் படுத்தவும், நோவினை செய்யவும் துணிந்தார். அவருக்கு இரும்புக் கவசம் அணிவித்து வெயிலில் கிடத்தப்பட்டார். அன்றியும் கடுமையான வெயில் வந்ததும், அவரைப் பிடித்து இறுகக் கட்டி நிர்வாணமாக உடம்பெல்லாம் எண்ணையைத் தேய்த்து சூடான மணலிலும், கற்பாறையிலும் உருட்டிக் காலில் பிரியைக் கட்டி சிறுவர்களைக் கொண்டு இழுக்கும்படி ஏவுவார். சிறுவர்கள் அவரை இழுத்துக்கொண்டு குதூகலமாகச் செல்வார்கள். இவ்வாறு சில காலம் செய்தார். மணலின் சூடும், பாறையின் வெப்பும் உடலில் தாவி காயங்களால் ஏற்பட்ட கொப்பளத்தின் நோவு பொறுக்காமல், பிலால் 'அஹதாகிய அல்லாஹ்வே' என்று உரக்கச் சொல்லிக்கொண்டே, ஏங்கி ஏங்கி அழுவார். இரக்கமற்ற எஜமானன் ''இது போதுமா? இன்னும் வேண்டுமா?'' என்பார். அதற்கு பிலால் ''இது போதும் என்பதற்கு இடமே இல்லை'' என்பார்.

நபி பெருமானார் (ஸல்) அவர்களின் ஏகத்துவக் கொள்கையின் ஆரம்ப அழைப்புக் கட்டம். முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்று குரைஷிகள் இடுப்பை இறுகக் கட்டிக்கொண்டு, நபியுல்லாஹ்வுக்கு நாலாபுறமும் எதிர்ப்புகளும், இன்னல்களும் சரமாரியாக வந்துகொண்டிருந்த சமயம். ஆனால் எதிர்ப்பாளர் அனைவரிலும் இந்த உமையா பின் கலஃப் என்பவரே முஸ்லிம்களுக்குத் துன்பம் செய்வதில் முதலிடம் பெற்றார். இவருக்கு முஸ்லிம்கள் மீதுள்ள வெறுப்பு, பகைமை, கோபம் இவற்றால் புதிய புதிய முறைகளைக் கையாண்டு, பொதுவாக முஸ்லிம்களுக்கும், குறிப்பாக தனது அடிமை பிலாலுக்கும் விதம் விதமான துன்பங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

பிலால் படும் வேதனையைப் பார்ப்பவர் எவருமே அவருக்கு இரக்கம் காட்டவோ, பரிந்து பேசவோ முன்வரவில்லை. அப்படியே அவர்கள் இருந்துவிடவுமில்லை. அவருடைய எஜமானுக்கும், சிறுவர்களுக்கும் ஊக்கம் கொடுத்துக்கொண்டே இருந்தனர். இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிந்து பொறுமை கொண்டார்கள். நாட்களும் பல உருண்டோடின. இதற்கிடையில் பிலால் ஒரு நாள் தனது தேகத்திலுள்ள கோரக்குறிகளுடன் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து ''எனக்கு உதவி செய்யுங்கள்!'' என விண்ணப்பித்தார். பெருமானாரவர்கள் பிலாலுக்கு ஆறுதல் அளித்தார்கள் என்றாலும், நெடுநாட்களாக தங்கள் சீடர்கள் துன்பப்படுவதை நபி(ஸல்) அவர்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்திற்கிடையில் குரைஷியர் பலர், நபிகள் நாதரின் அழைப்பை ஏற்று புனித இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டனர்.

ஒரு நாள் நபியுல்லாஹ் அவர்கள் தங்கள் நண்பர் அபூபக்கர் (ரலி) அவர்களைப் பார்த்து, ''நீண்ட நாட்களாக பிலால் பெரும் வேதனையில் இருக்கிறார். நம்மிடம் பொருள் இருந்தால், அவரை மீட்டு விடலாம்'' எனக் கூறினார்கள். இதனை ஏற்றுக்கொண்ட ஸித்தீக்கு (ரலி) அவர்கள், அன்றே அந்த வழியாக நடந்து செல்லும் போது, பிலால் அவர்கள் படும் வேதனையையும், அவர் உடம்பையும், அவர் அழுவதையும் பார்த்து, ''ஓய்! உமையாவே!! இந்த அடிமையை எதுவரை துன்பப்படுத்தி நோவினை செய்வாய்?'' எனக்கேட்க, அதற்கவர், ''இவனை நான் என் பணத்தைக்கொடுத்து வாங்கினேன். 'இவனை நோவினை செய்வதற்கு நான் பாத்தியப் பட்டவன்'' என்றார். அதற்கு ஸித்தீக்கு (ரலி) அவர்கள்:-



''அல்லாஹ்வுக்கு ஈமான் கொண்டு **'லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி'** என்று கலிமாச் சொல்லிய முஸ்லிமை நீர் வேதனை செய்வது நல்லதல்ல'' என்றார்கள். இதிலிருந்து இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு, முடிவில் ஸித்தீக்கு (ரலி) அவர்கள், ''நீர் இந்த அப்தை என்ன விலை கொடுத்து வாங்கினீர்? இப்போது எனக்கு என்ன விலையாகத் தருவீர்?'' என்றபோது, அவர் (உண்மைக்கு மாறாக) ''ஒரு வெண்மையான அப்தையும் எண்பது களஞ்சிப் பொன்னும் கொடுத்து வாங்கினேன். அந்த விதம் தந்தால் இந்த பிலாலைத் தருவதாக''ச் சொன்னார். இதைக் கேட்ட ஸித்தீக் (ரலி) அவர்கள், ''சரி அப்படியே வாங்கிக்கொள்'' என்று கூறியதும், உமையாவுக்கு மனம் மாறி, ''நீவிர் கொஞ்சமும் யோசனை செய்யாமல் அதிக விலைக்கு இந்த அப்தைக் கேட்டு விட்டீரே?'' எனச் சிரித்தவராக ''ஒரு திர்கத்திற்குக் கேட்டாலும் உமக்குத் தந்துவிடுவேனே'' என்றார். அதற்கு அவர்கள் ''நீர் எனக்குச் சகாயமான விலைக்குத் தந்துவிட்டீர், என் சொத்து அடங்கலையும் இந்த அப்துக்குப் பகரம் கேட்டாலும் தந்து விடுவேன்'' எனக்கூறி, அடுத்து அவர் கேட்டதைக் கொடுத்து, பிலாலை வாங்கித் தங்களுடைய மேல் வேட்டியை அவருக்கு உடுக்கச்செய்து, முகத்திலிருந்த மண்ணைத் துடைத்து அவர் கையைப் பற்றிக்கொண்டு, பெருமானார் (ஸல்) அவர்கள் சமூகம் கொண்டு வந்து, அண்மையிலிருந்த தோழர்களை நோக்கி ''ஓ குரைஷிக் குலத்தாரே! நான் இந்த அப்தை அல்லாஹ்வுக்காக வேண்டி நமது நபி (ஸல்) அவர்களுக்குப் பணிவிடை செய்வதற்காக விட்டுவிட்டேன். நீங்கள் இதற்கு சாட்சியாக இருங்கள்'' எனக் கூறி நாயகத்திருமேனி (ஸல்) அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

இதனைப் பாராட்டி இறைவன் திருமறையில் **'வல்லைலி'** என்ற அத்தியாயத்தில், அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களைப் புகழ்ந்து கூறியுள்ளான்.

அன்று முதல் பிலால் (ரலி) நபிகள் நாதருடன் வசித்து, அவர்களுக்குப் பணியாற்றி வந்தார். இனிமேல் மனநிம்மதியோடு அல்லாஹ்வை நினைப்பதும், பெருமானார் (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிவதையும் தவிர பிலாலுக்கு வேறு வேலையே கிடையாது என்றபடியே, பெருமானார் அவர்களின் இன்பத்திலும் துன்பத்திலும் பெருமளவு பங்கெடுத்துக் கொண்டார். தாமாகவே நபியுல்லாவின் அடிமையாகிவிட்டார்.

'அரபியர்களில் நானே முதல் முஸ்லிம்'. ரோமர்களில் ஷுஐபு முதல் முஸ்லிம். ஈரானியரில் ஸல்மான் முதல் முஸ்லிம். அபிஸீனியாவில் 'பிலால்' முதல் முஸ்லிம் என்பது எம்பெருமானர் (ஸல்) அவர்களின் திருமொழி.

மறைமுகமாக மக்களை இஸ்லாத்தின்பால் அழைத்துக் கொண்டிருந்த நபிபெருமானார் (ஸல்) அவர்களுக்கு, வெளிப்படை யாகப் பிரச்சாரம் புரியுமாறு இறைவனின் கட்டளை பிறந்தது. உடனே நபியுல்லாஹ் அவர்கள் கஃபதுல்லாஹ்வின் ஹரமுக்குள் சென்று, **''அல்லாஹ் ஒருவனே''** என்ற அறிக்கையை வெளியிடத் தொடங் கினார்கள். இந்தப் பிரச்சாரத்தினால் கஃபாவின் ஹரம் இழிவுக் குள்ளாகிவிட்டதாக 'குப்பார்'கள் (இஸ்லாமிய மறுப்பாளர்) கருதினார்கள். எனவே, அவர்கள் நாற்புறமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தாக்கத் தொடங்கினார்கள். அந்த வேளை 'ஹாரிஸ்பின் அபீஹாலா' (ரலி) அவர்கள் அண்ணலவர்களைப் பாதுகாக்க முன் வந்தார்கள். உடனே அன்னாரை நோக்கி எதிரிகளின் வாள்கள் வீசப்பட்டன நொடிப்பொழுதில் அந்த மனிதப் புனிதர் ஷஹீது (தியாக மரணம்) அடைந்தார்கள். முதன் முதல் புனித இஸ்லாத்திற்காகச் சிந்தப்பட்ட இரத்தம் இதுவேயாகும்.

எமன் நாட்டை சேர்ந்த அம்மார் பின்யாஸிர் என்பவர் முஸ்லிமானார். அவர் ஓர் அடிமை, அவருக்கு உதவி செய்வார் யாருமில்லை. குரைஷிகள் அவரை முழு வன்மையுடன் எதிர்த் தார்கள். நடுப்பகலில் அம்மாரை நெருப்பின்மீது கிடத்துவார்கள். நீரில் மூச்சுத் திணறும்படி மூழ்க வைப்பார்கள். இஸ்லாத்தை விட்டு விடும்படி கட்டளையிடுவார்கள். ஆனால், அவர் மனம் மாறவில்லை. ஒரு சமயம் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அந்தவழியாகச் செல்லும் போது, அவரைப் பார்த்து, அவர் கையில் தங்களின் முபாரக்கான கையை வைத்து ''நெருப்பே! நீ இப்றாஹீம் நபியிடம் நடந்து கொண்டதைப்போல், நீ குளிர்ந்து அம்மாருக்கு சாந்தியைக் கொடு''! என்றார்கள். உடனே அவர் நாயகமே, நான் நெருப்பில் குளிர்ச்சியைக் காண்கிறேன்'' என்றார். சில தினங்களுக்குப்பின் அவர் விடுதலை பெற்றார். இவர் முதுகில் நெருப்புத் தழும்புகளில் அடையாளங்கள் இறுதிவரை இருந்தன.

ஏழையாகவும் வெளியூர் வாசியாகவுமிருந்த இவரது பெற்றோரையும் சகோதரனையும் மக்காவாசிகள் இஸ்லாத்தை விட்டு



விடும்படி இம்சித்தார்கள். நெருப்பில் தள்ளினார்கள். சுடு மணலில் படுக்கவைத்தார்கள். பல மணி நேரம் நீரில் அமிழ்த்தினார்கள். தீனிலிருந்து மனம் மாறாத காரணத்தால் ஸுமையா என்னும் அவரது தாயாரை இரண்டு கால்களையும் இருபுறமும் இரண்டு ஒட்டகங்களுடன் சேர்த்துக்கட்டி அபூஜஹல் ஈட்டியால் குத்திக் கொன்றான். அவரது தகப்பனார் யாஸிர், சகோதரர் அப்துல்லாஹ் இருவரும் அந்தக் குப்பார்களால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்கள்.

முஸ்லிம் தியாகிகளுள் ஒருவரான ஹல்ரத் ஸுபைர் (ரலி) இஸ்லாத்தைத் தழுவியபோது, தம் சிறிய தந்தையால் இருட்டறைக் குள்ளே மூன்று நாட்கள் விட்டுப் பூட்டப்பட்டு, பசியாலும் தாகத்தாலும் வாடி வருந்தினார். அவர் தமது சரீரத்தில் பழுக்கக் காய்ச்சிய 'இரும்புக் கம்பிகளால் சூடு போடப்பட்டார். மற்றும் பலவாறு இம்சிக்கப்பட்டார். அப்போது அவர்''ஏ! என் சிறிய தந்தையே! நீ என்னை என்ன சித்திரவதை செய்தபோதிலும் என் மூச்சுள்ள வரைக்கும் இஸ்லாத்தில் இருந்தே தீருவேன்'' என்றார்.

## இஸ்லாத்தின் சோபிதம்

நபிகள் நாயகம் (ஸல்) அரபிய மக்களை அழைத்து, ''அஞ்ஞானத்திலிருந்து இஸ்லாமிய ஒளியின் பக்கம் வாருங்கள்! ஆத்ம வாழ்க்கையை அடையுங்கள்! மூட நம்பிக்கைகளைக் களையுங்கள்! பெண் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள்! பெண்களை அவமதிக்காதீர்கள், ஏழைகளையும் அடிமைகளையும் உங்களைப்போலவே கருதுங்கள், மனிதராகப் பிறந்தோரெல்லாம் சகோதரர்களே! மறு உலக வாழ்க்கை உண்டென்று நம்பி தீமையை அகற்றி நன்மையைச் செய்யுங்கள். இறைவனுடைய சட்டங்களுக்குக் கீழ்ப்படியுங்கள். மண்ணாலும், மரத்தாலும், செம்பாலும் அமைத்த உருவங்களை வணங்காதீர்கள். அன்புடையோனும் அருளாளனுமான அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். ஒழுக்க உலகில் பாலைவனமாக மாறிவிட்ட அரபிய நாட்டை ஆன்மீகப் பூங்காவாக மாற்றி அமையுங்கள்'' என்று கூறிய பொன் மொழிகளை செவிமடுத்த பலர் இஸ்லாத்தைத் தழுவினர்.

இஸ்லாத்தின் உயர்வைக் கண்டு பொறாமை கொண்ட மக்கா வாசிகள், நபி பெருமானாரை ஏமாற்ற முயன்று பல ஆசை

வார்த்தைகளை கூறினார்கள். தூது குழுக்களை அனுப்பினார்கள். அவைகள் ஒன்றுமே பயன்படவில்லை. அதற்கு மாறாக குரைஷிக் குடும்பத்தின் சிறந்த வீரர் ஹல்ரத் உமர் அவர்கள் முஸ்லிமாகி விட்டார்கள். இதைக் கண்ட குரைஷித் தலைவர்கள் பைத்தியம் பிடித்தோரைப்போல, கிளம்பிய ஒருவன், பெருமானார்மீது மண்ணை அள்ளி வீசினான், ஒருவன் அசுத்தமான பொருளை பெருமானாரின் வாசலில் போட்டான். ஒருவன் பெருமானாரின் பாத்திரங்களின் மீது கெட்ட வஸ்துக்களைப் போட்டான். உமையாபின் கஃபு (அடிமை பிலாலின் முந்திய எஜமான்) பெருமானார் முகத்தில் அசுத்தமான பொருளை எறிந்தார்.

ஒரு நாள் தொழுது கொண்டிருக்கும் சமயம், 'உக்பா பின் அபீமுசத்' என்பவர் பெருமானாரின் கழுத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டார். அதன் பளுவால் பெருமானாரின் கண்விழிகள் சிவந்துவிட்டன. இந்தக் கல்நெஞ்சர்கள் சில சமயம் கழுத்தை நெரிப்பார்கள். மூச்சுத் திணறிப் பெருமானாருக்கு கஷ்டம் உண்டாகும். ஒரு நாள் பெருமானார் நடந்து செல்லும்போது, இந்தப் பாதகர்கள் சூழந்து கொண்டு, பெருமானாரின் மேல் போர்வையால் அவர்களின் கழுத்தைச் சுற்றி முறுக்கினார்கள். அப்போது ஹல்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) ஓடிவந்து, ''இறைவன் ஒருவன் என்று சொல்லும் ஒருவரை நீங்கள் கொல்லத் தயார் ஆகினீர்களா'' என்று தடுத்தார்கள்.

உயர் குடும்பத்தார் இந்தப் பகைவரின் இன்னல்களில் இருந்து ஒருவாறு தப்பினார்கள். ஆனால், உதவியற்ற ஏழைகளும், குறிப்பாக அடிமைகளும், வெகு இலேசாகத் தாக்கப்பட்டார்கள்.

ஆரம்ப முஸ்லிம்களின் இத்தகைய துன்பங்களை அனுபவித்த ஆண்கள் பெண்களாகிய பெரும்பாலோரின் மனம் நெகிழும் சோகக் கதைகளை வரலாறுகளில் காணலாம்.

நாளுக்கு நாள் குரைஷியர்களின் கொடும் செயலின் நிமித்தம் துன்புறுத்தப்பட்ட முஸ்லிம்களை நபி பெருமானார் (ஸல்) மதீனா நகருக்கு இடம் பெயர்ந்து போகும்படி கட்டளையிட்ட பொழுது, அவர்கள் சரித்திரப் புகழ்பெற்ற 'ஹிஜ்ரத்' செய்தார்கள். நபி பெருமானாரின் கட்டளைக்குத் தலைசாய்த்து, மக்காவிலிருந்து மதீனாவுக்கு 'ஹிஜ்ரத்' செய்த முஸ்லிம்களெல்லாம் நடைமுறையில் செய்த அரிய பெரிய தியாகங்களில் எல்லாம் இது பெரிய தியாகம்.



இறைவனுக்காகவும், இறைவனுடைய தூதருக்காகவும், தம் தாய் நாட்டை, பிறப்பிடத்தை, தம் மனைவி மக்களை, தம் பெற்றோரை, சகோதர சகோதரிகளை, உறவு முறையாரை, அண்டை அயலாரை, நண்பர்களை, வீட்டை, சொத்துக்களை, எதிரிகளின் கொடுமைக்கு ஆளாகும் நிலைமையில் விட்டுவிட்டு, கைச் செலவுக்கும்கூட ஒன்றுமில்லாமல் சென்று, அகதியாக வசிப்பது என்றால், அது சாதாரணமாக எல்லோரும் செய்யக் கூடிய தியாகமல்ல. இத்தகைய அரிய தியாகிகளின் புனிதமான குழுவை, வேறு எந்த மதத்திலுமே, எங்குமே காண்பதரிது.

**(நபியே!) உம்மைச் சிறைப்படுத்தவோ, அல்லது உம்மைக் கொலை செய்யவோ, அல்லது உம்மை (ஊரை விட்டு) அப்புறப்படுத்தவோ நிராகரிப்போர் சூழ்ச்சி செய்து கொண்டிருந்த (நேரத்)தை நினைத்துப் பாரும். அவர்களும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர். (அவர்களுக் கெதிராக) அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தான். ஆனால், சூழ்ச்சி செய்வோரிலெல்லாம் அல்லாஹ் மிக்க மேலானவன்.** *(8.30)*

**நிராகரிப்போரின் சூழ்ச்சியை இழிவுபடுத்துவதற்காகவே நிச்சயமாக அல்லாஹ் (இவ்வாறு) செய்தான்.** *(8-18)*

நபிகள் நாயகமவர்கள் மக்காவிலிருந்து மதீனா சென்றார்கள்; முஸ்லிம்களும் அங்கு சென்றார்கள்; ஹல்ரத் பிலாலும் உடன் சென்றார். மதீனாவில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஆணும் பெண்ணும், சிறுவர் சிறுமிகளும் மகிழ்ச்சிக்குரிய வரவேற்புக் கொடுத்தனர், அஃது அங்கு ஒரு திருநாள்போல் காணப்பட்டது. சில தினங்களுக்குப் பின் கோமான் நபி (ஸல்) அவர்கள் அங்கு ஒரு பள்ளி வாசல் கட்டினார்கள். அங்கு முஸ்லிம்கள் அனைவரும் கூடி ஓரிடத்தில் இறைவணக்கம் செய்தார்கள். அந்தப் பள்ளி 'வாசலுக்கு, 'மஸ்ஜிதுன் நபவி' - (நபியின் பள்ளிவாசல்) எனப் பெயர்.

ஒவ்வொரு வேளையிலும் முஸ்லிம்கள் ஒன்றுகூடி திருநபி அவர்களைப் பின்பற்றித் தொழுகையை நிறைவேற்றி வந்தனர். ஆயினும் தொழுகைக்குரிய நேரம் சரியாகத் தெரியாததால், எல்லோரும் ஒன்றுபோல் வந்து ஒன்று சேருவதற்குச் சிறிது சிரமமாக இருந்தது. ஆதலால் அந்தச் சிரமத்தை அகற்றுவதற்கு ஏதேனும் பரிகாரம் செய்ய வேண்டும் என எல்லோரும் கருதினர். இதனைக் குறித்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் எண்ணமிருந்தது.

தொழுகைக்குரிய நேரம் வந்த உடன், ஒரு ஆளை வீடுகளுக்கு அனுப்பிச் சொல்லிவரச் செய்யலாமா? கிறித்தவர்கள் மணி அடிப்பதுபோல மணி அடிக்கச் செய்யலாமா? யூதர்கள் கொம்பு ஊதுவதுபோலச் செய்யலாமா? நெருப்பை வளர்த்து அழைக்கலாமா? என்பது போன்ற பலவித ஆலோசனைகள் இருந்து வந்தன. இந்தவித நிலைமையில் ஒவ்வொரு வேளைக்கும் பாங்கு சொல்லுவது போல ஹஸ்ரத் ஸெய்திப்னு தாபித் (ரலி) அவர்கள் கனா கண்டு, நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவித்தார்கள். இதைப்போல வேறு பல ஸஹாபிகளும் கனவு கண்டார்கள். இந்தமுறையை பெருமானா ரவர்கள் விரும்பி, அதைச் சப்தமிட்டுச் சொல்லும்படி ஹஸ்ரத் பிலாலுக்குக் கட்டளையிட்டார்கள். பாங்கு சொல்லும் முறை ஹிஜ்ரி முதலாம் ஆண்டிலே ஆரம்பமாயிற்று.*

பிலால் கோதுமை நிறங்கலந்த கருநிறம் உள்ளவர். ஆனால், அவரது உள்ளம் தூய்மையானது. கண்ணாடி போன்றது. கண்கள் சிவப்பு நிறமுள்ளவை. உயரமானவர், மெலிந்த உடல், தலையில் அடர்ந்த உரோமம்.

நபியுல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க பிலால் மக்களை தொழுகைக்கு அழைப்பதற்காக சத்தமிட்டு பாங்கு சொன்னார். அவருடைய குரல் வெகுதூரம் கேட்டது; இனிமையாகவும் இருந்தது. உள்ளத்தை உருக்கும் ''பாங்கு சத்தம்'' கேட்டவுடன் ஒரே இறைவனை வணங்குவோருக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாகிவிட்டது. ஆண்கள் தங்கள் வேலைகளை நிறுத்திவிடுவார்கள். ஆண்களும், பெண்களும், சிறுவரும் சிறுமியரும் பிலாலைச் சூழ்ந்து கொள்வார்கள். நாளாக நாளாக பிலால் பாங்கு சொல்லுகையில் வானத்தில் மணி ஓசை போன்று அவரது குரலின் அலைகள் அடுக்கடுக்காகப் பரவிவிடும்; அவரது பாங்கு அழைப்பானது, அதைக் கேட்போர் உள்ளத்தை அப்படியே ஆண்டவன் பக்கம் திருப்பி விடும்.

கொல்லன் கொல்லுலையில் பழுக்கக் காச்சிய இரும்பை அடிக்கிறான். தையல்காரன் துணி தைக்கிறான். மாணவன் படிக்கிறான். பிரயாணி வழி நடக்கிறான். பெண்கள் கோதுமை திரிக்கிறார்கள். நூல் திரிகிறார்கள் இன்னும் பல அலுவல்களில்

* பாங்கு சொல்லல் என்பதற்கு பாரசீகப் மொழியில் சத்தமிடல் என்றும், அரபி மொழியில் 'அதான்' அறிக்கையிடல் என்றும் பொருள்.



ஈடுபட்டிருக்கின்ற யாவரும் பாங்கு சத்தம் கேட்டவுடன், தமது வேலைகளை அப்படி அப்படியே நிறுத்திவிடுகிறார்கள். எங்கும் நிசப்தம். எல்லோரும் அல்லாஹ்வின் பெயரைக் கேட்டு ஆனந்திக்கிறார்கள், அமைதி நிலவுகிறது. அல்லாஹ் ரஸூலின் திருநாமம் உள்ளத்தையும் துளைத்துக் கொண்டு ஊடுருவிப்பாயும். பாங்கு முடிவுற்றதும், எல்லா மக்களும் வந்தவுடன் பிலால், நபிகள் முன் 'அஸ்ஸலாத்து யாரசூலுல்லாஹ்' (தொழுகைக்கு எல்லாம் தயாராயிருக்கிறது) என்று அறிவிப்பார். ஸஹாப்பாக்கள் வரிசை வரிசையாக மஸ்ஜிதுன் நபவியில் நின்று நபி பெருமானார் (ஸல்) அவர்களின் தலைமையில் தொழுகை நடைபெறும். பின்னர் எல்லோரும் மகிழ்ச்சியோடு இந்த வாய்ப்பை நினைத்து நினைத்து அல்லாஹ்வையும், அவனது ரஸூலையும் வாழ்த்தித் துதி Ëயா ïïÈõÛ **'ஸல்லல்லாஹு அலாமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம்'.**

## மார்க்கத்தின் மாண்பு

இமாம் ஷாபிஈ? (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:-

''நான் ஹஜ்ஜுடைய காலத்தில் மக்காவிலிருக்கும்போது, ஒருநாள் நஸாராக்களில் 'அஷ்பகு' என்ற பெயருடைய ஒரு மனிதர் கஃபாவை வலம் வருவதைக் கண்டு, அவரது மூதாதைகளின் மார்க்கத்தை விட்டு நீங்கி புனித இஸ்லாத்தைத் தழுவிய காரணம் யாது? என்று வினவிய போது, அவர் பின்வருமாறு கூறினார்:-

''என் மூதாதைகளின் மார்க்கத்தை விடவும், தீனுல் இஸ்லாம் எனும் இந்த மார்க்கத்தை நான் சிறப்பாகக் கண்டேன். அதாவது:- நான் சிலரோடு கப்பல் பிரயாணம் செய்த காலத்தில், நாங்கள் சென்று கொண்டிருந்த கப்பல் புயலில் சிக்கி உடைந்து சின்னா பின்னமாகிவிட்டது; அந்த ஆபத்தில் நாங்கள் அனைவரும் தப்ப வழியின்றி மரண வாசலில் இருந்தோம்; எனக்கு மாத்திரம் ஒரு பலகை கிடைத்தது; அதில் வசதியாக ஏறிக்கொண்டேன்; அந்தப்பலகை அலையின் உதவியால், மெல்ல மெல்லச் சென்று, மனித சஞ்சாரமற்ற ஒரு தீவில் என்னைச் சேர்த்தது. நான் அந்தப் பலகையை விட்டும் கீழே இறங்கி தீவுக்குள் நுழைந்து, சுற்றிப் பார்த்தேன். ஆ! என்ன ஆச்சரியம்! அங்கு நான் என்றுமே கண்டிராத மதுரம் மிகுந்த மிருதுவான கனிகளையுடைய பல மரங்களையும், தெள்ளத்தெளிந்த தண்ணீர்

ஊற்றுக்களையும் பார்த்து மகிழ்ச்சியோடு, பழங்களைப் புசித்தும், தண்ணீரை அருந்தியும், எனது ஊர் பிரயாணத்திற்கு வசதி கிடைக்கும்வரை அந்தத் தீவிலேயே இருக்க வேண்டும் போலும் என்ற எண்ணத்தோடு, சுற்றித் திரிந்தேன். சூரியன் மறைந்து இரவு ஆனதும், காட்டு மிருகங்கள் துன்பம் தருமோ? எனப் பயந்து, ஒரு பெரிய மரத்தின் மீது ஏறி சற்று நேரம் தூங்கினேன். நடு இரவானதும் அங்கு ஓர் மிருகத்தைத் தண்ணீரிலிருந்து வரக்கண்டேன். அது:-

**"லாஇலாஹ இல்லல்லாஹுﷻல் கப்பாறு, முஹம்மதுர் றசூலுல்லாஹின் நபிய்யில் முக்தாறு."** ("பிழைகளைப் பொறுக்கும் அல்லாஹ்ﷻவைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு நாயன் இல்லை. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்ﷻவால் தேர்ந் தெடுக்கப்பட்ட தூதராவர்.")

என்ற, இந்தக்கலிமாவை இனிமையான தொனியில் மொழிந்து கொண்டே கரையில் சேர்ந்தது. அதை நான் பார்த்தபோது, அது நீ விழுங்கிப் பறவையின் தலை போன்றும், மனிதனின் முகத்தைப் போன்றும், ஒட்டகையின் கால்கள் போன்றும், மீனின் வாலை ஒத்தும் இருந்தது. அது எனக்குத் தீங்கு செய்யும் எனப்பயந்து மரத்திலிருந்து கீழே இறங்கி வெருண்டு ஓடினேன். அந்த மிருகம் என்னைப்பார்த்து, "ஓய் மனிதரே! 'கிப் வ இல்லா ஹலக்த' நின்றுவிடு, இன்றேல் உன்னை அழித்துவிடுவேன்" என்றது. உடனே நின்றுவிட்டேன். அது என்னை நோக்கி, "நீ யார்? நீ பின்பற்றும்மார்க்கம் யாது?" என வினவிற்று. அதற்கு நான் நஸாராவைச் சேர்ந்தவன். என் மார்க்கமும் "நஸாராவின் மார்க்கம்" தான் என்றேன். அப்போது அது "ஏ! நஷ்டவாளனே! துன்பத்தில் நின்றும் நீ தப்ப வேண்டுமாயின், இப்போதே அல்லாஹ்ﷻவின் மார்க்கத்தில் சேர்ந்துகொள். நீயோ முஃமினாகிய ஜின்கள் குடியிருக்கும் இடத்திற்கு வந்திருக்கிறாய்" என்றது. அதற்கு நான்: "அந்த மார்க்கத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது; அதை விளக்கித் தந்தால் நல்லது" என்று கூற, அதற்கு அந்த மிருகம் என்னைப் பார்த்து:-

"அல்லாஹ்ﷻத் தஆலா ஒருவனே உண்மையான நாயன். எப்படிப்பட்டவன் என்று மட்டிட்டுக் கூற யாராலும் முடியாது. அவனுக்கு ஒப்பானவன் யாருமில்லை. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்ﷻவின் படைப்புகளில் மிக மேன்மையும் சிறப்பும் பெற்ற திருத்தூதராவர். அவர்கள் கொண்டுவந்த மார்க்கம் உண்மை



என்று உறுதி கொண்டு **"அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹுﷻவ அஷ்ஹது அன்ன முஹம்மதுர் றசூலுல்லாஹி"** என்ற திருக்கலிமாவைச் சொல்வீராக!" என்றது. நான் அந்தக் கலிமாவை மொழிந்து, புனித இஸ்லாத்தைத் தழுவினேன். அப்பால் அந்த மிருகம், "இப்போது நீவிர் இந்தத் தலத்திலேயே இருக்க விரும்பு கிறீரா? அன்றி உமது ஊருக்குப் போக விரும்புகிறீரா?" என்றது. அதற்கு நான், "இப்போது என் ஊருக்குப் போகவேண்டும்", என்றேன். அந்த மிருகம், 'ஒரு கப்பல் வருமளவும் என்னை அந்தத் தலத்திலேயே இருக்கச்செய்து, கடலில் இறங்கி கொஞ்ச தூரத்தில் போய் மறைந்தது.

அடுத்த நாள் காலை ஒரு கப்பல் வரக்கண்டு பக்கத்திலுள்ள மணல் மேட்டின்மீது ஏறி, என் தலையில் கட்டியிருந்த துணியை எடுத்து அடையாளமாக வீசினேன். அதை அந்தக் கப்பல் அதிகாரிகள் கண்டு, தீவை அடுத்துக் கப்பலைக் கரையில் கொண்டு வந்தார்கள். நானும் போய் அந்தக் கப்பலை அடுத்தேன். என்னைக் கப்பலில் ஏற்றிக் கொண்டார்கள். அப்பால், நான் தனியாக இந்தத் தீவிற்கு வந்த வரலாறுகளை கப்பல் அதிகாரிகள் கேட்க, நான் நிகழ்ந்த சம்பவங்கள் யாவையும் கூறினேன். அதைக் கேட்ட அதிகாரிகள் முதல் மற்றும் நஸாராக்கள் அனைவரும் புனித இஸ்லாத்தைத் தழுவினர்" எனக் கூறி முடித்தார்.

இறைவா! எங்களைத் தீனுல் இஸ்லாம் என்னும் புனிதமான பாதுகாப்பு அரணுக்குள் என்றென்றும் நிலைத்திருக்கச் செய்வாயாக. (ஆமீன்)

## 4-வது ஹத்யா
## ஸஹாபாக்களை இகழாதிருத்தல்

وَالسَّابِقُوْنَ الْاَوَّلُوْنَ مِنَ الْمُهٰجِرِيْنَ وَالْاَنْصَارِ وَالَّذِيْنَ
اتَّبَعُوْهُمْ بِاِحْسَانٍ ۙ رَّضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ ،

(மக்கா வாசிகளாகிய) "முஹாஜிர்களிலும் (மதீனா வாசி களாகிய) அன்ஸார்களிலும் எவர்கள் (இஸ்லாத்தில்) முதலாவதாக முந்திக் (கொண்டு, விசுவாசங்) கொண்டார்களோ? அவர்களையும்,

**நற்கருமங்களில் (மெய்யாகவே) இவர்களைப் பின்பற்றியவர்களையும் பற்றி அல்லாஹ் திருப்தி அடைகின்றான். இவர்களும் அல்லாஹ்வைப் பற்றி திருப்தி அடைகின்றனர்.''**

'ஸஹாபாக'க்கள் என்பவர் நபிகள் நாதரை நேசித்து, அவர்களோடு நேருக்கு நேரில் அளவளாவி ஒத்துழைக்கும், அன்னாரைப் பின் பற்றியும், அவர்களின் சமூகத்தில் வீற்றிருந்தும், நற்பேறு பெற்றவர் களாவர். அவர்களுக்குப் பின் மேற்கூறிய ஸஹாபாக்களுடன் பழகி, அவர்களின் போதனைகளை ஏற்று நடந்தவர்கள் 'தாபியீன்' எனப் படுவார்கள்; ஸஹாபாக்களோடு பழகிய தாபியீன்களைக் கண்டு பழகி, அவர்களின் சொல் செயல்களில் ஈடுபட்டுப் பின்பற்றியவர்கள் 'தபஅத்தாபியீன்' எனப்படுவார்கள். இன்னவர்களைக்கொண்டு அல்லாஹ் பொருந்திக் கொண்டது போல், அன்னவர்களும் அல்லாஹ்வைக் கொண்டு பொருந்திக் கொண்டார்கள்.

**''அன்றி சதா நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும், சுவனபதிகளை இவர்களுக்கென, சித்தப்படுத்தி வைத்திருக்கின்றோம்; அவற்றிலேயே, அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள்; இத மகத்தான பெரும் பாக்கியமாகும்.''** *(9:100)*

இவர்களுக்கு சுவனபபதியிலும்கூட, தனி இன்ப வாசத்தலம் ஒதுக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இந்த மூவகைக் கூட்டத் தாரையும், அவர்களைத் தொடர்ந்த பெரியார்களையும், நல்லோர் களையும் நாம் பின்பற்ற வேண்டும் என்பதே மேற்கண்ட ஆயத்தின் கருத்து.

''எனது ஸஹாபாக்கள் நட்சத்திரங்கள் போன்றவர்கள்; அன்னாரில் யாரைக்கொண்டு பின்பற்றிய போதிலும் நேர்வழி பெறுவீர்கள்.''

*(நா-வா)*

## ஸுன்னத் வல் ஜமா அத்தின் விளக்கம்

''இஸ்ரேலர்கள் எழுபத்திரண்டு கூட்டங்களாகப் பிரிந்தார்கள். எனக்குப் பின் என்னுடைய உம்மத்துகள் எழுபத்து மூன்று கூட்டமாகப் பிரிவார்கள்; அதில் ஒரு கூட்டத்தார் மாத்திரம் சுவர்க்கவாசிகள், மற்றைய எழுபத்திரண்டு கூட்டத்தினரும், வழி தவறியவர்களாவர்'' என நபிகள் பெருமானார் (ஸல்) அருளியபோது, அண்மையிலிருந்த ஸஹாபாக்கள்:- ''அல்லாஹ்வின் திருத்தூதரே! அந்த ஒரு கூட்டத்தினர்



யார்? என்பதை எங்களுக்குத் தெரிவியுங்கள்'' எனக் கேட்க, நாயகம் (ஸல்) அவர்கள், ''நானும் என்னுடைய ஸஹாபாக்களும் நடக்கின்ற வழியைப் பின்பற்றி நடப்பவர்கள்தான் அந்தக்கூட்டத்தினர்'' எனக் கூறினார்க்ள. இந்தக்கூட்டத்தினரையே நாம் சுன்னத்வல் ஜமா அத்' என்ற பெயரோடு அழைக்கிறோம். இவர்களின் உறுதியான கொள்கை களாவன:-

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொல், செயல், பழக்க வழக்கங்களைப் பின்பற்றியும், அவர்கள் சமூகத்தில் தங்களது அதிகமான காலத்தைக் கழித்த அவர்களின் தோழர்களான நான்கு யார்கள். (சுவனபதியைக் கொண்டு நன்மாராயம்பெற்ற) அஷ்ரத்துல் முபஷ்ஷிரீன்கள். ஸஹாபாக்கள், தீனுக்காக உயிர்த் தியாகம் செய்த ஷுஹதாக்கள். இன்னும் பன்னிரண்டு இமாம்கள். அவர்கள் வருமாறு:- *1.* இமாம் அலி (ரலி) *2.* ஹஸன் *3.* ஹுஸைன் *4.* ஜய்னுல் ஆபிதீன் *5.* முஹம்மது பாகிரு *6.* ஜஃபர்ஸாதிக் *7.* மூஸல்காஸிம் *8.* மூஸர்ரிளா *9.* ஜவாதுத்தகிய்யி *10.* நகிய்யி *11.* அஸ்கரிய்யி *12.* இமாம் மஹ்திய்யி (ரலி-மா) ஆகியோர்களாவர். இந்தப் பன்னிருவரை மட்டும் ஷியாக்கள் கொண்டாடுகின்றனர்.

மதஹபுக்குரிய, *1.* ஹனபி (ரஹ்) *2.* மாலிக்கி (ரஹ்) *3.* ஷாபிஈ (ரஹ்) *4.* ஹன்பலி (ரஹ்) இந்நால்வருமாவார்கள். இமாம் மாலிகி (ரஹ்) அவர்களிடம், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், மாணவராக இருந்தார்கள். அதுபோலவே, இமாம் ஹன்பலி (ரஹ்) அவர்கள், இமாம் ஷாபி (ரஹ்) அவர்களிடம் கல்வி பயின்று இருக்கிறார்கள். 'அஇம்மத்துல் முஜ்தஹதீன்' எனப்படுவோர் நான்கு இமாம்களும், அவர்களுக்கு அடுத்து வந்த, சுயமாகச் சட்டம் இயற்றும் மார்க்க நிபுணர்களான கல்விக்கடல், இமாம் 'கஸ்ஸாலி' (ரஹ்) மற்றும் இமாம்களைப்போன்ற மேதைகள். அடுத்து விலாயத்துப்பெற்ற கௌது, குதுபு வலிமார்கள் (இவர்கள் போன்று பெண்களிலுமுண்டு) இன்னும் இறைவனருள் பெற்ற ஞானவான்கள், உலமாக்கள், ஸித்தீகீன்கள், ஸாலிஹீன்கள், ஆரிபுகள் முதலானோர்களும், அன்னார் பின்பற்றிய வழியைப் பின்பற்றியும், அவர்களின் போதனை களுக்குட்பட்டு, குர்ஆன், ஹதீது, இஜ்மாஃ, கியாஸ் ஆகிய இந்த நான்கு நியமனங்களை ஏற்றும், நேர்மையாக நடப்பவர்களே 'சுன்னத்வல் ஜமா அத்'துகளாவார்கள்.

நமக்கு முக்கியம் வாய்ந்த நான்கு இமாம்களுடைய மதஹபுகளில், எந்த மதஹபுடைய இமாமைப் பின்பற்றியவராயினும் சரி, அந்த மதஹபுகளின் சில சட்டதிட்டங்கள் வித்தியாசமிருப்பதை மூலக் கொள்கையிலுள்ள வித்தியாசமாகக் கருதக் கூடாது. ஒருவருடைய 'ஈமான்' (நம்பிக்கை) நிலைப்படுவதும், நிலைபடாமல்போவதும் கொள்கை வித்தியாசத்தினாலன்றி சட்டதிட்டங்களின் வித்தியாசத்தினாலல்ல என்பதை உணர வேண்டும்.

மேலே கூறப்பட்ட மகான்களைப் பற்றி இறைவசனம் பின்வருமாறு விளக்கம் தருகின்றது:

**''நபிமார்கள் அஸ்ஹாபுகளாகிய ஸித்தீகீன்கள், இன்னும் ஜிஹாது செய்த ஷுஹதாக்கள், இன்னும் அல்லாஹ்வுக்குப் பயந்து தக்வா செய்த முஃமின்களாகிய ஸாலிஹீன்கள் இவர்கள் எல்லோர் மீதும், நாம் எல்லா நிஃமத் (பாக்கியம்)களையும் நிரப்பமாக்கி வைத்தோம்.''**

ஆகவே இந்த மேம்பாடுகளைப் பெற்ற முஃமினாகிய ஸாலிஹீன்கள் தான், அல்லாஹ்வின் கட்டளைப்படி தக்வாச் செய்து, அவனின் நன்மாராயம் பெற்றவர்களான வலிமார்களாகவும், குதுபுகளாகவும் விளங்குகிறார்கள். இவர்களைக்கொண்டு ஆண்டவன் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்துகளை 'குப்ர்', 'ஷிர்கு' இவைகளினால் ஏற்படவிருக்கும் வேதனைகளை விட்டும் காத்து, நேரான பாதையில் நடத்துகின்றான்.

**'உலமா உ உம்மதீ க அன்பியா இ பனீ இஸ்ராயீல்'** எனது உம்மத்துகளிலுள்ள அறிவாளி (ஆலிம்)கள், பனீ இஸ்ராயீல் கூட்டத்திலுள்ள நபிமார்களைப் போலாவர். (இன்னும்)

**'அல் உலமா வரதத்துல் அன்பியாஃ'** என் உம்மத்துகளிலுள்ள அறிவாளிகள் நபிமார்களுடைய வாரிசுகளாவர்.

முற்காலத்தின் நபிமார்கள் எவ்வாறு மக்களை நேர்வழியில் ஈடுபடச் செய்தார்களோ. அவ்வாறே அவர்களிடத்திலிருந்து உம்மத்துகளை நேர்வழியிலாக்கும் பொறுப்புடையவர்கள்தான் 'வரதத்துல் அன்பியாஃ' ஆகியவர்களாக இருக்கிறார்கள்.

அவ்வாறிருக்க, இந்தக்கால மாந்தர்கள் அவர்களின் மகத்துவத்தை உணர்வதுமில்லை; அவர்களுக்கு மரியாதை



கொடுப்பது மில்லை. இதற்குக் காரணம், கடமையாக்கப்பட்ட போதிய மார்க்கக் கல்வி இல்லாததால்தான். அவர்களின் சொற்களுக்கு மாற்றமாக விதண்டாவாதம் பேசித் திரிகின்றனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அஸாகிர்-இப்னு மஸ்ஊத் (ரலி) அறிவிக்கிறார்கள்:-

உலகத்தில் அவ்லியாக்கள், ஸாலிஹீன்கள் இருந்து கொண்டே இருப்பார்கள். ஒவ்வொரு நபிமார்களின் இருதயத்தைக் கொண்ட வலியுல்லாக்களாக 1,24,000-ம் அவ்லியாக்களிருப்பார்கள். இவர்களுள் 300 நுகபாக்கள், 70 நுஜபாக்கள், 40 அப்தால்கள், 10 அக்யார்கள், 7 உறபாக்கள், 5. அன்வார்கள், 4 அவ்தாதுகள், 3. முக்தாருகள், 2. குதுபுகள், 1 கவ்து மாவார்கள். இவர்களில் ஒருவர் மரணித்து விட்டால், அதற்குக் கீழ் பதவியிலுள்ளவரை அந்த மேல் பதவிக்குக் கொண்டுவரப்படும். நபி ஆதம் (அலை) அவர்களின் இருதயத்திற்குச் சமமான முன்னூறு பேர்களில் ஒருவர் குறைந்தால், முஃமின்களில் ஒரு ஸாலிஹானவரை அதற்குப் பகரம் சேர்க்கப்படும்.

''அல்லாஹ்வுத் தஆலா இவர்களுக்காகவே மழையைப் பெய்விக்கிறான்; புல்பூண்டுகளை முளைப்பித்து செழிப்பிக்கச் செய்கிறான்; துன்பம் துயர்களை அகற்றுகிறான்.'' எனப் பெருமானார் (ஸல்) கூறியபோது, அண்மையிலிருந்த அப்துர் ரஹ்மான் இப்னு மஸ்ஊது (ரலி) எழுந்து நின்று, ''அல்லாஹுவின் திருத்தூதரே! அவர்களுக்காகவே ஆக்குகிறான் எனக் கூறுகின்றீர்களே! அதன் விளக்கம் என்ன?'' என்று வினவியபோது, நபிபெருமானார் (ஸல்) அவர்கள்:-

''நான் சொல்லிய அவர்கள், என்னுடைய் உம்மத்துகள் அதிகப்படுவதற்கு துஆச் செய்வார்கள். அல்லாஹ் அவர்களின் துஆவின் பொருட்டு, உம்மத்துகளை அதிகப்படுத்துவான்; மனிதர்களுக்கிடையில் தீமைகள் அதிகமானால், அவர்கள் மீது (பதுஆ) கெடுதியைக் கொண்டு கேட்பார்கள்; அல்லாஹ் அவர்களை அழித்துவிடுவான். இன்னும் மனிதர்களுக்கு மழை இல்லாத போது, அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வார்கள்; அல்லாஹ் அவர்களின் பிரார்த்தனைக்கிணங்க மழையைப் பெய்வித்து, பூமியைச் செழிப்பிக்கச் செய்வான்; அவர்களின் உதவியால் அல்லாஹ் எல்லா நோய் நொம்பலங்களையும் அகற்றிவைப்பான்'' என்று கூறினார்கள்.

எடுத்துக்காட்டாக:

## கவ்து நாயகத்தின் சிறப்புகளில் ஒன்று

ஷெய்கு இப்னு ஹஸனுல் பக்தாதீ (ரஹ்) கூறுகிறார்கள்:

கவ்துல் அஃலம் முஹ்யித்தீன் அப்தல் காதிரு ஜீலானி (ரலி) அவர்களின் பணிவிடையில் நான் சிலகாலம் இருந்தேன். ஓரிரவு யாதாவதொரு நாட்டம் (ஹாஜத்து) அவர்களுக்கு நேரிடுமா? என்று வழிபார்த்தவனாக விழித்திருந்தேன். அன்று 553-ம் வருஷம் ஸபர் பிறை 3-வது இரவாகும். அந்த இரவில் தங்களுடைய வீட்டை விட்டும் வெளியே வந்தார்கள். அவர்களைக் கண்டதும் நான் கேத்தலை எடுத்துக் கொடுத்ததற்கு அவர்கள் அதை வாங்கவில்லை. மதரஸாவின் வாயிலருகே செல்லவும், மூடப்பட்டிருந்த கதவு தானாகவே திறந்தது, உள்ளே சென்றார்கள். என்னை அவர்கள் அறிய மாட்டார்கள் என்று எண்ணி நானும் அவர்களைப் பின் தொடர்ந்தேன். வெளியில் சென்று கொஞ்ச தூரம் நடந்தபின், பக்தாத்தின் கோட்டை வாசலும் திறந்தது. அவர்களும் நானும் வெளியில் வந்தோம். கதவு அடைபட்டது. அப்பால் வெகுதூரம் நடந்தபின் எனக்குத் தெரியாத ஓர் ஊரில், ஓர் தலத்தில் நாங்கள் சேர்ந்து விட்டோம்.

அங்கு முஸாபர் கானாவைப்போன்று ஓர் கட்டிடம் இருந்தது. அதில் அவர்கள் நுழைந்தார்கள், அங்கே ஆறு பேர்கள் இருந்தனர். அவர்கள் ஷெய்கு அவர்களுக்கு, மரியாதையடன் ஸலாம் சொல்லி சமீபம் வந்தனர். நான் ஒரு தூணுக்கருகே ஒதுங்கி நின்றேன். அங்கு ஒரு பக்கத்தில் முணங்கும் சப்தம் கேட்டது, சற்று நேரத்திற்குள்ளாக அந்த முணக்கம் நின்றுவிட்டது. உடனே அந்தப் பக்கமாக ஓர் மனிதர் சென்று, தன் தோளில் ஒரு மனிதரைச் சுமந்துகொண்டு செல்கிறார். அடுத்து ஒருவர் தலைவிரி கோலத்துடன் மீசை நீண்டவராக கவ்து நாயகம் முன்வந்து, பணிவுடன் அமர்ந்தார். ஷெய்கு அவர்கள் ஷஹாதத்துக் கலிமாவை அவர் ஓதும்படி செய்து, தலை ரோமத்தையும் மீசை ரோமத்தையும் நறுக்கச் செய்து, அவருக்கு ஒரு வேட்டியை உடுக்கத்தந்து 'முஹம்மது' என்ற பெயரை சூட்டி, மற்றவர்களைப் பார்த்து ''இவர் அந்த இறந்து போனவருக்குப் பகரமாவார்.'' இவ்வாறு என்னை ஏவப்பட்டுள்ளது'' என்று கூறினார்கள்.



இதனைக் கேட்ட மற்றவர்கள் ''ஸம்அன் வதாஅதன்' தங்களுடைய சொல்லுக்கு நாங்கள் வழிப்பட்டோம்'' என்றனர்- பின்னர் அவர்களை விட்டும் ஷெய்கு அவர்கள் பிரிந்தார்கள், நானும் அவர்களைத் தொடர்ந்தேன். கொஞ்ச தூரம் நடந்த பின் பக்தாதுடைய வாசலின் முன் வந்துவிட்டோம். முன்போலவே கதவு திறந்து மூடியது. அடுத்து மதரஸாவின் வாசலை நெருங்க ..,தன் கதவும் திறந்தது. அவர்கள் உள்ளே சென்றார்கள் நான் ஒதுங்கிவிட்டேன்.

அன்று (வெள்ளிக்கிழமை) காலைப் பாடம் மனனம் செய்வதற்கு உட்கார்ந்தேன். இரவு நடந்த சம்பவம் எனக்கு அதிர்ச்சியைத் தந்து கொண்டிருந்ததால் ஓதுவதற்கு நாவெழவில்லை. ஷெய்கு அவர்கள் அங்கு வந்து, என் நிலைமையைப் பார்த்து, ''மகனே! ஓது!! என்மீது யாதொரு தவறுமில்லை.'' என்றார்கள். நான் அவர்களிடம் பிரமாணம், செய்து இரவு நடந்தவற்றை விளக்கும்படி வேண்டினேன். அதற்கு அவர்கள் ''நீர் புகுந்த ஊராகிறது நஹாவந்து. அதில் அல்லாஹ் அவர்களைக்கொண்டு உலகத்தைக் காப்பாற்றும்படியான நான்கு அவ்தாதுகள் இருக்கின்றார்கள். நீர் கண்ட ஆறுபேரும் சங்கையான உறபாக்களாகும். முணக்கத்தில் கிடந்தவர், அந்த உறபாக்களில் ஏழாவதானவர். அவர் சுகக் குறைவாக இருந்து மவுத்து நெருங்கிய போது, அவருக்காக நான் அங்கு ஹாஸிறானேன். தோளில், மரணித்தவரைச் சுமந்து கொண்டு போனவர் கிளுரு நபியாவார். அவரை நல்லடக்கம் செய்வதற்குக் கொண்டு சென்றார். என்முன் வந்திருந்து கலிமா மொழிந்தவர் 'கிஸ்தந்தீனிய்யா'விலுள்ள ஓர் 'நஸாரா'. ஆனால் அவர் சத்தியவான். அவரை இஸ்லாத்தில் சேர்த்து, அந்த மவுத்தானவருக்குப் பகரமாக ஆக்கும்படி எனக்கு அல்லாஹ்வினுடைய கட்டளை உண்டானது; அவ்விதம் செய்துவிட்டேன். அவரும் அவர்களில் ஒருவராகி விட்டார்'' என்ற விபரத்தை எனக்குத் தெரிவித்து, தான் ஹயாத்தாக இருக்கும்வரை இந்தச்சம்பவத்தை யாரிடமும் தெரிவிக்கக் கூடாது என்றபடி உறுதி மொழி வாங்கினார்கள். என்றவாறு 'ரலியல்லாஹுத் தஆலா அன்ஹு'.

(குலாஸ்துல் மபாகிரு)

***''பிஹிம் யத்பஉல் பலாஉ அன் ஹாதியில் உம்மதி''*** ''அவர்களைக் கொண்டு, இந்த உம்மத்துடைய பலாய்கள் அகற்றப்படும்.'' இந்த மேன்மை மிக்க ஹதீதிற்கு இபுனு உமர் (ரலி) அவர்கள் வியாக்கியானம் தருவதாவது:- ஒரு ஸாலிஹான மனிதன் இருக்கும் ஊரில், அவனுடைய அண்டை அயலில் நூற்றுக்கணக்கான வீடுகளில்

அல்லாஹ் தன் கோபத்தால் இறக்க இருக்கும் நோய்நொடிகளை, அந்த ஸாலிஹான மனிதனுக்காக நிறுத்தி வைப்பான்; இதற்கு ஆதாரமாக அல்லாஹ் கூறுகிறான்:-

**அல்லாஹ் மனிதர்களில் தீங்கு செய்யும் சிலரை, சில மனிதர்களைக் கொண்டே தட்டிவிக்காவிட்டால் பூமி பஸாதாகி (அதிலுள்ள புற்பூண்டு உயிரினங்களெல்லாம்) அழிந்தே போயிருக்கும். ஆயினும்; நிச்சயமாக அல்லாஹ் உலகத்தார் மீது கருணையுடையோனாக இருக்கின்றான்.**

*(2-251)*

அல்லாஹ் நம்மை மகத்துவமிக்க பெரியார்களுக்கு வழிபட்டு நடப்பதற்கான நேர் வழியைத் தந்து, இறுதிவரை சுன்னத் வல் ஜமா அத் கொள்கைகளையே பின்பற்ற அறிவையும் ஆற்றலையும் தந்தருள் வானாக. (ஆமீன்)

## வழிதவறிய எழுபத்திரண்டு கூட்டத்தின் விளக்கம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளியபடி, எழுபத்து மூன்று கூட்டத்தில், சுன்னத் வல் ஜமா அத் நீங்கலாக, மற்ற எழுபத்திரண்டு கூட்டத்தினரும், ஆரம்பத்தில் ஆறு மதுஹபினர்களாக இருந்தனர். இந்த ஆறில் ஒவ்வொன்றும் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரிந்ததினால் அவர்கள் எழுபத்திரண்டு கூட்டத்தினர்களாக ஆயினர். அந்த மதுஹபு களின் விளக்கமும் கொள்கையும் பின்வருமாறு:-

***1. ராபிளிய்யா 2. காரிஜிய்யா 3. ஜபரிய்யா 4. கதரிய்யா 5. ஜஃஹைமிய்யா 6. மர்ஜிய்யா*** என்ற ஆறும் ஆகும்.

ராபிளிய்யா, காரிஜிய்யா, ஜபரிய்யா என்ற இந்த மூன்று கூட்டத் தார்களும் பொதுவாக ஷீயா என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர்.

1. ராபிளிய்யா என்ற மதுஹபில் நின்றும் பிரிந்த பன்னிரண்டு கூட்டங்களாவன:

*1. அலவிய்யா 2. பதாஇய்யா 3. ஷீய்யா 4. இஸ்ஹாகிய்யா 5. ஸெய்திய்யா 6. அப்பாஸிய்யா 7. இமாமிய்யா 8. நாவிஸிய்யா 9. முதனாஸிகிய்யா 10. லாஇனிய்யா 11. ராஜிஇய்யா 12. முதராபிஸிய்யா* எனப்படும்.



இவர்களின் ஏகோபித்த கூற்றாவது: தராவீஹ் தொழுகை சுன்னத்தில்லை. தொழுகைக்கு இமாம் ஜமாஅத்து சுன்னத்தில்லை. ஒளு செய்யும்போது தலையில் மஸ்ஹு செய்தல் ஜாயிஸ் இல்லை. அதோடு அபூபக்கர், உமர், உதுமான் (ரலி) இந்த மூன்று கலீபாக்களைப் பற்றி அவதூறும் கூறுவர். இவர்களுக்கிடையில் சில செயல்களில் வேறுபட்ட அபிப்பிராயத்தினரும் உண்டு. அதாவது:- அலவிய்யாக்கள் அலீ (ரலி) அவர்களை நபி என்று கூறுகிறார்கள். பதா இய்யாக்கள், நபிப் பட்டத்தில் அலீ (ரலி) அவர்களுக்கும் பங்கு உண்டு என்கின்றனர்.

2. ***காரிஜிய்யா*** இந்த மதுஹபில் பிரிந்த பன்னிரண்டு கூட்டங் களாவன:-

*1. அஸ்ரகிய்யா 2. இபாளிய்யா 3. ஸஃலபிய்யா 4. ஹாஸிமிய்யா 5.கலபிய்யா 6. கூஸிய்யா 7. கன்ஸிய்யா 8. ஷிம்ராகிய்யா 9. முஃதஸிய்யா 10. மைமூனிய்யா 11. மஹ்கமிய்யா 12. அக்னஸிய்யா* எனப்படும்.

இவர்களின் ஏகோபித்த கூற்றாவது:- ஜமா அத்துத் தொழுகை உண்மை இல்லை; கிப்லா உடையவர்கள் பாவத்தைக் கொண்டு காபிராவார்கள். அநீதியுடைய அரசனுக்கு விரோதம் செய்து விலகுவது நலம் என்பதாம். இவர்களிலும், சில விகற்பமான கருத்தையுடையவர்கள் உண்டு. அவை:- 'கன்ஸிய்யாக்கள்' ஸகாத்து பர்ளு அல்ல என்றும், 'முஃதஸிய்யா'க்கள் தீமையானது அல்லாஹ் வின் நாட்டத்தைக் கொண்டல்ல என்றும், பாஸிகீன்களுக்குப் பின்னால் தொழுவது ஆகுமானதல்ல என்றும் கூறுவதோடு நபி பெருமானாரின் ஸபாஅத்து அவ்லியாக்களின் கராமத்து இவை களையும் மறுக்கிறார்கள்.

3. ***ஜபரிய்யா*** இந்த மதுஹபில் நின்றும் பிரிந்த பன்னிரண்டு கூட்டங்களாவன:-

*1. முளுதர்ரிய்யா 2. அப்ஆலிய்யா 3. மஇய்யா 4. மப்ரூகிய்யா 5. நஜ்ஜாரிய்யா 6. மைமனிய்யா 7. கஸ்லிய்யா 8. ஸாபிகிய்யா 9 ஹபீபிய்யா 10. கவ்பிய்யா 11. ஹஸ்பிய்யா 12. பிக்ரிய்யா* இவர்களாகும்.

இவர்களின் ஏகோபித்த கூற்றாவது:- இந்த உலகத்தில் சொத துக்கள் உவக்கப்பட்ட பொருளாகவும், தான் நாடியதை நிறை

வேற்றுவதற்குக் காரணமாகவும் இருப்பதால், அதை வீண் விரயம் செய்வது அறிவீனமாகும்; ஆதலால் ஸதகா கொடுப்பது அவசிய மில்லை என்பதாம். இவர்களில் 'ஸாபிகிய்யா'க்கள் வணக்கத்தைக் கொண்டு பிரயோசனமில்லை; பாவத்தைக் கொண்டு கெடுதியு மில்லை என்கின்றனர். 'ஹஸ்பிய்யா'க்கள் தௌபாவையும் அல்லாஹ்வின் விகாவையும் மறுக்கின்றனர்.

4. ***'கதரிய்யா'*** (இயற்கை வாதிகள்) இவர்களில் பிரிந்த பன்னிரண்டு கூட்டங்களாவன:-

*1. அஹமதிய்யா 2. ஸனவிய்யா .3 ஷெய்த்தானிய்யா 4. ஷரீகிய்யா 5. வஹ்மிய்யா 6. அபதிய்யா 7. நாகிதிய்யா 8. முதபர்ரிய்யா 9. காஸிதிய்யா 10. நிளாமிய்யா 11. மும்தரிய்யா 12. கைஸானிய்யா இவர்களாவர்.*

இவர்களின் ஏகோபித்த கூற்றாவது: நன்மையும் தீமையும் உண்டாகிறது அல்லாஹ்வுடைய தக்தீரைக் கொண்டல்ல. ஜனாஸாத் தொழுகை வாஜிபல்ல. மீதாக்குடைய நாளைக் குறித்து யாதொரு ஹகீகத்தும் தரபடவில்லை என்பனவாம். இவர்களில் 'அஹமதிய்யா'க் கள் பர்லை ஒப்புக்கொண்டு, சுன்னத்தை மறுக்கிறார்கள். 'ஸனவிய்யா'க்கள் நன்மைகளைப் படைக்க ஓர் ஆண்டவனும், தீமைகளைப் படைக்க ஓர் ஆண்டவனும் உண்டு என்றும், அவர்களில் நன்மைகளைப் படைப்பவனுக்கு 'எஸ்தான்' எனவும், தீமையைப் படைப்பவனுக்கு 'அஹ்ருமன்' என்றும் பெயர் சொல்கிறார்கள். 'ஷெய்த்தானிய்யா'க்கள் ஷெய்த்தான் இல்லை என்று மறுக் கின்றார்கள்.

5. ***'ஜ~ஹைமிய்யா'*** இந்த மதுஹபில் பிரிந்த பன்னிரண்டு கூட்டங்களாவன:-

*1. முஅத்தலிய்யா 2. முராபிலிய்யா 3. முதராகிபிய்யா 4. வாரிதிய்யா 5. ஹர்கிய்யா 6. மக்லூகிய்யா 7. கைரிய்யா 8. பானிய்யா 9. ஸனாதிகிய்யா 10 லப்ளிய்யா 11. கப்ரிய்யா 12. வாக்கிபிய்யா என்பவர்களா.ம்.*

இவர்களின் ஏகோபித்த கூற்றாவது:- ஈமான் கல்பைக் கொண் டதாக இருக்கும். நாவைக்கொண்டல்ல, மலக்கல் மவுத் முன்கர் நகீர் இவர்களையும் 'ஹவ்ஸ~ல் கவ்தர்' ஸிராத் (பாலம்) இவை களையும் இன்கார் செய்வதுமாகும். இவர்களில் விகற்பமுடைய



'முஅத்தலிய்யா'க்கள் அல்லாஹ்வின் அஸ்மா உஸ்ஸிபாத்துகள் படைக்கப்பட்டவை (மல்லூக்) எனக் கூறுகிறார்கள். 'கைரிய்யா'க்கள் நமது நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு புத்திசாலியாக இருந்தார்களே தவிர இரஸ~லாக இல்லை எனக் கூறுகின்றனர்.

6. ***'முற்ஜிய்யா'***க்கள் இந்த மதுஹபில் பிரிந்த பன்னிரண்டு கூட்டங்கள் பின்வருமாறு:-

*1. தாரிகிய்யா 2. ஷாஇய்யா 3. ராஜிய்யா 4. ஷாகிய்யா 5. பைஹஷிய்யா 6. அமலிய்யா 7. மன்கூஸிய்யா 8. முஷ்தஸ்னிய்யா 9. அப்தரிய்யா 10. பிதஇய்யா 11. முஷப்பிஹிய்யா 12. ஹஷவிய்யா எனப்படும்.*

இவர்களின் ஏகோபித்த சொல்லாகிறது, ஈமானைத் தவிர வேறு ஒரு இபாதத்தும் பர்ளாக (கடமையாக) இல்லை என்பதாம். இவர்களில், 'ஷாகிய்யா'க்கள் ஈமானில் சந்தேகம் இருக்கிறது என்றும், 'பைஹஷிய்யா'க்கள் ஈமானுக்கு உறைவிடம் கல்வியாக இருப்பதால், ஏவல் விலக்கல் அறியாதவன் காபிர் எனச் சொல்லுகிறார்கள். ★

நமது சத்திய சன்மார்க்கத் திரு நபி (ஸல்) அவர்களின் தீர்க்கத் தரிசன முன்னறிவிப்பின் பிரகாரம், திருமறைக்கும், ஷரீ அத்திற்கும் முற்றமுற்ற முரணாக நடந்துகொள்ளும் மேற்கூறப்பட்ட 72 கூட்டத்தினருமே நரகவாதிகளாவர்.

இவர்களில் பல கூட்டத்தினரின் பெயர்கள்கூட இன்று பொதுமக்களுக்குத் தெரியாதபடி மாண்டு புதைகுழியில் மறைக்கப் பட்டுப் போயின. அந்த மாண்டு மறைந்து போன கூட்டத்தினருக்குப் பகரம், அன்னாரின் கொள்கைகளில் சில மாறுதல்களோடு சிலர் தோன்றி, இன்னும் பொதுமக்களை ஏமாற்றி வழி கெடுக்கக் கூடிய வேலையிலேயே கண்ணும் கருத்துமாகத் திரிகின்றனர். இவர்களுள் 'வஹ்ஹாபி 'மிர்ஜாயீ' (காதியானி) 'அஹ்லெ ஹதீது' என்று தங்களைக் கூறும் ஒரு கூட்டம். ஆகிய மூன்று தரத்தாரும் முக்கிய மானவர்கள்.

---

★ 6, மத்ஹப், அதில் நின்றும் பிரிந்த 72 கூட்டத்தினர்களின் இயக்கம் பற்றிய முழு விபரம், அறிய விரும்புபவர்கள், நாயகம் முஹ்யித்தீன் அப்துல் காதிறு ஜீலானிய்யி (ரலி) அவர்களின் 'குன்யதுத் தாலிபீன்' என்ற நூலில் மிகத் தெளிவாகக் காணலாம்.

## வஹ்ஹாபி இயக்கம் (நஜ்தியர்கள்)

அரேபியாவில் நஜ்து மாகாணம், அங்கு வசிப்பவர்களுக்கு நஜ்தியர் என்று பெயர்.

நபிகள் பூமான் (ஸல்) அவர்கள் சமூகம் வந்து இஸ்லாத்தைத் தழுவிய நஜ்து வாசிகளுக்கு, அவர்களிடம் குடிகொண்டிருந்த பொறாமைக் குணம் மாறாமல் அது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருந்தது.

நபியுல்லாஹ்வின் சமூகமிருந்து உபதேசங்களைக் கேட்கும் இவர்கள் வெளியில் சென்றதும், அதற்கு நேர் மாற்றமான வார்த்தைகளைப் பரிமாறுவார்கள். குதர்க்கவாதம் புரிவார்கள்; இரவெல்லாம் சதியாலோசனை செய்து கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு உபதேசத் தோரணையிலும், கண்டித்தும் நாயகம் (ஸல்) பலமுறை கூறியும்கூட, செவிடன் காதில் ஊதுவது போலாயின. இவர்களின் போக்குப்பற்றி நபிகள் நாதர் (ஸல்) அவர்களுக்கு வேதனை ஏற்படுவதுண்டு. இவர்களை முனாபிகீன் என்றும் நயவஞ்சகர் என்றும், அல்லாஹ், நபி அவர்களுக்கு எச்சரிக்கை செய்திருப்பதை திருமறையில் பல இடங்களில் காணலாம்.

ஷெய்த்தான் நாயகத் திருமேனியிடம் வரும்போது, நஜ்தியர்களின் உருவத்தில் வருவான். அவனைக் கண்டதும் ஷெய்குன் நஜ்தி (நஜ்திப் பெரியார்) வருகிறான் என்று நாயகம் (ஸல்) கூறுவார்கள். அண்மையிலிருக்கும் ஸஹாப்பாக்கள் இவன் ஷெய்த்தான் என்று புரிந்து கொள்வர்.

ஒரு சமயம் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் முபாரக்கான கரங்களை ஏந்தி 'ஆண்டவா! எங்கள் ஷாம் தேசத்துக்குப் பரக்கத்துச் செய்வாயாக! ஆண்டவா எங்கள் எமன் தேசத்திற்கு பரக்கத்துச் செய்வாயாக!'' என்று துஆக் கேட்டார்கள்.

ஸஹாபாக்கள், ''யாரஸுலுல்லாஹ் எங்களுடைய நஜ்து தேசத்திற்கும்'' என்றார்கள். மறுமுறையும் நாயகம் (ஸல்) அவர்கள் முன் கூறியபடியே ஷாம், யமன் இரு தேசங்களுக்காகவும் வேண்டுதல் செய்தார்கள். மீண்டும் நஜ்தியர் தங்கள் தேசத்திற்காக துஆ கேட்கும்படி கூறவே நபிபெருமான் (ஸல்) அவர்கள் மூன்றாம் முறையாக 'அங்கு அதிர்ச்சிகளும், கொந்தளிப்புகளும், பித்னாக்களும் உண்டாகும். அங்கு ஷெய்த்தானுடைய கூட்டங்கள் வெளிக்கிளம்பும் என்று கூறினார்கள்.

(ஸஹீஹ் புகாரி)



நஜ்தியர்களின் முனாபிக் நயவஞ்சகச் செயல்கள் காரணமாக அடிக்கடி பித்னாக்கள் வேகத்துடன் ஏற்படுவதும், அது பலம் குன்றுவதுமாக இருந்தது.

நபிகள் நாதர் (ஸல்) அவர்களுக்குப்பின் 225 வருடங்கள் வரை இஸ்லாமிய உலகம் நிம்மதியோடு இலங்கியது. இதற்கிடையில் நஜ்தியர்களால் ஏற்படும் சிறுசிறு குழப்பங்களை எல்லாம் உலமாப் பெருமக்களாலும், ஆட்சியினராலும் அப்போதைக்கப்போது அடக்கி ஒடுக்கப்பட்டன. பின்னர்,

நஜ்தில் இப்னு தைமிய்யா என்பார் வெளியாகி தீனில் தலையிட்டு நூதன கொள்கைகளை உண்டுபண்ணி, நபிகள் நாதரின் ஷரீ அத்திற்கு விரோதமான மஸாயீல்களைத் திரட்டி, 'ஸிராத்தல் முஸ்தகீம்' என்ற நூலை வெளியிட்டு, புதிய கிளர்ச்சியை உருவாக்கினார். இந்தநூலில் மிகுதமும் நபிகள் கோமான் (ஸல்) அஹ்லபைத்துகள், ஸஹாபாக்கள், இமாம்கள், அவ்லியாக்கள் முதலியோர்களை இழிவுச் சொற்களால் நிந்தித்து எழுதி இருக்கிறார். இதை அவருடைய சகோதரர்களும், உறவினர்களும் கண்டித்து, மறுத்தும் இருக்கிறார்கள். அன்றியும் அப்போதுள்ள ஷெய்குல் இமாம் ஷெய்கு முஹம்மது பர்ஸ், குதுவதுல் முஹத்திதீன் ஷெய்கு இப்னு ஹஜர் மக்கி, ஸய்யிது அஹ்மது கபீருர் பாரியி (ரலி), இன்னும் மக்காவில் முப்தியாயிருந்த அல்லாமத் ஸய்யிது அஹ்மது தஹ்லான் மக்கீ முதலிய மார்க்க மேதைகள். இப்னு தைமிய்யாவை லஃனத்துச் செய்து, காபிர் என்று மார்க்கத்தீர்பபு (பத்வா) வெளியிட்டிருக்கிறார்கள். இவருடைய அட்டூழியம் பொறுக்க முடியாமல் மிஸ்ர் அரசாங்கம் பலமுறை அவரைக் காவலில் வைத்தது, அப்போதும் அடங்கவில்லை. இறுதியாக ஷாம் தேச அரசாங்கம் அவரைக் கைது செய்து திமஷ்க் நகர் காவல் கூடத்தில் சாகும்வரை சிறையில் வைத்து அங்கேயே அவர் இறந்தார்.

இப்னு தைமிய்யாவின் பிரதிநிதிகளில் பலர் காலப்போக்கில் பித்னாக்கள் கிளர்ச்சிகள் செய்வதும், எதிர்ப்பின் காரணமாகக் கேவலப்பட்டு அது மறைவதுமாக இருந்தது.

ஏறத்தாழ 600 வருஷங்களுக்குப்பின் நஜ்தைச் சார்ந்த தர்இய்யா என்ற ஊரில், முஹம்மதிப்னு அப்துல் வஹ்ஹாப் பிறந்தார்.★ இவர் தலை எடுத்து இப்னு தைமிய்யாவுடைய கொள்கையைப் பின்பற்றி, அதற்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து, புதியதோர் மத்ஹபை உண்டாக்க முற்பட்டு, இப்னு தைமிய்யா எழுதிய ஸிராத்தல் முஸ்தகீம் என்ற நூலை விரிவுபடுத்தி, அதற்கு மிருது கொடுத்து 'கிதாபுத் தவ்ஹீத்' என்ற பெயரால் வெளியிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில்,

துருக்கி அரசர் சுல்தான் அப்துல் ஹமீதுகான் காலமானார். பதவியின் காரணமாக அரசாங்கத்தில் பிளவு ஏற்பட்டது. துருக்கியின் உதவியைப் பெற்றுக் கொண்டிருந்த பக்கத்து அரசர்களும் பலம் குன்றினர். அதன் குணபாடு ஹிஜாஸையும் தாக்கியது. இதைத் தக்க தருணமாகக் கொண்டு, அப்துல் வஹ்ஹாபுன் நஜ்தி ஒரு படையைத் திரட்டிக் கொண்டார்.

இந்தப் படையின் தலைவனாக இருந்த ஸுஊது என்பவன் ஹஜ்ஜுக்குப் போவதாகப் பாசாங்கு செய்து, பெரும் படையுடன் மக்காவுக்குள் நுழைந்து, பொருள்களைச் சூறையாடி ஆண், பெண், பாலர், வயோதிகர், வாலிபர் என்ற பாகுபாடின்றி கொலை செய்தான். அந்த மக்காவாசிகள் உயிர்தப்பக் கார்மாணம் தேடி ஹரம் ஷரீபுக்குள் நுழைந்தவர்களும், உயிர் பிழைக்கவில்லை. ஞாபகார்த்தமான மஸ்ஜித் களும் கப்ருகளும் தாக்கப்பட்டன. அப்பால் மக்காவில் புரிந்த அட்டூழியம் போலவே, மதீனா முனவ்வராவிலும், அவர்கள் கொஞ்சமும் இரக்கமின்றி முஸ்லிம்களை எல்லாம் வெட்டி வீழ்த்தினர். அங்கு ஸய்யிதுனா அப்பாஸ் (ரலி) ஸய்யிதுனா இப்னு அப்பாஸ் (ரலி) ஸய்யிதுனா உதுமான் (ரலி) ஸித்தினா பாத்திமா ஸஹ்ரா (ரலி) ஆகியவர்களுடைய மக்பராக்களும் வீழ்த்தப்பட்டது. ஸலவாத்து நூல்கள் பிக்ஹு கிதாபுகள் முதலியவை எரிக்கப்பட்டன. ஜித்தா, தாயிப், மக்கா, மதீனா, கர்பலா ஆகியவை இந்தக் கொடுமைகளுக்குள்ளாயிற்று. ரவ்ளதுன் நபியையும் தரைமட்டமாக்க முற்பட்டபோது, அந்த ஷெய்த்தான்கள் அதிசயமாகச் செத்து மடிந்தனர். இவர்கள் இந்த விதமாக வெட்டவும், கொள்ளை அடிக் கவும் காரணம் முஹம்மதுப்னு அப்துல் வஹ்ஹாபு நஜ்தியுடைய

★ இவர் தன் தாயின் வயிற்றில் கருதரித்துப் பிறந்த காரணத்தை மஸ்பூத்துல் ஈமான் என்ற நூலில் காணலாம்.



மத்ஹபின் பிரகாரம் எல்லா முஸ்லிம்களும் முஷ்ரிக்குகள், பித் அத்துக்காரர்கள் என்று இருப்பதுவேதான்.

அந்த சமயம் உள்நாடு வெளிநாடுகிளலுள்ள உலமாக்கள், முப்திகள் முதலியோர் அப்துல் வஹ்ஹாபின் கொள்கை முற்ற முற்றத் தவறு என்று, அதை கடுமையாக ஆட்சேபித்து, தக்க ஆதாரச் சான்றுகளுடன் அவரை லஃநத்துச் செய்து குபிர் (இஸ்லாத்தை விட்டும் அப்பாற்பட்டவர்) என தீர்ப்புக்கூறி, பல பத்வாக் கிதாபுகள் வெளியிட்டுள்ளன சுருங்கக் கூறுமிடத்து:-

இந்த இயக்கத்தின் ஸ்தாபகர் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப், தன் அந்திய காலத்தில், யமனில் ஒரு தக்வாவுடைய பெரியாரோடு தன் மத்ஹபைப் பற்றி தர்க்கவாதம் புரிந்து, இறுதியில் படுதோல்வி அடைந்து, அங்கேயே அகால மரணமானார் (இவரது அதிர்ச்சிக்குரிய (அகால) மரணம் பற்றிய விபரம் ''புதூஹாதுல் மகிய்யா'' என்ற நூலிலும், 'மஙானி' கிதாபிலும் காணலாம்.)

எம்பெருமானார் நபிகள் கோமான் (ஸல்) அவர்களின் முன் அறிவிப்பின்படி, நஜ்தில் தோன்றி - அதிர்ச்சி, பித்னாக்களுக்குக் காரணமாயிருந்தவர் (பரக்கத்துச் செய்யப்பட்ட) ஷாம் சேத்திலும், நஜ்தில் ஷெய்த்தான்களின் உற்பத்திக்குக் காரணகர்த்தாவும், அதன் அட்டகாசங்களுக்குத் தலைவராயிருந்து செயலாற்றியவர் (பரக்கத்துச் செய்யப்பட்ட) யமனிலும் மாண்டு மறைந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த மத்ஹபுக்குரிய அப்துல் வஹ்ஹாபு நஜ்தியை இமாமாகக் கொண்டு, அவருடைய சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டுத் தலைசாய்த்து நடப்பவரையே 'வஹ்ஹாபி'கள் என்று சொல்லப்படும்.

'வஹ்ஹாபி' இந்த இயக்கம் நாம் முன்கூறிய 72 கூட்டத்தின் அடிப்படை, 6 மத்ஹப்களில் இரண்டாவதான 'காரிஜிய்யா' அல்நஜ்தியின் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டது. இந்தக் கூட்டத்தினரின் கொள்கையாவது:

1. அல்லாஹுத் தஆலா பொய் சொல்லலாம் (மும்கானுல் கிதுபு) என்று (அகீதா) நிர்ணயம் கொள்ளுதல்.
2. அல்லாஹ்வுடைய சிபத்துகள் இஷ்டத்தைச் சேர்ந்ததும் புதிதுமாகும்.
3. அல்லாஹ்வுக்கு காலம் இடம் திசை இவைகள் உண்டு.

4. நபி (ஸல்) அவர்களுக்குப் பின் வேறு நபி வரலாம். அவ்விதம் வந்தால், 'காத்தமுன் நபிய்யீன்' என்பதற்கு மாற்றமாகாது.

5. தொழுகையில் ரஸூல் (ஸல்) அவர்களின் ஞாபகம், உருவம் மனத்தில் வருவது, மிருகங்களுடைய ஞாபகம் உருவம் வருவதைப் பார்க்கிலும், மிகக் கெட்டதாயிருக்கும்.

6. நபி நாயகம் (ஸல்) மவுத்தாகி மண்ணோடு மண்ணாகி விட்டார்கள்.

7. 'றஹ்மத்தன் லில் ஆலமீன்' என்பது நாயகம் (ஸல்) அவர்களுக்கு மாத்திரம் சொந்தமான ஸிபத்து அல்ல, மற்றவர்களுக்கும் சொல்லலாம்.

8. சூனியக்காரர்களுடைய சூனியம், நபிமார்களுடைய முஅஜி ஸாத்துகளைவிட அதிக சக்தி வாய்ந்ததாகும்.

9. அல்லாஹ்வுக்கு (இல்முல்கைபு) மறைவான சங்கதியை அறியும் ஞானம் இல்லை; ஆனால், எப்பொழுது விரும்புகிறானோ? அப்பொழுது அறிய முடியும்.

10. ரஸூல் (ஸல்) அவர்கள் ஷபஅத்துச் செய்வார்கள் என்று யாராவது நம்புவானானால், அவன் அசல் முஷ்ரிக்காகவும், மடையனாகவும் ஆவான்.

11. அல்லாஹ்வுக்கு கைகள் உண்டு, அவன் அர்ஷின்மீது உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.

12. நபி (ஸல்) அவர்களின் ஸியாரத்தை நோக்கமாகக் கொண்டு செல்வோர் எவரும், (ஹாஜிகளும்கூட) முர்தத்துகளாகிவிடுவர், அவர்களை கொலை செய்வதும், அவர்களுடைய உடமைகளைக் கொள்ளையடிப்பதும் 'ஹலால்'.

13. நாயகம் (ஸல்) அவர்களுக்கு 'இல்முல் கைப்' என்ற ஞானம் ஒருபோதும் இல்லை.

14. ஹிஜ்ரி 1206-ல் காலஞ்சென்ற வஹ்ஹாபிக் கொள்கை ஸ்தாபகர் முஹம்மது இபுனு அப்துல் வஹ்ஹாபுக்கும், அதற்கு முன் தோன்றி மாண்ட இபுனு தைமியா காலத்துக்கும் இடைப்பட்ட 600 வருடங்களாக, உலகில் வாழ்ந்த முஸ்லிம்கள் எல்லோருமே முர்தத்துகளாகிவிட்டனர். தற்போது இந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே முஸ்லிம்கள், மற்றவர்கள் எல்லாம் இன்னும் முர்தத்துகளாகவே இருக்கின்றனர்.



15. நாயகம் (ஸல்) ஒரு தபால்காரரைப் போன்றவர்தாம். அவர்கள் இஸ்லாத்தைப் போதித்தது உண்மையே, ஆனால், இப்போது இறந்துவிட்டதால் அவர்களைப் பெரிதுபடுத்த வேண்டிய தில்லை.

16. பிக்ஹு சட்டங்கள் அதாவது மஸாயில்களைத் தெரிய வேண்டி யதில்லை. ஹதீதுகளையும் வணக்கங்களின் சிறப்பு என்ற பலாயில்களையும் தெரிந்துகொண்டு வணங்கினால் போதும்.

17. எவன் ரஸூலுல்லாஹ் என்று சொல்வானோ அவன் காபிர். இவைகள் அன்றி,

சிறிய பெரிய குற்றங்களுக்காக, ஈமானில் பலமுள்ள உண்மை முஃமின்களை காபிராக்கும் பல பத்வாக்களும், இவை போன்ற வேறு பலவும், சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அந்த இயக்கத்தின் ஸ்தாபகர் எழுதிய 'கிதாபுத் தவ்ஹீத்' என்ற சிறிய நூலை காலப்போக்கில் அவருடைய பிரதிநிதிகளும், நஜ்து அரசாங்கமும் விரிவுபடுத்தி, பலவித புதுப்புது (குபுராக்கும்) கருத்துகளைப் புகுத்திக் கொண்டே இருக்கின்றனர். கண்டதெல்லாம் ஷிர்க்கு என்ற மனக்குழப்பம் இவர்களுக்கு ஏற்பட்டு, கடைசியாக பெற்றோருக்கும், பெரியோ ர்க்கும் எழுந்து நின்று மரியாதை செய்வதும் கூட ஷிர்க்கு என்று சொல்லுமளவுக்கு இவர்களது கோணல் புத்தி சென்றுவிட்டது.

தற்போது இந்தியாவிலும், இலங்கையிலும், பாக்கிஸ்தானிலும் 'அஹ்மதியா' (காதியானி) இயக்கம் அனேகமாகச் செத்துப் போய்விட்டது. வஹ்ஹாபியத்தின் முஸீபத்து மிகப்பயங்கரமான அளவில் தலை தூக்கி நிற்கின்றது. காரணம்:- நஜ்துக்காரர்களின் எண்ணெய்ப் பணத்தில் ஒரு பகுதியும், ஒரு தனி இலாகாவும் உலகம் முழுவதும் இதற்காகச் செயல்பட்டு வருகின்றது. மத்ரஸாக்கள், உலமாக்கள், அறிவாளிகள் உள்பட எல்லாப் பிரிவுகளிலும், இந்த ஊடுருவல் இருக்கிறது. இந்த இயக்கத்தினர் ஷபாஅத்துச் சம்பந்தப் பட்ட பொதுக் கருத்துள்ள ஆயத்துகளில் குதர்க்கமான பொருள் கொடுத்தும், தகப்பன் பெயரால், மகன் செய்கின்ற ஸதகாவும் ஓதுதலும் போய்ச் சேராதென்றும், வேறு பலவிதமாகவும் பித்னாக்கள் புரிகின்றனர்.

நபி (ஸல்) அவர்களை ஸய்யிதினா மவ்லானா என்று மரியாதை மொழிகளைச் சேர்த்துக் கூறுவதை ஆட்சேபிக்கும் இவர்கள், தமது நாட்டின் அரசருக்கும் பிரபுக்களுக்கும் 'மவ்லாய ஜலாலத்துல் மலிகுல்

முஅல்லம்,' என்றும் உஸ்தாது ஷெய்கு என்றும், அவர்கள் பெயருக்கு முன் பட்டங்களைக் கூசாமல் சேர்த்துக் கூறுவார்கள்.

மவ்லிது ஓதுவது 'குப்ரு' என்று ஒருபுறம் கூறுவார்கள். மறுபுறம் அந்த ஊரில் இறந்துபோன அரசரைப்பற்றிப் புலவர்கள் பாடிய பாடல்களை புத்தகமாகவும், சவூதி அரேபியா பத்திரிகைகளிலும் வெளியிடுவார்கள். ''அல்மலிக்கு அப்துல் அஜீஸ் பீ மிர்ஆத்திஷ்வுரு'' என்ற இபுனு ஸுஊது பெயரிலுள்ள மவ்லிது கிதாபு அரசாங்கத்தாரால் அச்சிட்டு வெளி வந்திருக்கிறது. பைசல் அரசர் இறந்ததும், பத்திரிகைகளில் அவருடைய பெயரில் மர்தியாக்களும் (இரங்கல் பாக்கள்) பைத்துகளும் வெளியிடப்பட்டன.

இவர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் வாரிசுகளான 'அஹ்ல பைத்து' என்ற 'ஆலூர் ரஸூல்' என்று சிலரைக் கருதுவது பெரும் பாவம் என்கின்றனர். ஆனால் அதே சமயம், 'ஆலுஸ்ஸுஊது' என்று அரச குடும்பமும், 'ஆலுஷ்ஷெய்கு' என்று இந்த இயக்க ஸ்தாபகரின் வாரிசுகளின் முக்கியத்துவத்தையும் பேணிக்காக்கின்றனர்.

''நூர் முஹம்மதிய்யா'' என்பதை பொய் என்று கூறுவதற்காகப் பலநூறு புத்தகங்களும், 'யாரஸூலுல்லாஹ்' என்று அழைப்பது 'குப்ரு' என்று கூற இன்னும் பல ஆயிரம் புத்தகங்களும், இவர்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில், அடிக்கடி வெளியாகிக் கொண்டிருக்கின்றன. மக்கா, மதீனா, ஜித்தா, ரியாது ஆகிய இடங்களிலுள்ள மத்ரசாக்களில் பயிலும் மாணவர்கள் பலர், இவர்களின் பண வலிமையால் ஈர்க்கப்பட்டுக் கொள்கைமாறி வழி கெட்டுப்போய் விடுகின்றனர். அந்தோ! பரிதாபம்!

இதுவல்லாமல், இந்தக் கொள்கையின் அடிப்படையில் சிறு சிறு மாற்றங்களுடன் புதுப்பெயர்களைப் புனைத்து, வட நாட்டில் பல இயக்கங்கள் தோன்றி, முஸ்லிம்களை வழிதவறச் செய்வதில் முனைந்துள்ளனர். உண்மை விசுவாசிகளிடமும், இமாம்களிடமும் நெடுங் காலமாக நிலவி வந்த பல கருத்துக்களை 'ஷிர்க்கு' என்று கூறியும், நபிமார்கள், மஅஸூம்கள் (பாவத்திலிருந்து காக்கப் பட்டவர்கள்) அல்லவென்றும், வேறு பலவிதமாகவும் மக்களைக் குழப்புவதுடன், தங்களை 'முஜத்திது'கள் என்றும், மஹ்திகளென்றும் புத்தகங்கள் எழுதியும் வருகின்றனர். 'பாவம்'.

இவர்களுடைய கொள்கைகள் ஒவ்வொன்றிற்கும் மறுப்பாக சுன்னத் வல்ஜமாஅத்தார் பின்பற்றி வரவேண்டிய ஷரீஅத்து



முறைகளை, இமாம் ஷெய்கு ஸதகதுல்லாஹ் அப்பா அவர்கள் தங்கள் வித்ரிய்யா என்ற பெருநூலில், குர்ஆன் ஹதீது இவைகளால் விளக்கம் தந்துள்ளார்கள். இன்னும் அல்லாமா மாப்பிள்ளை ஆலிம் அவர்கள், தங்கள் 'கனீமதுஸ்ஸாலிகீன்' என்று நூலில் ராபிளீ, வஹ்ஹாபி இவர்களின் போக்கைக் கண்டித்து, மறுத்து, அன்னாரை வெறுத்துக் கூறி இருப்பதைக் காணலாம். இவை போன்று மார்க்க நிபுணர்களின் முக்கியமான அரபிக் கிரந்தங்களிலும் தெளிவுகள் உள்ளன.

இமாம் ஷெய்கு ஸதகதுல்லாஹ் அப்பா அவர்களின் தம்பி, மக்களை தீன் வழியில் ஊக்குவிப்பதற்காக சன்மார்க்க விளக்கம் பற்றி, பல நூறு பாமாலைகள் பாடித்தந்த காயல்பதி காமில்வலி ஷாம் ஷிஹாபுத்தீன் அப்பா அவர்கள் வஹ்ஹாபிப்படலம் என்ற 15 பாக்கள்கொண்ட சிறு நூலில், வஹ்ஹாபிக் கொள்கையை விளக்கி, ஒவ்வொன்றிற்கும் தக்க ஆதாரம் காட்டி, அந்தக் கூட்டத்தினரை, ஈமான் மாறி வேறு சாதியாய் நாசமாய்ப் போனார்களே! என்று வேதனையோடு பெரிதும் வெறுத்துச் சாபம் செய்து முனிந்திருப்பதையும் காணலாம்.

காதியானி: இதன் ஸ்தாபகர் மிர்ஸாகுலாம் அஹ்மத். இவர் பஞ்சாப் மானிடத்தில் குர்தாஸ்பூர் ஜில்லா காதியான் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் வஹ்ஹாபியர்களின் கொள்கைகளையும், 'ஷிராஸில்' தோன்றி, குறுகிய காலத்தில் மறைந்து போன பஹாயீமதுஹப் கொள்கைகளையும் தம் கொள்கையாக அமைத்து, திருக்குர்ஆன், ஹதீது வாக்கியங்களில் உலமாக்களாலும், மார்க்க அறிஞர்களாலும் ஒத்துக்கொள்ளாத வீதத்தில் சிலவற்றை, தம் கொள்கைக்குப் பொருந்தும்படி மாற்றி, பல நூல்களும், பல பிரசுரங்களும் வெளியிட்டும், இன்னும் தன்னை முஜத்திது என்றும், தஹ்தி என்றும், நபி என்றும் பறைசாற்றிக் கொண்டார். அன்றியும் தன்னைப் பின்பற்றாதவர் காபிர் என்றும் தாவாச் செய்தார். ஹிந்துக்களிடத்தில் தன்னை கிருஷ்ணன் என்றும், கிறிஸ்தவர்களிடத்தில் ஈஸா என்றும் வாதாடி இறுதியில் கிறிஸ்தவர்களிடம் தோல்வியை அடைந்தார்.

ஏனைய நபிமார்களைப்போல், முஅஜிஸா (அற்புதச் செயல்கள்) காட்டும்படியாக மக்கள் கேட்பார்கள் என்பதை முன்னாடியே உணர்ந்து, எச்சரிக்கையாக நபிமார்களின் முஅஜிஸாத்துகளெல்லாம் வீண் கட்டுக் கதைகளென்றும், பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளாதவைகளென்றும் கூற ஆரம்பித்தார். முந்தைய நபிமார்களைப்போல், பல தீர்க்கத் தரிசனங்கள்

(முன்னறிவிப்பு) கூற ஆரம்பித்தார். ஆனால், அவருடைய தீர்க்கத் தரிசனங்கள் எல்லாம், முடிவில் பொய்யாகவே முடிந்தன. மதப் பெரியார்களை, அவதூறாகவும், இகழ்ந்தும், அவர்களின் சொல் செயல்களுக்கு மாற்றமாகப் பல நூல்கள் வெளியிட்டுள்ளார். அன்னாரின் சிஷ்யர்களின் கொள்கையும் இதுவே.

மிர்ஸாகுலாம் அஹ்மது (காதியானி)க்குப் பின்னர், அவருடைய சீடர்கள் கலீபா விஷயத்தில் முரண்பட்டு, லாகூர் பார்ட்டி என்றும், மிர்ஸாயி பார்ட்டி என்றும் இரு பிரிவுகளாகப் பிரிந்து காதியானி கொள்கையைப் பின்பற்றி வரலாயினர்.

இவர்களுடைய இயக்கம் தற்போது பல ஊர்களில் தோன்றி முஸ்லிம்களாகிய நமது ஐக்கியத்தைப் பிளவுபடுத்தியும், பல குழப்பங்களை உண்டுபண்ணியும், மார்க்க அறிவில்லாத இளைஞர் களையும், பாமரர்களையும் அணுகி, பிரச்சாரத்தின் மூலம் பல ஆசை வார்த்தைகளைக் காட்டியும், பரிசுத்த இஸ்லாத்தின் பற்றுதலைக் கெடுத்து, வழிகேட்டிற்கு இழுத்துச் செல்கின்றனர். இதுமட்டுமா? அவர்களின் ஸ்தாபனத்திலிருந்து, ஸுன்னத் வல் ஜமா அத்துக் கொள்கைக்கு முற்றும் முரணான துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள் வெளியிட்டும், பிரச்சாரத்திற்கென்று பொருள்கள் வழங்கியும், சந்தர்ப்பவாதப் பேச்சாளர்களை கைவசப்படுத்திப் பிரச்சாரம் செய்வ தற்கு ஊர் ஊராக அனுப்பியும், முஸ்லிம்களின் ஐக்கியத்திற்கும், நம்பிக்கைக்கும் ஊறு செய்வதற்கென்றே கங்கணம் கட்டித் திரிகின்றனர்.

இதன் நிமித்தம் பல ஊர்களில் மார்க்க எதிர்ப்புகள் ஏற்பட்டு, அன்னாரின் சம்பிரதாயங்கள் பலிக்காமல் வீழ்ச்சி அடைந்து, வாதி பிரதிவாதிகள் என்ற முறையில், கோர்ட்டில் விவகாரங்கள் நடந்த திலும் கூட, படுதோல்வி ஏற்பட்டு, கீழ்நிலைக்கு ஆளாகி, அந்தந்த ஊர்களில் அன்னவரின் ஸ்தாபனம்கூட இல்லாமல் மறைந்தவிட்டதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

ஸுன்னத் வல் ஜமா அத்துக் கொள்கைக்கு முற்ற முற்ற முரணாக விருக்கும் அன்னாரோடு தர்க்கவாதங்கள் ஏற்பட்டு, முடிவில் அவர்கள் மார்க்கத் துரோகிகள் என்று கோர்ட்டுத் தீர்ப்புகளும், மக்கா, மதீனா ஆகிய புண்ணிய நகரங்களிலிருந்து 35 உலமாக்கள் (மார்க்க நிபுணர்) உறுதிப்படுத்திய 'ஹுஸாமுல் ஹரமைன்' என்ற பத்வாகிதாபும் (மார்க்கத் தீருப்புக் கிரந்தம்) இந்தியாவில் வடபாகம் தென்



பாகத்திலுள்ள 268 உலமாக்கள் கையெழுதிட்டு, மேலே கூறப்பட்ட கூட்டத்தினர், காபிர்கள், முர்தத்துகள் என்ற 'அஸ்ஸவாரிமுல் ஹிந்திய்யா' என்ற நாமத்துடன் ஓர் பத்வாகிதாபும், இன்னும் சிலோன், பர்மா, மலாயா முதலிய ஊர்களிலிருந்து பத்வாக்களும் வெளி வந்துள்ளன. ஆகவே, இந்தக் கூட்டத்தினருடன் நாம் எவ்வித தொடர்பும் வைக்கக் கூடாது என்பது தெளிவாகிறது. சமீபத்தில் பாக்கிஸ்தான் அரசாங்கம் நபி (ஸல்) அவர்களை இறுதி நபி என்று ஏற்றுக் கொள்ளாதவர்கள் எல்லாம் முஸ்லிம்கள் அல்லர் என்று பார்லிமெண்டில் ஒரு சட்டம் இயற்றியதின் காரணமாக இந்த இயக்கம் செத்துவிட்டது.

'அஹ்ல ஹதீது' என்ற கூட்டமும் இதற்குட்பட்டதே.

"கடைசிக் காலத்தில் பொய்யர்களும், ஏமாற்றுக்காரர்களும் வருவார்கள். நீங்களும் உங்கள் மூதாதைகளும் கேட்டிராத ஹதீதுகளை எல்லாம் உங்களிடத்தில் ஓதிக்காட்டுவார்கள். (முஸ்லிம்களே!) நீங்கள் அவர்களைவிட்டும் தூரமாகி இருங்கள். அவர்களை உங்களிடம் வரவிடாதீர்கள். அப்படி இருப்பீர்களேயானால் அவர்கள் உங்களை வழி கெடுக்கவோ, உங்களை பித்னாவில் ஆக்கவோ முடியாது."

"கெட்டவர் சிநேகத்தைவிட்டும் நீங்கியிரும்; ஏனென்றால் (அவரோடு சிநேகம் வைப்பீராகில்) உம்மையும் கெட்டவருடனே கணிக்கப்படும்."

இந்தத் திவ்விய வாக்கியத்தால் நமது நாயகம் ((ஸல்) அவர்கள், தங்களுடைய உம்மத்துக்களைக் தீயவர்களுடையவும், பித்னாக் காரர்களுடையவும், சகவாசத்தை விட்டும் வெகுதூரம் விலகி இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

**நிச்சயமாக எவர்கள், அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் நிராகரித்துவிட்டு, அல்லாஹ்வுக்கும், தூதர்களுக்கும் இடையில் பிரிவினை செய்துவிடக் கருதி (தூதர்களில்) "சிலரை விசுவாசிப்போம்; சிலரை நிராகரிப்போம்" எனவும் கூறி (நிராகரிப் புக்கும் விசுவாசத்திற்கும்) மத்தியில் ஒரு பாதையை ஏற்படுத்த விரும்பு கின்றார்களோ, அத்தகையோர், நிச்சயமாக நிராகரிப்போர்தான். நிராகரிப்போருக்கு, நாம், இழிவுதரும் வேதனையையே சித்தப்படுத்தி வைத்திருக்கின்றோம்.** *(4:150-151)*

ஆண்டவன் நம் யாவரையும் பித்னாக்காரர்களான, கெட்டவர் களின் தீங்கில் நின்றும் காப்பாற்றுவானாக.

சகோதரர்களே! இறைவனது கட்டளைக்கும், நமது நாயகம் (ஸல்) அவர்களின் அறிவிப்பிற்கும் ஏற்ப, நாம் மேற்கூறிய சுன்னத் வல் ஜமா அத்தின் அடிப்படைப் பெரியார்களின், சொல், செயலைப் பின்பற்றுதல் அவசியமாகும். இதற்கு மாற்றமாக அவர்களை, அறிவீனத்தால் வழி தவறிய கூட்டத்தினர்கள் போன்று, வெறுப்பதும், நிந்திப்பது மிகப் பெரிய குற்றமும் பாவமும் ஆகும்.

அல்கமா (ரலி) அறிவித்திருப்பதாவது:- ''ஒரு பெரும்காபிலாக் (பிரயாணிகள்) கூட்டத்துடன் நாங்கள் சென்றோம். எங்களில் ஒருவரைத் தலைவராக நியமித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து வந்தோம். ஒருநாள் இரவு, அவர் ஹல்ரத் அபூபக்கர், உமர், உதுமான் மற்றும் ஸஹாபாக்களையும் இகழ்ந்து கொண்டிருந்தார். நாங்கள் அவரிடம் சென்று ''நீர் எதற்காக அந்தப் பெரியார்களை ஏசுகின்றீர்'' என்று வினவினோம். அதற்கவர் எந்த ஒரு பதிலும் சொல்லவில்லை. விடிந்ததும் பிரயாணத்தின் தூரம் அனுசரித்து வாகனங்களைத் தயார் செய்துகொண்டு, தலைவரின் உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டி ருந்தோம். அவரிடமிருந்து யாதொரு தகவலும் வரவில்லை. அவருடைய ஜாகையில் சென்று பார்த்த போது, அவர் சம்மணம் போட்டிருந்தார். அவரது கால்கள் இரண்டும் துணியால் மூடப்பட்டிருந்தன. நாங்கள் துணியை நீக்கிப் பார்த்தபோது கால்கள் பன்றியின் கால்கள்போல் இருக்கக் கண்டோம். ஆகவே, அவரது வாகனத்தை நாங்கள் தயார் செய்து, அதில் அவரைத் தூக்கி உட்காரவைத்தோம். அவர் வாகனத்திலிருந்து குதித்து உருமாறி எங்கோ மறைந்து போனார். பின்னர் நாங்கள் யாரும் அவரைப்பற்றி எதுவும் அறிந்து கொள்ளக் கூடவில்லை'' என்பதாகும்.

(ரவ்ளதுல் உலமா)

நாம் கண்ணியமிக்கப் புண்ணிய ஸஹாபாக்களைப் போற்றிப் புகழ்ந்து, நேசித்து, அன்னாரின் அன்பைப் பெறுவோமாக!

**மேற்கூறிய ஹத்யாக்கள் நான்கும் எம்பிரான் முஹம்மது முஸ்தபா ரஸூலே கரீம் 'ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம்' அவர்களுக்குரியன வாகும்.**



# 9-வது தகுதியாளர் றூஹு (ஆன்மா)

## 17

றூஹு தனக்குத்தான் ஹத்யா நான்கு
 ருசிக்கும் நித்திரை குறைப்பதுவும்
சாகு மளவும் அல்லாஹ்வுக்காக
 சகல நேரமும் திக்ரு செய்வதும்
ஆகுமாம் பேச்சைக் குறைப்பதுவும்
 ஆன குடிப்புத் தீன் குறைப்பதுவும்
ஆக இது நான்கும் வேணுமென
 அரவ முரைகேட்கும் ஆண்டோர் சொன்னார்.

**அரும்பதவுரை:-**

றூஹு =ஆன்மா, ருசிக்கும்=இன்பமளிக்கும். திக்ரு=தியானம். அரவம்=பாம்பு, ஆண்டோர்=நபிகள் பெருமானார் (ஸல்).

### ஆன்மாவைப் பற்றியவிளக்கம்

وَيَسْـَٔلُونَكَ عَنِ الرُّوحِ قُلِ الرُّوحُ مِنْ أَمْرِ رَبِّي وَمَا
أُوتِيتُم مِّنَ الْعِلْمِ إِلَّا قَلِيلًا ۝

**(நபியே!) றூஹைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். அதற்கு நீர், ''அது இறைவனின் கட்டளையால் ஏற்பட்டது: (அதைப் பற்றி) வெகு சொற்ப ஞானமேயன்றி உங்களுக்குக் கொடுக்கப் படவில்லை. (ஆதலால் அதன் நுட்பங்களை நீங்கள் அறிந்து கொள்ள முடியாது)'' என்று கூறுவீராக.**

மரணத்திற்கு முன்னும், பின்னும் ஆன்மாவின் நிலை எப்படி இருக்கும் என்பதை வரையறுத்துக் கூறுதல் முடியாத காரியம்.

ஆன்மாவின் உண்மையானது சூக்கும உலகத்தைச் சார்ந்ததாகும். அதைப்பற்றிச் சிறிதளவேனும் அறிந்து கொள்ள வேண்டுமாயின், ஆத்மஞானப் பரிபக்குவத்தின் அனுபவத்தாலன்றி, மற்ற எந்தவிதக் கலைஞானப் பயிற்சியாலும் அறிய முடியாது.

ஆன்மா (உயிர்) என்பது வேறு; உடல் என்பது வேறு; ஆன்மா (ஆலமுல் மலகூத்) பரலோகத்தைச் சேர்ந்தது. உடலோ, (ஆலமுஷ்

ஸஹாதத்து) இகலோகத்தைச் சேர்ந்தது. உடலானது ஆன்மாவி லிருந்து வேறாக இருந்தாலும், அது ஆன்மாவுடன் சம்பந்தமுடைய தாகவே இருக்கிறது. அதாவது, உடலால் செய்யப்படும் ஒவ்வொரு நற்செய்கையினாலும், ஆன்மாவிலே ஒரு ஒளி பிறக்கின்றது. ஒரு கெட்ட செய்கையினால் ஆன்மாவை ஒரு இருள் வந்தடைகின்றது. இங்ஙனம் கூறப்பட்ட ஒளி நற்பதவிக்கும், இருள் தீயபதவிக்கும் காரணமாக அமைகின்றன. இந்தச் சம்பந்தம் காரணமாக, ஆன்மாவுக்குப் பூரண நற்குணங்கள் உண்டாவதற்குரிய நியமங்களை உடலினால் இயற்றுவதற்கே மனிதன் இந்த உலகிற்குக் கொண்டு வரப்பட்டான். எனவே, மனிதனின் வாழ்வு, மரணம் இந்த இரண்டோடும் உறவு கொண்டிருக்கும் பொருளையே ஆன்மா என்றழைக்கப்படும். மனிதனைப் படைப்பதற்கு முன்னமேயே, ஆன்மாவானது, ஆன்ம லோகத்தில், ஞானம், பிரியம், காதல் முதலிய விசேட குணங்களோடு சம்பூரணமாக விளங்கியது.

மனிதன் தனது தாயின் வயிற்றில் கருத்தரித்த நேரம் முதலே, ஆன்மா அவனது தேகத்தோடிணைந்து, இந்த உலகத்தில் அவனது காரியாதிகளால் தனக்குரிய ஒரு பங்கைப் பெற்றுக் கொண்டு, மரணத்திற்குப் பின் மற்ற உலகத்திற்குப் போய் விடுகிறது.

ஆன்மாவானது உடம்பில் நம் வெளிப்பார்வைக்கு எட்டாமல் மறைந்திருக்கிறது. அதன் அடையாளம் மட்டும் நம்மவர் பார்வைக்குத் தோன்றும், ஏனெனில், உறுப்புகளால் உண்டாகும், எந்தவகைச் செயல்களும், அதன் வேலைதான். ஆன்மா பிரிந்த பிறகு, உடல் உதவாக்கரை ஆகின்றது.

மரணத்திற்குப் பின் ஆன்மா முற்றும் சுதந்திரமாகி விடுவதோடு, மிக்க தத்துவமுடையதாகி விடுகிறது. மனிதனது உடம்புக் கூட்டில் அது கைதியாக இருக்கும்போதே, தான் நாடியதெல்லாம் செய்து முடித்ததென்றால், கூட்டைவிட்டு வெளியேறியவுடன், அது எவ்வளவு முழு உரிமையுடன் இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே உலகத்தில் மனித உடலோடு இணைந்திருந்த ஆன்மாவுக்கு, மரணத்திற்குப் பின்பும் பூரண சுதந்திரமும், நிறைந்த சக்தியும் அவசியம் இருந்தே தீரவேண்டும் என்பது தெளிவு.

நமதருமை நாயகம் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள்.

''மையத்தானது உனது பாதரட்சையின் சத்தத்தையும் கேட்கிறது. (கப்ருஸ்தான் வழி நீங்கள் செல்வீர்களாயின்) அதைப் பார்த்து, உங்கள்மீது ஈடேற்றம் உண்டாகுக! நாங்களும் உங்களோடு வந்து சேர்பவர்கள்தான் என்று கூறுங்கள்.'' (புகாரி ஷரீப்)



இந்த மேன்மை மிக்க ஹதீதிலிருந்து, மரணமுற்றோர் தமது ஆன்ம சக்தியால், நமது பேச்சுகளைக் கேட்கிறார்கள் என்று அறியக்கிடக்கிறது.

''மரணமடைந்தோர் கூறும் மறுமொழியின் சப்தத்தை மனு, ஜின் என்ற இந்த இரு வர்க்கத்தாரைத் தவிர மற்ற வர்க்கங்கள் எல்லாம் கேட்கின்றன.'' (நா-வா)

'அப்துல் முத்தலிபு' (ரலி) அவர்கள் மகள் (நபியின் மாமியார்) ஸபியா (ரலி)வை கப்றில் அடக்கியபோது, கப்ரருகில் நாயகம் (ஸல்) உட்கார்ந்து கப்ராளிக்கு ''என்னுடைய நபி, முஹம்மது, அவர் என் சகோதரரின் புத்திரர் என்று சொல்க'', எனச்சொல்லிக் கொடுத்தார்கள். அப்போது ஸஹாபாக்கள்; ''அல்லா(ஹ்)வின் ரஸூலே! இதென்ன?'' எனக் கேட்டதற்கு, ''முன்கர் வ நகீர் இந்தக் கபுராளியிடம் கேள்விகள் கேட்கும் மத்தியில், அவரது மார்க்கத்தைப்பற்றியும் கேட்டார்கள். அதற்குப் பதில் சொல்லமுடியாது அவர் தயங்கினார்'' எனக் கூறினார்கள். அப்போது ''அல்லா(ஹ்)வின் ரசூலே! தாங்கள், உங்கள் மாமியாருக்குப் படித்துக் கொடுத்துவிட்டீர்கள். எங்களுக்கு யார் படித்துக் கொடுப்பார்?'' எனக் கேட்க, அப்பொழுது,

**''புதைகுழியில் (கப்ரில்) வினவப்படும் வேளையில், ஒரு முஸ்லிம் அல்லா(ஹ்) அன்றி தெய்வம் வேறில்லையென்றும், நிச்சயமாக முஹம்மது (ஸல்) அல்லா(ஹ்)வின் தூதராவர் என்றும் சாட்சியம் பகர்வார்; அஃது விசுவாசம் கொண்டவர்களை (''லா இலாஹ இல்லல்லாஹு'' எனும்) உறுதி வாக்கின்மீது அல்லா(ஹ்) இம்மையிலும் மறுமையிலும் உறுதிப்படுத்துகின்றான்'' (என்ற இந்த வாக்கியம் வெளியாக்கப்பட்டது.) (14:27)**

நமதருமை நாயகம் (ஸல்) அவர்கள், தமது மகனார் ஹஸ்ரத் இபுராஹிம் (ரலி) அவர்களுடைய கபுருக்கு அருகே (ஜன்னத்துல் பகீயில்) உட்கார்ந்து கொண்டு, மையித்து அடக்கியதும், 'தல்கீன்' என்ற பெயரில் சில வாக்கியங்களை ஓதினார்கள் என்பதற்கு ஆதாரம் ஸஹீஹ் கிதாபுகளில் இருக்கிறது.

அரபியில் 'தல்கீன்' ஓதப்படுவதுபோல், அதைத் தமிழிலும் மொழி பெயர்த்து கூறப்படுமானால், கபுரு ஸ்தானத்தில் கூடி இருக்கும் பொது மக்களுக்கு மிகுந்த உள்ளுணர்தல் ஏற்பட்க்

கூடியதாக இருக்கும். பொதுவாக ஒவ்வொரு முஸ்லிமும் தல்கீனின் அர்த்தத்தை உணர்ந்து கொள்வது முக்கியமாகும் என்பதைக் கருதியே இங்கு தரப்படுகிறது:-

## தல்கீன்

### (ஞாபகமூட்டுதல்)

**மூலமும் உரையும்:-**

***லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி*** *(3)முறை*

வணங்குதற்குரியோன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹுத் தஆலாவின் திருத்தூதராயிருக்கும்,

***குல்லுமன் அலைஹா' பானிவ்வ யப்கா வஜ்ஹு ரப்பிக துல் ஜலாலி வல் இக்ராம்.***

பூமியில் நடந்தோடித் திரியும் படைப்புகளெல்லாம் அழிந்து பட்டுப் போய்விடும். சங்கையும் வலுப்பமுமுடைய உமது நாயன் அழிவில்லாமல், எந்தக்காலமும் முன்போல் நிலைத்திருப்பான்.

***குல்லு நப் ஸின் தாஇகதுல் மவ்த்தி.***

உயிர்களனைத்தும் மவுத்தை அனுபவிக்கிறதாக இருக்கும்.

***வ இன்ன மாத்து வப் பவ்ன உஜூரகும் யவ்மல் கியாமதி.***

நீங்கள் செய்த செய்கைகளுக்கான கூலிகளை, உங்களுக்கு நிறைவேற்றிக் கொடுக்கப்படுகிறதெல்லாம் உங்களை எழுப்பப்படும் கியாம நாளில்தான்.

***ப மன் ஸுஹ் ஸிஅ அனின் நாரி வ உத்து கிலல் ஜன்னத' ப கத் பாஸ், வ மல் ஹயாதுத் துன்யா இல்லா மத்தா உல்குரூஹி.***

ஆகவே, அந்த இடத்தில் எவரொருவரை நரகத்தை விட்டும் அப்புறப்படுத்தி சுவனபதியில் நுழைவிக்கப்பட்டால், நிச்சயமாக அவர் பாக்கியம் பெற்றுவிட்டார், அன்றியும், இந்த உலகத்தில் உண்டான மிகத் தாழ்மையான வாழ்க்கை மயக்கமுடைய சுகம் பெறுதலே அல்லாது வேறில்லை.

***'யா அப்தல்லா ஹிப்ன அமதில்லாஹி'*** *(யா அமதல்லாஹி பிந்த அமதில்லாஹி)**

---

* கீழே கோடு உள்ள சொற்கள், எழுத்துக்களுக்குப் பகரம் அடைப்புக் கோட்டினுள் உள்ளவை பெண்களைக் குறிக்கும்.



*அல்லாஹுத் தஆலா உடைய அடியாளின்,* ***மகனாகிய*** *(மகளாகிய) அல்லாஹுத் தஆலாவின்* ***அடியானே,*** *(அடியாளே).*

***உதுகுரில், (உதுகுரீ) அஹ்தல்லதீ குந்த (குந்தி) அலைஹி பீ தாரித் துன்யா வகரஜ்த (வகரஜ்தி) அலைஹி இலாதாரில் ஆகிரத்தி.***

இந்த உலகத்தில் நீர் ஒப்புக்கொண்டிருந்த அறுதிமான மென்ற ஈமானுடன், மறு உலகத்தளவில் புறப்பட்டுவிடடீர், அதை நீர் நினைவு வைத்துக் கொள்ளும்.

***குந்த (குந்தி)' பீ ஹயாத்தி க (கி) தஷ்ஹது (தஷ்ஹதீன்) அன் லா இலாஹ இல்லல்லாஹு வ அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹி.***

இந்த உலகில் நீர் உயிருடன் இருக்கும்போது 'லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி' என்ற திருக் கலிமாவைக் சொல்லி உண்மை கொண்டவராக இருந்தீர்.

***வ தஷ் ஹது (வதஷ்ஹதீன) அன்னல் மவ்த்த ஹக்குன், அன்னல் கப்ர ஹக்குன், வ அன்ன முன்கரன் வ னகீரன் வ மஸ் அல தஹுமா ஹக்குன்.***

நிச்சயமாக, நீர் மரணிக்கிறது உண்மை என்றும்; உம்மை அடக்கம் செய்யப்படும் கப்ரு உண்மை என்றும்; அதில் வரும் முன்கர். நகீர் என்ற இரு மலக்குகளும் உண்மை என்றும்; அந்த இருவர் கேட்கும் கேள்விகள் உண்மை என்றும்; நீர் அறிந்து உண்மை கொண்டிருந்தீர்.

***வ அன்னல் பஃத ஹக்குன், வ அன்னல் ஹிஸாலுப ஹக்குன், வ அன்னல் ஸுவால ஹக்குன், வ அன்னல் ஜவாப ஹக்குன், வ அன்னஸ் சிராத்த ஹக்குன், வ அன்னல் மீஸான ஹக்குன், வ' அன்னல் ஜன்னத்த ஹக்குன்,வ அன்னன் நார ஹக்குன்.***

நிச்சயமாக, உம்மைக் கப்ரில் நின்றும் உயிர் கொடுத்து எழுப்பப்படுதல் உண்மை என்றும்; நன்மை தீமைகளை கணக்குக் கொடுத்தல் உண்மை என்றும்; கேள்வி கேட்பது உண்மை என்றும்; அதற்குப் பதில் சொல்வது உண்மை என்றும்; பாலம் கடப்பது உண்மை என்றும்; நன்மை தீமைகளை வைத்து நிறுக்கும் தராசு உண்மை என்றும்; சுத்தமானவர்கள் புகும் சுவனம் உண்மை என்றும்; குற்றவாளிகள் புகும் நரகம் உண்மை என்றும், அறிந்து கொண்டிருந்தீர்.

***வ அன்ன ஷபா அத ரஸூலில்லாஹி ஸல்லலல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஹக்குன், வ அன்ன லிகா அல்லாஹி த பா ரக வத ஆலா ஹக்குன்.***

இன்னும், நிச்சயமாக இரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், உம்மத்தோர்களுக்கு மன்றாட்டம் செய்வது உண்மை என்றும்; கண்ணியமும் மேன்மையுமுடைய அல்லாஹுத் தஆலாவை முஃமின்களெல்லோரும் தரிசிப்பது உண்மை என்றும் நீர் அறிந்து உண்மை கொண்டிருந்தீர்.

**அல் ஆன கத் ஸிர்த (கத்ஸிர்த்தி) பைன அத் பா கிஹ்ஸ் தறா வ்பீம ஹல்லதில் ஹல்கா வ பைன அஸாக்கிரில் மவ்த்தா.**

பூமியின் தட்டுகளுக்கிடையிலும், நசுப்பிக்கப்பட்ட கூட்டம் குடியிருக்கும் தலத்திலும், மரணித்தோர்களின் சேனைக் கூட்டங்களுக் கிடையிலும் இப்போது நீர் ஆகிப்போனீர்.

**ப இதா ஜா அகல் (அகில்) மலக்கானில் கரீமானில் அளீ மானில், ஹா இலானி மு அக்கலானி பிக (பிகி) முன் கருன் வனகீருன் அலைஹிமா மினல்லா ஹிஸ்சலாம், ப அய் களாக்க (களாக்கி) வ அஜ்ல ஸாக்க (ஸாக்கி) ப லா யஹூ லாக்க (லாக்கி) வலா யரூ, ஆக்க (ஆக்கி) ப இன்ன ஹுமா கல்கானி மின் கல் கில்லாஹி.**

இப்போது உம்மைக்கொண்டு சாட்டப்பட்ட அமனி வருத்துகிற வலுப்பமாகிய சங்கையான முன்கர், நகீர் என்ற இரு மலக்குகள், உம்மிடத்தில் வந்து உம்மை விழிப்பாக்கி, எழுப்பி, உட்கார வைப்பார்கள். உம்மை அந்த இருவரும் அமனி வருத்தித் திடுக்கிடச் செய்வார்களேயானால், நீர் தைரியமாக திடுக்கிடாமலிரும். அந்த இருவரும் அல்லாஹுத் தஆலாவுடைய படைப்பில் நின்றும் இரண்டு படைப்பாக இருக்கும். அந்த இருவர் பேரிலும் அல்லாஹுத் தஆலாவில் நின்றும் ஸலாம் (சாந்தி) உண்டாவதாக.

**வ இத ஸஅ லாக் க (கி) மன் ரப்பு க (கி) வமன் ந லுபிய்யுக (கி) வ மா தீனு க (கி) வமா கிப்லது க (கி) வ மா இமாமு க (கி) வ மன் இக்வானு க (கி).**

உம்மிடத்தில் அந்த இருவரும், உம்மைப் படைத்து வளர்த்த நாயன் யார்? உம்மை இரட்சிக்க வந்த நபி யார்? மக்கு நேர் வழிகாட்டிய மார்க்கமென்ன? நீர் வணங்குவதற்கு முன்நோக்கும் தலம் எது? உம்மை நல்வழி திருப்பிய இமாமென்னும் குரு யார்? உமக்கு உடன்பிறப்பானவர்கள் யாவர் என்று கேட்பார்களாகில்

**ப குல் ( ப கூலி) லஹுமா நபிலி ஸானின் பஸீஹின் தலிகின் ஸலிகின் லுபி லா ஜஸ இன்வலா ஹலஃஇன். ப குல் (ப கூலீ)**



**அல்லாஹு ரப்பீ, வமுஹம்மதுன் நபி, வல் இஸ்லாமு தீனி வல் கஃபத்து கிப் லதீ வல் குர் ஆனு இமா மீ, வல் முஸ்லி மூன இஃக் வானீ,**

அந்த இருவருக்கும் நீர், நடுக்கம், பயமில்லாமல், தங்கு தடை இன்றி நயமான வார்த்தைகளைக் கொண்டு, 'அல்லாஹுத் தஆலா என்னுடைய நாயன் என்றும்; முஹம்மது நபி எனது நபி என்றும்; இஸ்லாம் என்ற மார்க்கம் என்னுடைய மார்க்கமென்றும்; மக்காவின் நடுத்தலமான கஃபா எனது முன்நோக்கும் தலமென்றும்; என்னை நேர்வழி காட்டவந்த இமாம் குர்ஆனென்றும்; முஸ்லிமானவர் களெல்லோரும் என் உடன் பிறப்புகளென்றும் விடை பகர்வீராக'!

**அலா தாலிக் த (கி) குலிக் த (தி) அலா தாலிக் த(கி) ஹுய்யீத் த (தி) வ அலைஹி முத் த (தி) வ அலைஹி துலுப் அது (அதீன) இன்ஷா அல்லாஹுத் தஆலா யவ் மல்கியா மத்தி அந்த (அந்தி) மினல் ஆமினீன்.**

இந்த வகையான ஈமானின் பேரிலேதான் உம்மைப் படைக்கப் பட்டது; அதன் பேரில்தான் உமக்கு வாழ்வு கொடுக்கப்பட்டது; அதன் பேரிலேதான் உம்மை மவுத்தாக்கப்பட்டது; அதன் பேரிலேதான் இன்ஷா அல்லாஹுத் தஆலா கியாம நாளையில் உம்மை எழுப் பப்படும். நீர் அச்சம் தீர்ந்து நல்லடியார்கள் கூட்டத்தில் ஆயிருப்பீர்.

**தப் பத க (கி) ல்லாஹு லுபில் கவ்லித்ஸா பிதி......(3)**

ஈமானின் பேரில் நிலையான சொல்லைக்கொண்டு அல்லாஹுத் தஆலா உம்மை தரிபாடாக்கி வைப்பானாக!

**யுதப் பி துல்லா ஹுல்லதீன ஆமனூ பில் கவ்லித் ஸா பிதி பில் ஹயாத்தித் துன்யா வ பில் ஆகிறதி.**

ஏக இறைவன், ரஸூல், வேதம், இறுதிநாள் இவைகளைக் கொண்டு விசுவாசங்கொண்ட முஃமினானவர்களை, இம்மையிலும் மறுமையிலும் ஹக்கு சுப்ஹானஹு வத ஆலா ஈமானின் பேரில் நிலையாக்கி வைப்பானாகவும்,

**யா அய்யது ஹன் நப் ஸுல் முத்ம இன்ன துர் ஜிஈ இலா ரப் பிகி ராளியத் தம் மர் ளிய்யா.**

நிலையான நப்ஸே! நீ பொருந்தியதாகவும், உன்னைப் பொருந்த மாக்கப்பட்டதாகவும், உனது ரப்பளவில் மீண்டு போய்விடு.

**பது குஃலீ பீ இபாதீ வத குஃலீ ஜன்னதி.**

எனது நல்லடியார்களுடன் நப்ஸே! நீயும் சேர்ந்து சுவனத்தில் புகுந்து சுகம் பெற்றுக்கொள்.

**இன்னல்லாஹ வமலா இ கத ஹு யுஸல்லூன அலன்ன பிய்யி யா ஹய்யு ஹல்ல தின ஆமனூ ஸல்லூ அலைஹி வசல்லி மு தஸ் லீமா, அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் வபாரிக் அலைஹி.**

**தஃ வாஹும் ʼபீ ஹா சுப் ஹான கல்லா ஹும்ம வத ஃஹய்யதுஹும் பீஹா சலாமுன் வ ஆ கிறு தஃவா ஹும் அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.**

மையித்தைக் கபுரில் அடக்கம் செய்து, மண்ணைத் தள்ளும் போது, ஒவ்வொருவரும் யாஸீன், தபாரகல்லதீ அல்லது அல்ஹம்து, ஸலவாத்து போன்ற தமக்குத் தெரிந்ததை ஓதுவார்கள். பின்னர்:- தல்கீன் ஓதும்போது அமைதியாக நின்று கேட்பது மிக்க உணர்ச்சியைத் தரும்.

கபுருஸ்தானில் நின்று உலக விவகாரங்கள் பேசுவதை நமதருமை நாயகம் (ஸல்) கண்டித்து விலக்கி இருக்கிறார்கள். *(ஹதீது)*

## ஆன்மாவும், நரக நெருப்பும்

ஆன்மாவில் நரகத்திற்கேதுவான மூன்றுவித நெருப்புகள் உண்டு. அவற்றுள் ஒன்று:- இந்த உலகத்தில், தான் உவந்திருந்த பொருள்களை விட்டுப் பிரிவதினால் உண்டாகிற (வேதனையாக) பரிதாப நெருப்பு. இரண்டாவது:- தான் செய்த வெறுக்கத் தகுந்த பாவங்களால், மனத்தை எப்போதும் உறுத்தும் வெட்க நெருப்பு. மூன்றாவது:- அல்லாஹுத் தஆலாவின் 'ஜமாலை' தரிசிக்க அருகதையற்று, அவனின் ஆதரவற்றுப் போவதினாலுண்டாகும் துக்க நெருப்பு.

இந்த மூன்று நெருப்புகளும், சரீரத்திற்கு ஏற்படுபவை அல்ல. ஆன்மாவுக்கே உரியனவாகும். மானிடர்கள் இந்தமூன்று நெருப்பையும், இந்த உலகத்திலிருந்தே தங்களோடு கொண்டு செல்கின்றார்கள். ஆகவே, இந்த நெருப்புகளுடைய தீங்குகளை விட்டும், நமது ஆன்மாவைக் காத்து இரட்சிக்கவே, ஆன்ம உணவு தேவையாகும்; அந்த உணவால் ஆன்மா சாந்தி அடைகிறது. ஆகவே, அந்த வகையில் எல்லோராலும் இலகுவாய் பின்பற்றக்கூடிய நான்கு முக்கிய ஹத்யாக்களாகிய நற்சாதனங்களைக் கீழே தருகின்றோம்.



# ரூஹு (ஆன்மா)வுக்குரிய ஹத்யாக்கள் நான்கு

## 1-வது ஹத்யா அறிதுயில் (நினைவோடு நித்திரை செய்தல்)

إِنَّ رَبَّكَ يَعْلَمُ أَنَّكَ تَقُومُ أَدْنَىٰ مِن ثُلُثَيِ اللَّيْلِ وَنِصْفَهُ
وَثُلُثَهُ وَطَائِفَةٌ مِّنَ الَّذِينَ مَعَكَ ط

**(நபியே!) நிச்சயமாக, நீரும், உம்முடன் இருப்போரில் ஒரு கூட்டத்ினரும், சற்று ஏறக்குறைய இரவில் மூன்றில் இரண்டு பாகம் அல்லது பாதி அல்லது மூன்றில் ஒரு பாக நேரம் (இரவில் விழித்துத் தொழுகையில்) நின்று (வணங்கி) வருகின்றீர்கள் என்பதை நிச்சயமாக-மது இறைவன் (நன்கு) அறிவான்.**

நபிகள் நாதரும், அவர்களின் தோழர்களும், எப்போதும் அறிதுயில் கொண்டவர்களாக, இரவில் விழித்து வணக்கத்திலேயே ஈடுபடுகிறார்கள் என்பதை இறைவன் சிறப்பித்துக் கூறியுள்ளான். (அன்றியும்)

**''நிச்சயமாக இரவில் உறக்கத்தினின்றும் உணர்ந்து எழுவது ஆன்மாவைப் பழக்கி, (அடக்கி வைப்பதுடன்) எதனையும் மனம் வாக்கு ஒத்துக் கூறும்படியும் செய்கின்றது.''** *(173-6)*

'ருசிக்கும் நித்திரைக் குறைப்பதுவும், என்று ''பாடலில் ஆசிரியர் கூறியிருப்பதால், ஒரே படுக்கையில் இருவர் இன்புற்று சயனிப்பதைக் குறைக்க வேண்டும். அன்றியும் தம்மையும், இறைவனையும் மறந்து நித்திரை கொள்ளாமல், சதா ஆண்டவனை ஞாபகம் செய்து திக்ரு, பிக்று போன்ற தியானத்திலேயே மூச்சைச் செலுத்த வேண்டும். மேலும், எறும்பு போன்ற சிறு பிராணி தேகத்தில் ஊர்வதும், மெல்லிய இரைச்சல் போன்ற சத்தம் காதுக்குக் கேட்பதும், தெரிந்தவனாக

நித்திரை செய்தால், இரவில் தொழுகைக்கும் மற்றும் வணக்கங்களுக்கும் வேண்டி எந்த நேரத்தில் விழித்துக்கொள்ள நாடுகிறோமோ? அந்த நேரத்தில் தடையின்றி விழித்துக்கொள்ள முடியும்.

ரஸூல் நாயகம் (ஸல்) அவர்கள்:- ''நம்முடைய நாயன் பின் சாமத்தில், முன் வானத்தில் இறங்கி, என்னைக் கூப்பிடுகிறவன் உண்டா? நான் பதில் சொல்கிறேன்; என்னிடம் ஏதேனும் கேட்பவன் உண்டா? அதைக் கொடுக்கிறேன்; என்னிடத்தில் பிழை பொறுக்கத் தேடுகிறவன் உண்டா? நான் பிழை பொறுக்கின்றேன், என்று சொல்லி அழைப்பான் எனத் திருவுளமானரர்கள்.

அன்பும் இரக்கமும் ஒன்றாகக் கலந்த இந்த விஷயத்தை நாம் நன்கு சிந்தித்துப் பார்க்கும்பொழுது, நம்மீது இரங்கி, தினந்தோறும் ஆண்டவன் நம்மைக் கூப்பிடுகிறான் என்பதும், அவன்மீது நமக்கிருக்கும் நாட்டத்தை விடவும் அவனுக்கு நம்மீது அதிக நாட்டம் இருக்கிறதென்பதும் தெளிவாகும். ஆகவே கிருபையாளனாகிய அல்லாஹ்வைச் சதா நினைந்து தியானிப்போமாக.

## 2-வது ஹத்யா
## இறுதிவரை இறைவனை தியானித்தல்

فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَكُنْ مِّنَ السَّاجِدِينَ ۝ وَاعْبُدْ رَبَّكَ حَتَّىٰ يَأْتِيَكَ الْيَقِينُ ۝

**''(நபியே!) நீர் உம் இறைவனைத் துதி செய்து புகழ்ந்து அவனுக்குச் சிரம் பணிந்து வணங்கும்; உமக்கு 'எகீன்' (என்னும் மரணம்) ஏற்படும் வரையில் (இவ்வாறே) உம் இறைவனை வணங்கிக் கொண்டிருப்பீராக.'' *(2:152)***

**''என்னைத் தியானியுங்கள்; நான் உங்களைத் தியானிக்கிறேன். இன்னும் (உங்களுக்களித்த பாக்கியத்திற்காக) எனக்கு நன்றி செலுத்துங்கள்; இன்னும் நீங்கள் எனக்கு மாறுசெய்யாதீர்கள்.''**
***(கலாமுல்லா(ஹ்)***



''ஒரு மணி நேரம் அல்லா(ஹ்)வை தியானம் செய்வதானது, ஒரு வருடத்தின் வணக்கத்தினும் சிறந்ததாயிருக்கிறது.''

''எவன் அல்லா(ஹ்)வுக்கு வழிபட்டு, அவனது ஞாபகத்தில் இருந்தானோ? அவனது மேல் மிச்சமான நோன்புகளும், தொழுகைகளும், குர்ஆன் ஓதுவதும், குறைவாக இருந்த போதிலும் சரியே, அவன் அல்லா(ஹ்)வை நினைத்தவனாகிவிட்டான். இன்னும், எவன் அல்லா(ஹ்)வுக்கு மாறு செய்தானோ? அவனது தொழுகையும், நோன்பும், குர்ஆன் ஓதுவதும் எவ்வளவு அதிகமாக இருந்தபோதிலும் சரியே, அவன் அல்லாஹ்வை மறந்தவனாகி விட்டான்.''
*(ஹதீதுகுதுஸி)*

'என்னைச் சதா நினையுங்கள்' என்று இறைவன் கூறியிருப்பதற்கு, என்னை மனத்தாலும், மொழியாலும் தியானித்து திக்ரு செய்வதிலும், சதா வணக்கங்களில் ஈடுபடுவதிலும், எனக்கு எப்போதும் வழிபடுங்கள்'' என்பது கருத்து.

''ஆதமின் மகனே! நீ என்னை எப்பொழுதும் ஞாபகம் செய்தால் நான் உன்னை என் மனத்தில் ஞாபகம் செய்வேன்; நீ என்னை ஒரு கூட்டத்தில் திக்ரு செய்தால், நான் அதைவிடச் சிறந்த கூட்டத்தில் உன்னை திக்ரு செய்வேன்; நீ என்னை நோக்கி ஒரு சாண் நெருங்கி வந்தால், நான் உன்னை நோக்கி ஒரு முழம் நெருங்கி வருவேன்.''
*(ஹதீதுகுதுஸி)*

ஒரு சமயம் ஈஸா (அலை) அவர்கள் சில மனிதர்களைக் கண்டார்கள். அவர்கள் உடல் மெலிந்தும், முகம் சோர்ந்தும் இருந்தனர். அதிலிருந்து அவர்கள் பெரும் தவம்புரிபவர்கள் எனத் தெரிந்து, அவர்களை நோக்கி ''உங்கள் விருப்பம் யாது?'' என்று கேட்டார்கள். அதற்கு அந்த மக்கள், ''அல்லா(ஹ்)வின் வேதனைக்குப் பயந்தே தவம்புரிகிறோம்'' என்றார்கள். அதற்கு ஹல்ரத் ஈஸா (அலை) அவர்கள், ''அல்லா(ஹ்)வுக்குப் பயந்து ஈடேற்றத்தை நாடிய நீங்கள், வேறு வணக்கங்கள் செய்யாமல் வெறுமனே இருப்பதைவிட, இங்ஙனமாவது திக்ரு செய்கிறீர்களே'' என்று கூறியவர்களாக அப்பால் சென்றார்கள்.

பின்னர், சில மக்களைக் கண்டார்கள். அவர்களிடத்தும் திக்ரு செய்பவர்களுக்குரிய அடையாளங்களைக் கண்டு ''நீங்கள் விரும்புவதென்ன?'' என வினவினார்கள். ''நாங்கள் அல்லா(ஹ்)வின் கிருபை

யையும், சுவர்க்கத்தையும் விரும்புகிறோம்,'' என்று விடை யளித்தார்கள். அதற்கு அவர்கள் ''அவனது கிருபை உங்களுக்கு எளிதில் கிடைக்க வேண்டுமாயின், அது உங்கள் இந்தத் தவத்தால் தானா கிடைக்க வேண்டும்?'' என்று கூறினார்கள்.

அதன்பின், வேறு சில மனிதர்களைக் கண்டார்கள். அவர்களிடத் திலும் கடும் வழிபாடுகளின் அடையாளங்கள் காணப்பட்டன. ''நீங்கள் விரும்புவது யாது?'' என்று வினவினார்கள். அதற்கு அவர்கள் ''அவன் எங்கள் நாயன்; நாங்கள் அவனது அடியார்கள், அதனாலேயே நாங்கள் அவனை வணங்குகின்றோம்; அவனையன்றி வேறொன்றை நாங்கள் பயந்தோ, அல்லது அதனை ஆசித்தோ, அவனை நாங்கள் வணங்க வில்லை; எங்கள் கடமையைச் செய்து வருகிறோம்'' என்று கூறினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ''நீங்களே கலப்பற்ற அந்தரங்க சுத்தியுள்ள அடியார்கள்; தூய்மையும் உண்மையும் உள்ள வணக்கத்தர்கள், சுயநலம் கருதாதவர்கள்'' என்று புகழ்ந்தார்கள்.

மனிதன் இறைவனைத் தம்தம் விருப்பத்தை நாடி வணங்குவதை விட, தனது கடமையை உணர்ந்து களங்கமற வணக்கம் செய்வது மேலானதாகும் என்பதை மேற்கண்ட நிகழ்ச்சி தெளிவுபடுத்துகிறது.

## 3-வது ஹத்யா

## பேச்சைக் குறைத்து, நாவைப் பேணல்

إِذْ يَتَلَقَّى الْمُتَلَقِّيَانِ عَنِ الْيَمِينِ وَعَنِ الشِّمَالِ قَعِيدٌ ○

مَا يَلْفِظُ مِن قَوْلٍ إِلَّا لَدَيْهِ رَقِيبٌ عَتِيدٌ ○

**''(ஒவ்வொரு மனிதனின்) வலப்புறத்தில் ஒருவரும், இடப் புறத்தில் ஒருவருமாக (அவனவன் செய்யும் செயலை) குறிப்பெடுத்துக் கொண்டிருக்கின்றனர். (அவன்) எதைக் கூறியபோதிலும், அதனை எழுத காத்துக் கொண்டிருக்கும் ஒருவர், அவனிடம் இல்லாமலில்லை.'' (அவன் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் உடனுக்குடன் பதியப்படுகின்றது.)**



**''நிச்சயமாக உங்கள்மீது காவலாளர்களை ஏற்படுத்தப்பட்டிருக் கின்றனர். அவர்கள் (மலக்குகளிலுள்ள) கண்ணியமான இரு எழுத்தாளர்கள். நீங்கள் (பேசுபவை) செய்பவைகளையெல்லாம் அவர்கள் (தவறாது) அறிந்து (எழுதிக்) கொள்வார்கள்.''**

**(82:1-12)**

இரவும், பகலும் சேர்ந்து 24 மணி நேரம் ஆகின்றது. ஒவ்வொரு மனிதனும் ஒரு மணிக்கு 180 தடவை மூச்சுவிட்டு மூச்சு வாங்குகின்றான். இதன்படி 24 மணி நேரத்திலும் 4320 தடவை மூச்சுவிட்டு மூச்சு வாங்குகின்றார்கள்.

''ஒவ்வொரு மூச்சுக்கும் இரண்டு கேள்விகள், அதாவது மூச்சு விடும்போது, என்ன காரியம் செய்து கொண்டிருந்தீர்? மூச்சு இழுக்கும் போது என்ன காரியம் செய்து கொண்டிருந்தீர்? என்று கேட்கப் படுவார்.'' ஆகையால் நம்முடைய ஒவ்வொரு பேச்சையும் மூச்சையும் வீணிலே கழிக்காமல், தீனியத்தான காரியங்களிலும் தியானங் களிலுமே கழிப்பது மிகவும் சிறந்ததாகும்.

'எவர் வீணான விஷயங்களை அதிகமாகப் பேசி நேரத்தை வீணாக்குகின்றாரோ? அவருக்குப் பாவம் அதிகமாகிறது. எவரது பாவம் அதிகமாகிறதோ? அவரது இதயம் மரணித்துவிடுகிறது. எவரது இதயம் மரணித்து விடுகிறதோ? அவர் நரகம் அடைவார்'' என்று நபிகள் நாயகம் (ஸல்) நவின்றுள்ளார்கள்.

மனிதன் பேசுபவை, செய்பவைகள் நல்லவையாக இருந்தால், அவனது வலது புறமிருக்கும் மலக்கு எழுதிக் கொள்வார்; கெடுதலாக இருந்தால் இடது புறமிருக்கும் மலக்கு எழுதிக் கொள்வார்; இவர்களுக்கு 'கிறாமுன் காத்திபீன், ''என்று பெயர். இந்த இரு மலக்குகளும் இறுதித் தீர்ப்பு தினத்தன்று சாட்சியம் கூறுவார்கள்.

நாவினுடைய கெடுதல்கள் பல இருக்கின்றன. அதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வது சிரமமானதால், தன்னாலியன்ற மட்டும் வாய்மூடி மௌனியாக இருப்பதைக் காட்டிலும் போற்றத்தக்க செயல் வேறு எதுவுமில்லை. ஆதலால், மனிதன் அவசியமான அளவேயன்றி அதிகமாகப் பேசாமலிருத்தல் மிகவும் நல்லது.

எவர்களுடைய பேச்சும், உணவும், உறக்கமும் அவசியத்தின் அளவாயிருக்குமோ? அவர்களை 'அப்தால்கள்' என்று அறிவாளிகள் கூறுகின்றனர்.

''**எ**வன் வாய் மூடினானோ? அவன் ஈடேற்றம் பெற்றான்; வயிறு, மறைவான உறுப்புகள், நாக்கு இவற்றின் தீங்குகளைவிட்டும் காக்கப் பட்டவன் எவனோ? அவன் முழுவதும் காக்கப்பட்டவன் ஆவான்.''

மஆது (ரலி) அவர்கள் ரஸூல் நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து ''யாரஸூலுல்லாஹ்! வணக்கங்களில் எதுமிக மேலானது?'' எனக் கேட்டபோது, நபி (ஸல்) அவர்கள்:- தங்கள் திருவாயிலிருந்து, நாக்கை வெளியே நீட்டி, அதன்மேல் விரலை வைத்தார்கள். அதன் கருத்து நாவைப் பேண வேண்டும் என்பதாகும்.

ஸெய்யிதுனா உமர் பாரூக் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:-

அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள், தங்கள் நாவைப்பிடித்து இழுத்துக் கொண்டும், அதை தேய்த்துக் கொண்டும் இருப்பார்கள். அதைப் பார்த்த நான் அவர்களை நோக்கி, ''ரஸூலுல்லாஹ்வின் கலீபாவே! தாங்கள் என்ன செய்கின்றீர்கள்?'' என்று வினவியபோது அவர்கள்:- ''இந்த நாவானது என்னைப் பல நேரங்களில் தோல்வி அடையச் செய்கின்றது'' என மொழிந்தார்கள்.

''**வ**ணக்கங்களில் மிகவும் இலகுவானதை நான் உங்களுக்குத் தெரிவிப்பதானால், அது மௌனம் காக்கும் நாவும், மங்களமான நற்குணமுந்தான்.''

''**அ**ல்லாஹுவின்மீதும், இறுதித் தீர்ப்பு நாளின்மீதும், விசுவாசம் கொண்டிருப்பவன் எவனோ? அவனுக்குக் கூறுகிறேன்; நீ நன்மொழிகளையன்றி, தீயவற்றைப் பேசாதே; அல்லது வாய்மூடி மௌனமாக இரு.''

''**மௌ**னமாகவும், கண்ணியத்தோடும் இருக்கிற ஒரு முஃமினை நீங்கள் பார்த்தால், அவரை அடுத்து இருங்கள்; அவர் ஆழிய நுண்ணறி உடையவராகவே இருப்பார்.''

(நா-வா)

அதிகமாகப் பேசாமல் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஸெய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள், 'தங்கள் வாய்க்குள் கற்களை அடக்கி வைத்துக் கொண்டிருப்பார்கள்' எனக் கூறப்படுகிறது.



லுக்மானுல் ஹகீம் (அலை) அவர்கள், தங்கள் சிறு வயதில் ஒரு தனவந்தரிடம் ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் புத்திக் கூர்மையையும், அறிவின் திறனையும் கண்ட எசமானன் அவர்களைப் பரீட்சிக்க எண்ணி,

''ஓ லுக்மானே! நீர் போய் ஒரு ஆட்டை அறுத்து, அதில் மிகவும் நல்ல பகுதி எது என்று பார்த்து, அதை எடுத்துக் கொண்டு வாரும்'' என ஏவினார். லுக்மானுல் ஹகீம் அவர்கள் அப்படியே, ஓர் ஆட்டை அறுக்கச் செய்து, அதன் நாக்கையும், கல்பையும் (இருதயம்) எடுத்து வந்து எசமானிடம் கொடுத்தார்கள். அதைப் பெற்றுக்கொண்ட எசமான் மறுபடியும் ''ஓ லுக்மானே! மேலுமொரு ஆட்டை அறுத்து, அதில் மிகவும் கெட்ட பொருள் எது என்று பார்த்து, அதையும் எடுத்து வாரும்'' என்றார். முன்போலவே லுக்மானுல் ஹகீம் (அலை) அவர்கள், ஒரு ஆட்டை அறுக்கச் செய்து, அதன் நாக்கையும் கல்பையும் எடுத்துவந்து கொடுத்தார்கள். இதைக் கண்ட எசமானன், ''நான் கேட்ட நல்லதும் கெட்டதுமான பொருள்கள் இவைதானா?'' என்ற போது, ''ஆம்! அந்த இரண்டும் நல்லவைகளாகயிருந்தால், அவை போல் நல்ல பொருள்கள் வேறு இல்லை; அந்த இரண்டும் கெட்டு விட்டால், அவற்றைப்போல் கெட்ட பொருள்கள் வேறொன்று மில்லை'' என்று விடை பகர்ந்தார்கள்.

இதிலிருந்து தெரிவது என்னவெனில், மனத்தினால் எந்த விஷயத்தை நினைக்கிறோமோ?' அந்த விஷயத்தை நாவு எடுத்துக் கூறுகின்றது. இதர உறுப்புகள் எதுவும் அந்தவேலையைச் செய்வதில்லை. நிறங்களும் உருவங்களுமான காட்சியேயன்றி வேறொன்றும்,கண்ணின் பார்வைக்குட்பட்டதல்ல; ஒலியேயன்றி வேறு எதுவும் காதின் கேள்விக்குட்பட்டதல்ல; மற்ற உறுப்புகளும் இதே விதமாகவே குறிப்பிட்ட வேலைகளைச் செய்கின்றன. ஒவ்வொரு உறுப்பின் ஆற்றலும், தேகத்தில் ஒரு இடத்தில் மாத்திரமேயன்றி முழு உலகத்தின் மீதும் இல்லை. -ஆனால், நாவின் பேச்சுத் திறனோ? மனத்தின் சிந்தனைத் திறன்போன்று, எல்லா உலகத்தின் மீதும் ஆற்றலுடையதாக இருக்கின்றது. நாவு, நம்முடைய மனத்தில் உருவாகின்ற எண்ணங்களை எடுத்து விளங்குகின்றது. இதுபோலவே பல எண்ணங்களை மனத்திற்குள் செலுத்தவும், அதிலிருந்து வேறு விசயங்களைப் பிறப்பிக்கவும் செய்கின்றது; இதனாலேயே,

''ஒருவனுடைய நாவு நேராகாத வரையில், மனம் நேராகாது; மனம் நேராகாத வரையில், ஈமான் நேராகாது.'' என நபி பெருமானார் (ஸல்) அருளிச் செய்துள்ளார்கள்.

'எவன் ஒருவன் தன் நாவையும், அபத்தை (வெட்க உறுப்பு களை)யும் தீமையான வழியில் செலுத்தமாட்டேன்,'' என எனக்குப் பொறுப்புக் கொடுப்பானோ, அவனுக்காக நான் சுவர்க்க லோகத்திற்குப் பிணை ஏற்றுக் கொள்வேன். இன்னும் ''ஒரு மனி தனுக்குப் பேச்சு அதிகமானால், அவனுக்குப் பாவம் அதிகமாகும். பாவம் அதிகமானால், இருதயம் கெட்டுப்போகும். இருதயம் கெட்டபின் நரகம் புகுவான். ஆகவே வாயை மூடினவனே வெற்றி பெறுவான்.'' (நா-வா)

''காலத்தை அறிந்து நாவைப் பேணுவதும், தான் நன்மையான காரியத்தில் முன்னோக்கியவனாக இருப்பதும் புத்திசாலித்தனம்''
(தாவூது நபி)

ஹல்ரத் லுக்மான் (அலை) அவர்கள் தங்கள் மகனுக்குக் கூறிய அறிவுரையில்:-

''அருமை மகனே! பேசுவது வெள்ளி என்றால், வாய் மூடி இருப்பது தங்கமாகும். ஒருவர் பேசும்போது, நடுவில் பேசுதல் நல்லதன்று. வீண் பேச்சு வெறும் இச்சையே தவிர, அதனால் ஒரு பிரயோசனமுமில்லை. ஆகவே, வாய்மூடி மௌனமாக இருந்து கொண்டு, கியாம நாளின் நிலையைச் சிந்தித்துப் பயந்து கொள்ளல் வேண்டும்.'' இன்னும்,

''எந்த மனிதனுடைய நாவு அவனுடைய அதிகாரத்தின் கீழ் இல்லையோ? அவனைப் பார்க்கிலும், நாவை நறுக்கிவிட்டு, ஊமையனாகச் செவிடனாக ஒரு மூலையில் உட்கார்ந்திருப்பவன் மிக மேலானவன்.'' என அருளினார்கள்.

ஆதமுடைய மகன் விடிந்து எழுந்தவுடன், அவனுடைய எல்லா உறுப்புகளும் நாவை பார்த்துச் சொல்லும்; ''நாக்கே! எங்களில் நீ அல்லா(ஹ்)வைப்பயந்துகொள். நாங்கள் நலமாக இருப்பதும், கெட்டுப்போவதும் உன்னாலேதான். நீ நேர்மையாக இருந்தால், நாங்கள் சுவனம் புகுவோம்; நீ கோணிப் போவாயெனில், அதன் காரணத்தால் நாங்கள் நரகத்திற்குச் சென்று நெருப்பில் கிடந்து வெந்து நோவோம்'' என்பதாகும்.



''நாவால் விளையும் தீமைகைள் பல. அவற்றில் முக்கிய மானவை: புறம் பேசுதல், கோள் சொல்லுதல், பொய் பேசுதல், பொய் சாட்சியம் கூறுதல், எவரையும் நியாயக் கேடாய் ஏசுதல், முஸ்லிம்களையும், பிராணிகளையும் சாபம் இடுதல், முஸ்லிம்களைத் தூசித்தல் முதலியனவாம். இப்படிப்பட்ட பாவங்களால் மிகுந்த மக்கள் நரகம் சேர்வார்கள்'' என்பதாக ஹதீதில் வருகிறது.''
(நா. வா)

ஆதலால் நாவினாலுண்டாகும் தீமைகளை விட்டுத் தன்னைப் பேணிக் கொள்வது, மனிதனுடைய முக்கியமான செயல்களில் ஒன்றாயிருப்பதால் நாவைப் பேணி நலம் பெறுவோமாக.

## 4-வது ஹத்யா
## உணவை, குடிப்பைக் குறைத்தல்

كُلُوا وَاشْرَبُوا وَلَا تُسْرِفُوا ۚ إِنَّهُ لَا يُحِبُّ الْمُسْرِفِينَ ○

**''(நீங்கள்) புசியுங்கள் பருகுங்கள். எனினும் (அவற்றில்) அளவு கடக்காதீர்கள்; ஏனென்றால் நிச்சயமாக அல்லாஹ் அளவு கடந்து விரயம் செய்பவரை நேசிப்பதில்லை.''**

மனிதன் அளவுக்கு மீறிப் பட்டினியாக இருத்தலும், வரம்பை மீறி வயிறு புடைக்கப் புசித்தலும் கூடாதவையாகும். ஏனெனில், அளவுக்கு மீறிப் பட்டினியாக இருத்தல், தேக வலிமையைக் குன்றச் செய்வதுடன், முக்கிய குறிக்கோளான நல்அமல்களைச் செய்யவும் தெம்பு இல்லாது போய்விடும். வரம்பு மீறு வயிறு புடைக்கப் புசித்தாலோ, சோம்பல் மிகுந்து தொழுகை முதலிய கடமையான வணக்கங்ககளை மன அமைதியாக நிறைவேற்ற முடியாமல் தடை ஏற்படும். அன்றியும், அதனால் தேக வலிமை அதிகரித்து, மிருக உணர்ச்சி மேலிட ஏதுவாகிறது. ஆகையினால், தான் இந்த இரண்டி னாலும் விளையும் மறைமுகமான கேடுகள் நிகழாமல் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தவிரவும், அதிகஉண்டிக்காரர் சோம்பல் மிகுந்தவரே. ஆகையால் தொழுகை முதலான வணக்கங்களை மன நிம்மதியுடன் நிறைவேற்ற

முடியாமல், அவசர அவசரமாக நிறைவேற்றுவார்; அல்லது காலங்கடத்தி நிறைவேற்றுவார்; சில சமயம் விட்டு விடவும் செய்வார். அதே நபர் அளவுக்கதிகமாகப் பட்டினியாக இருந்தாலோ? பலம்குன்றி, நல்அமல்களை அறவே செய்யமுடியாது போய் விடுகிறார். ஆகவே, ஒரு செயலும் செய்யாமல் ஒரே அடியாக விடுவதைப் பார்க்கிலும், ஓரளவேனும் நிறைவேற்றுவது சிறந்த தன்றோ.

கொஞ்சமாக உண்பவருக்குச் செலவு குறையும், அதிகப் பொருள் தேவையாகாது. அதிகப் பொருள் தேவைப்படுவ தனாலேயே பல சிரமங்களும், சங்கடங்களும், அதனால் ஆபத்துக் களும், அதன் நிமித்தம் பாவங்களும் உண்டாகின்றன. ஏனெனில், தினந்தோறும் நல்ல உணவை அதிகம் உண்ண வேண்டும் என்று விரும்பும் ஒருவன், அதை எவ்வாறு சம்பாதிப்பதென்ற யோசனையில் நாள் முழுவதையும் போக்குவான்; சில சமயம் வஞ்சகம், களவு, கொலை ஆகிய மோசமான காரியங்களில் ஈடுபட்டு சங்கடங் களுக்கும், சிரமத்திற்கும் ஆளாவான்.

ஹுகமாஹ், தத்துவ நிபுணர்களில் ஒருவர் கூறுவதாவது:

''நான் எனது தேவைகளில் சிலவற்றை ஒரு உபாயத்தினால் தவிர்த்துக் கொள்வேன். அதாவது: எதன்மேல் எனக்கு நாட்டம் இருக்குமோ, அதை வேண்டாது விட்டுவிடும்படி என் மனத்துக்குச் சொல்லி, அதை வெறுக்கச் செய்வேன். இது எனக்கு மிகவும் இலேசாக இருக்கிறது.''

எவனொருவன் தேவைக்கதிகமாகப் புசிக்கின்றானோ, அவனிடத்தில் நிச்சயமாக கீழ்கண்ட ஆறு குறைபாடுகள் காணப்படும்.

1. வணக்கத்தில் இன்பத்தைப் பெறமாட்டான்.
2. நுட்பமான விசயங்களை ஞாபகப்படுத்த முடியாதபடி தன்னுடைய ஞாபக சக்தியை இழந்துவிடுவான்.
3. மக்கள்மீது இரக்கமற்றவனாகவே இருப்பான். (ஏனெனில் மற்றவர்களுக்கும் வேண்டும் என்ற எண்ணமில்லாது, தானே அதிகம் புசிப்பதினால், மற்றவர்களைப் பற்றிய நினைவற்றுப் போகிறது.)



4. (இவனுக்கு) இறை வணக்கம் அதிக சிரமமான காரியமாகத் தோன்றும்.
5. மிருக இச்சை அதிகரிக்கும்.
6. கூட்டாகத் தொழும் வணக்கங்களில் கலந்துகொள்ள வாய்ப்பில்லாமலாகிவிடும். (என்பவைகளாகும்.)

''நீங்கள் பசித்திருந்தும், தாகித்திருந்தும் உங்கள் நப்சோடு போர் புரியுங்கள். அதன் நன்மை மதப்போர் (ஜிஹாத்) செய்வதின் நன்மையைப் போன்றதாகும்.'' (நா-வா)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், ''அதிக மேம்பாட்டை உடையவன் யார்?'' என்று வினவியபோது, ''எவனொருவன் ஊண் சுருங்கியவனாகவும், உடையில் மானத்தை மறைப்பதில் போது மாக்கிக் கொண்டவனாகவும் இருக்கின்றானோ' அவனே மேம்பாடுடையவன்'' எனக் கூறினார்கள். (நா-வா)

''எல்லாஅமல்களுக்கும் முதன்மையானது எதுவெனில், அது பசித்திருத்தல், பழைய ஆடைகளை அணிதல் ஆகியவையாகும். இதனால் தன்னை உயர்த்தலும், பெருமையடையாதிருத்தலும் ஏற்படு கின்றன. இது நுபுவ்வத்தின் (நபித்துவத்தின்) ஓர் அம்சமாக இருக்கிறது.'' (நா-வா)

''மிதமிஞ்சிய உணவு அறிவைக் கெடுத்து, ஆரோக்கியத்தைக் குறைக்கும்; அவயவங்களை தம்பிக்கச் செய்து, நரம்புகளுக்குத் தளர்ச்சியைக் கொடுத்து, சோம்பலையும், தூக்கத்தையும், அதிகப் படுத்தும். இன்னும் ஆயுளையும் குறைத்து அல்லா(ஹ்)வையும் மறக்கச் செய்யும்.'' (நா-வா)

ஆதமின் மகன் வயிற்றைவிடத் தீங்கான பையை நிரப்பவில்லை. அவனுக்குப் போதுமான உணவானது; அவனுடைய முகந்தண்டைப் பலப்படுத்தக்கூடிய ஒரு சில பிடி சாதமேயாகும். இப்படி இல்லா விட்டாலும், மூன்றில் ஒரு பங்கு உணவாலும், ஒருபங்கு தண்ணீ ராலும், ஒரு பங்கு சுவாசத்தாலும் நிரப்புதல் போதுமானதே. இன்னும் மனிதனில் மிகத்தீயவன் யாரெனில், மிதமிஞ்சித் தின்பவனும், தனியே உண்பவனும், அடிமையை அடித்துக் கொடுமை செய் பவனும், தானும் தர்மம் கொடாமல், கொடுப்பவனையும் கெடுப் பவனுமேயாவான்.

உண்பதிலும் குடிப்பதிலும், மரியாதையும் ஒழுக்கமும் இருத்தல் வேண்டும். உண்பதற்கு முன் கையையும், வாயையும் சுத்தப்படுத்திக் கொள்ளுதல், வறுமையைப் போக்கும். உண்ட பிறகு கழுவிக் கொள்ளுதல்; வறுமையை நீக்கி பயித்தியத்தையும் போக்கும்.

உண்ணும்போது உப்பைக்கொண்டே ஆரம்பித்து, உப்பைக் கொண்டே முடியுங்கள். உப்பானது எழுபது வகை வியாதிகளுக்கு மருந்தாகும். வெண்குட்டம், கருங்குட்டம், பல்வலி, வயிற்றோட்டம், தொண்டைவலி முதலியன அந்த வியாதிகளில் சில.

உங்களில் ஒருவன் உணவருந்த ஆரம்பிக்கும்போது **'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்'** என்று சொல்லி ஆரம்பிப்பானாக. ஒவ்வொரு பிடிக்கும் 'பிஸ்மி' சொல்வது அழகு. ஒவ்வொரு பிடிக்கும் பிஸ்மி சொல்லி உண்ணப்படும், ஆகாரத்தைக் குறித்து இறுதி நாளில் கேள்வி கணக்குக் கிடையாது. உண்டு முடிந்தபின் **'அல்ஹம்துலில்லாஹ்'** என்று கூறுங்கள்.

"உணவை ஆறவைத்து உண்ணுகள். அப்படிச் செய்தல் பரக்கத் தாகும்; வியாதிகளுக்கு மருந்துமாகும். சூடான உணவு பரக்கத் தில்லை; உணவு வைக்குமிடம் சுத்தமாகவும், ஒரு தனி விரிப்பின் மேலும் இருக்கவேண்டும். காட்டு மிருகங்கள் போல் உணவை மோப்பம் பிடிக்காதீர்; சூடான உணவை வாயால் ஊதாதீர்; தொண்டை விக்கினால் அல்லது தாகம் அதிகரித்தாலொழிய இடையில் தண்ணீர் அருந்தாதீர்; கீழே விழுந்தவற்றை எடுத்துத் தின்னுங்கள்; அதைச் செய்த்தானுக்கு விட்டு விடாதீர்கள்." (நா-வா)

எவனொருவன், தான் உண்ணும் பாத்திரத்துக்கு வெளியே விழும் உணவை எடுத்துத் தின்பானோ, அவன் சதாகாலமும் உணவில் குறைவின்றி இருப்பான். அது மாத்திரமல்ல, அவனுக்கும் அவனது பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும், வறுமை உண்டாகாது. "கீழே விழுந்த உணவுப் பொருளை எடுத்து உண்பது, வானுலக கன்னியருக்குரிய மஹர்போன்றது."

உணவருந்தும்போது, இந்த ஒழுக்கங்களைக் கடைபிடித்து அதன் நலனைப்பெற நாம் ஏவப்பட்டுள்ளோம் என்பதை அறிவோமாக.



## 10-வது தகுதியாளர் அல்லாஹ் (ஜல்...)

**18**

ஹைய்யுன் கையூமாம் ஹக்குக்காக
ஹத்யா நாலுதான் வேணுமென்றார்
செய்யும் நன்மைகொண் டேவுறதும்
தீங்கை விட்டுமே விலக்குறதும்
ஐயமற யார்க்கும் உபதேசமும்
யார்க்கும் தாழ்மையாய் நடப்பதுவும்
வையகத்தார்க எறிய வேண்டி
வழுத்தினேன் ஹதிய்யா நாற்பதே.

*அரும்பதவுரை:-*

ஹைய்யுன்-நித்திய ஜீவன். கைய்யூம்=தன்னால் தானே நிலைத்தவன். ஹக்கு-உண்மையாளன். வழுத்தினேன்-சொன்னேன்.

### அல்லாஹுவின் தனிச்சிறப்பு

آيةُ الكُرسي - اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَۚ اَلْحَيُّ الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ
سِنَةٌ وَّلَا نَوْمٌ ۗ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ۗ مَنْ ذَا الَّذِيْ
يَشْفَعُ عِنْدَهٗٓ اِلَّا بِاِذْنِهٖ ۗ يَعْلَمُ مَا بَيْنَ اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ
وَلَا يُحِيْطُوْنَ بِشَيْءٍ مِّنْ عِلْمِهٖٓ اِلَّا بِمَا شَاۤءَ ۚ وَسِعَ كُرْسِيُّهُ
السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ وَلَا يَـُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِيُّ الْعَظِيْمُ

**"அல்லா(ஹ்) (எவ்வித மகத்துவமுடையவனென்றால்) அவனைத்தவிர வேறு நாயன் (இல்லவே) இல்லை. அவன் நித்திய ஜீவன்; என்றும் நிலையானவன். அவனைச் சிறுதூக்கமோ, பெரும் துக்கமோ பீடிக்காது வானங்கள், பூமியிலுள்ளவை யாவும் அவனுடையதே! அவனுடைய**

**அனுமதியின்றி, அவனிடத்தில் (எவருக்காகிலும்) யார்தான் பரிந்து பேசக்கூடும்? அவர்களுக்கு எதிரிலிருப்பவற்றையும் புறம்பாக இருப்பவற்றையும், அவன் நன்கறிவான்; அவனுடைய விருப்பமின்றி அவனுக்குத் தெரிந்தவற்றிலிருந்து யாதொன்றையும் (மற்றொருவரும் தங்கள் அறிவால்) அறிந்து கொள்ள முடியாது. அவனுடைய அத்தாட்சி வானங்கள், பூமியைவிட விஸ்தீரணமாயிருக்கின்றது. அந்த இரண்டையும் கா(த்து இரட்சி)ப்பது அவனுக்குச் சிரமமன்று. மேலும் அவன், மிகவும் உயர்ந்தவன்; மகத்தானவன்''** (கலாமுல்லா(ஹ்) ஆயத்துல் குர்ஸி) (2:255)

இந்த ஆயத்தானது, அல்லாஹுத் தஆலாவின் 'தாத்தையும்' 'ஸிபத்து'களென்னும் தன்மைகளையும் பற்றிய முக்கிய விசயங்களைத் தெளிவாக அறிவிக்கின்றது. இதனால்தான் கோமான் நபி (ஸல்) அவர்கள், ''திருகுர்ஆனில் மிகவும் மகத்துவமுள்ள ஆயத்தானது 'ஆயத்துல் குர்ஸி'யாகும். இதனை ஒருவர் ஓதுவாராயின் அல்லாஹுத் தஆலா ஒரு மலக்கை அனுப்புகிறான். அந்த மலக்கானவர் அந்த நேரத்திலிருந்து மறுநாள்வரை, அவருக்கு நன்மைகளை எழுதுவதுடன், அவரது தீமைகளையும் அழிக்கிறார்''. என அருளியுள்ளார்கள்.

'ஹையு' என்ற சொல்லுக்கு உயிரானவன் என்று பொருள். ஆனால், இந்தப்பதம் இங்குச் ஜீவதாதுவால் ஆகி, அழியக்கூடிய ஜீவனை உணர்த்தாமல், உணர்வு, நாட்டம், அசைவு முதலிய தத்துவ ஜீவனையே உணர்த்தி நிற்கின்றது. ஆகவே அல்லா(ஹ்) உயிரானவன் என்பது - அவன் நித்தியமானவன்; அவனுக்கு மரணம், அழிவு என்பன இல்லை என்பதைக் குறிக்கும்.

'கையூம்' என்ற சொல் அல்லா(ஹ்) எல்லா பொருள்களையும் எப்பொழுதும் நிர்வகிக்கின்றான் என்னும் கருத்தை சுட்டிக்காட்டும். ஒவ்வொரு பொருளின் சம்பந்தமான ஆக்கல், அழித்தல், காத்தல் முதலியவற்றைச் செய்து கொண்டிருக்கிறான் என்னும் உண்மை இதனால் அறியக் கிடக்கிறது.

மகத்துவமான இந்த இரு திருநாமங்களை நாம் திரும்பத் திரும்ப உச்சரிப்பதால், நமது துயரங்களும் துன்பங்களும் அநேகமாக அகன்று போவதை நாம் காண்கின்றோம். இதிலிருந்து இந்த இரு பெயர்களும் அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமானவை என அறிந்து கொள்ளலாம். இந்த இரு திருநாமங்களின் மகிமையைப் பன்முறை சோதித்தறிந்த தீர்க்கத்தரிசிகள் பலரும், பல மேதாவிகளும் 'அல்ஹையுல் கையூம்' என்பது ''இஸ்முல் அஃலமாகும்'' என்று காண்கின்றார்கள்.



ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரித்தோரை உயிர்ப்பிக்கப் புகுங்கால் ''யாஹையு! யாகையூம்!!'' என்றே பிரார்த்தனை புரிந்தார்கள். சமுத்திரத்தில் செல்வோர். தங்கள் மரக்கலம் மூழ்கிவிடும் என்று பயந்தால் ''யாஹையு! யாகையூம்!'' என்று துதித்தே துஆ கேட்பார்கள்.

'பத்ரு' சண்டை நடந்து கொண்டிருக்கையில் நான் ஹஸ்ரத் நாயகம் (ஸல்) அவர்களைக் காணச் சென்றேன். அப்போது அவர்கள் சுஜூது செய்தவர்களாக ''யாஹையு! யாகையூம்!!'' என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார்கள். இன்னும் இறைவன் அவர்களுக்கு வெற்றி அளிக்கும்வரை, இதே விதமாகவே பிரார்த்தனை புரிந்து கொண்டிருந்தார்கள். (ஹஸ்ரத் அலீ, ரலி)

இந்த இஸ்முல் அஃலம் ''நம் குர்ஆன் ஷரீபில் மூன்று சூரத்துகளில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

1. சூரத்துல், பகராவில்-**''அல்லாஹு லாஇலாஹ இல்லாஹு வல் ஹையுல் கையூம்.''**
2. சூரத்து, ஆல இம்ரானில்-**''அலிபுலாம் மீம் அல்லாஹு லாஇலாஹ இல்லாஹுவல் ஹையுல் கையூம்.''**
3. சூரத்து, தாஹாவில்-**''வ அனதில் உஜூஹ் லில்ஹையுல் கையூம்.''** எனவாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்:-

''சூரத் பாத்திஹா, ஆயத்துல் குர்ஸி, ஆமனர் ரசூல், ஷஹிதல் லாஹு அன்னஹு, இன்னத்தீன இந்தல்லாஹில் இஸ்லாம், குலில்லா ஹும்ம மாலிகல்முல்கி எனப்படும், இந்த ஆறு ஆயத்துகளும் இறைவனிடம்:- ''இறைவா! எங்களை உனக்கு மாறு செய்பவர்கள் மீதும் இறக்குவாயோ?'' எனக் கேட்டபோது இறைவன்:-

''உங்களை ஒருவன் தொழுகைக்குப் பின்னால் நியமமாக ஓதிவருவானாகில், நான் சுவனபதியை அதிலுள்ள சகல பாக்கியங்களுடனே அவனுக்கு ஒதுங்கும் தலமாக்கி, அவனை 'ஹளீரதல் குதுஸி' எனும் மேலான தலத்தில் சேர்த்து, நாள் ஒன்றுக்கு என்னுடைய கிருபா நோக்கு கொண்டு எழுபது தடவைநோக்கி, எழுபது நாட்டங்களை நிறைவேற்றுவேன்; அத்தகைய நாட்டங்களில் மிகத் தாழ்ந்தது பிழை பொறுத்தலாக இருக்கும்; அன்றியும், நான் அந்த

அடியானுக்கு, அவனுடைய பகைவர்களிடத்திலிருந்தும், பொறாமைக்காரர்களிடத்திலிருந்தும், வெற்றியைக் கொடுத்து, அவர்களின் தீங்கைவிட்டும் காத்துக் கொள்வேன்'' என்று அருளினான்.

(தப்ஸீர்)

***''நபியே! நீர் (பிரார்த்தித்து) கூறுவீராக! எங்கள் அல்லாஹ்வே! சகல தேசங்களுக்கும் அதிபதியே! நீ விரும்பியவர்களுக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய்; நீ விரும்பியவர்களிடமிருந்து ஆட்சியை நீக்கி விடுகின்றாய்; நீ விரும்பியவர்களை கண்ணியப்படுத்துகின்றாய்; நீ விரும்பியவர்களை இழிவுபடுத்துகின்றாய்; நன்மைகள் யாவும் உன் கையில் தான் இருக்கின்றன.; நிச்சயமாக நீ யாவற்றின்மீதும் பேராற்றலுடையோன்.'' (3-26)***

***''நீ தான் இரவைப் பகலில் நுழைய வைக்கின்றாய். நீ தான் பகலை இரவில் நுழைய வைக்கின்றாய். இறந்ததிலிருந்து, உயிருள்ளதை வெளியாக்குவதும் நீயே! உயிருள்ளதிலிருந்து இறந்ததை வெளியாக்குவதும் நீயே! நீ விரும்பியவர்களுக்குக் கணக்கின்றியே அளிக்கின்றாய்.' (3-27)***

எனவே, 'ஹையுல் கையூமாகிய 'அல்லாஹு ஜல்ல ஷஃனுஹு வத ஆலா' நம்மை எல்லா உம்மத்துகளையும்விட மேலான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தில் ஆக்கி, அவர்கள் வாயிலாக இந்த மாபெரும் வழிபாட்டைத் தந்ததற்கு நாம் நன்றி பாராட்டுவதோடு, அவனது லிகாவென்னும் தரிசனத்தை அடைய வேண்டிய வணக்க ஒழுக்கங்களைக் கடைபிடிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும்.

## அல்லாஹ்வுக்குரிய ஹத்யாக்கள் நான்கு

### 1-வது ஹத்யா

### பிறரை, நலவைக் கொண்டு ஏவுதல்

وَلْتَكُنْ مِّنْكُمْ اُمَّةٌ يَّدْعُوْنَ اِلَى الْخَيْرِ وَيَأْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ
وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ ۗ وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ○



***''(விசுவாசிகளே!) உங்களில் ஒரு கூட்டத்தார் தோன்றி, அவர்கள் (மனிதர்களை) நன்மையின் பக்கம் அழைத்து, அதனைச் செய்யும்படி ஏவிப் பாவமான காரியங்களிலிருந்தும் அவர்களை விலக்கிக் கொண்டிருக்கவும்; இத்தகையோர்தான் வெற்றி பெற்றோராவர்.''***

''நன்மைகளை உணர்த்தி தீமைகளைக் கண்டித்தலெனும் இந்தச் செய்கையானது, தீனுடைய வேர்களில் முதல் வேராக இருக்கிறது. எல்லா நபிமார்களும் இதற்காகவே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மனிதர்களின் நடுவே இது இல்லாமல் எடுபட்டுப் போனால், 'ஷரஹு' உடைய எல்லாக் காரியங்களும் கெட்டுப் போய்விடும்.

''நன்மையைச் செய்யும்படி ஏவுவதும், தீமையை விட்டு விலக்குவதும், மனிதர்கள்மீது விதியாக இருக்கிறது. அவசியம் ஏற்படும்போது, ஒருவன் காரணமின்றி அதை விட்டுவிடுவானாகில் அவன் பாவியாவான்.'' (நா-வா)

நன்மைகளைச் செய்யத் தூண்டுவதும், தீயனவற்றை விலக்க முயற்சிப்பதுமான இந்த நல்லகாரியத்தை இறைவன் குர்ஆனில் தொழுகையையும் சகாத்தையும் கூறுகிற இடங்களில் எல்லாம் இதனையும் சேர்த்தே கூறுகின்றான். (அவை பின்வருமாறு)

***''விசுவாசிகளுக்கு நாம் பூமியில் வசதியளித்தோம். அவர்கள் தொழுகையைக் கடைபிடித்தொழுகுவார்கள்; சகாத்தும் கொடுப்பார்கள்; நன்மையான காரியங்களைக் கொண்டே, பாவமான காரியங்களைத் தடை செய்வார்கள்.'' (22-4)***

நபிகள் நாயகம் (ஸல்) மின்பர்படியின்மீது வீற்றிருந்த போது அவர்களிடம் ''மனிதர்களில் சிறந்தவர் யார்?' என்று வினவப் பட்டது. அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்:-

''நன்மையை ஏவி, தீமையை விலக்கி, அல்லாஹ்வுக்காக சன்மார்க்கத்தில் நடந்து பந்துக்களைச் சார்ந்து நடப்பவர்களே மனிதரில் சிறந்தவர்'' என்று பதில் கூறினார்கள்.

நன்மையான காரியங்களை ஏவித் தீமையான காரியங்களை விலக்கி, இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும்படியான ஒரு கூட்டத்தார் இருக்க வேண்டிய 'பர்ளு'.

''உங்களில் ஒவ்வொருவரும் ஆட்டு இடையனைப் போன்றிருக்கின்றீர்கள். இடையனிடம் ஆட்டுக்கிடையைப்பற்றி

வினவப் படுவதுபோல், ஒவ்வொருவரிடமும், அவரது அதிகாரத் துக்குட் பட்டவரின் செய்கைபடிக் கேள்வி கணக்குக் கேட்கப்படும். 'நான் வணங்கிவிட்டேன். என் மகன், மனைவி, நண்பர், வேலை ஆட்கள் பற்றி எனக்குத் தெரியாது என்று கூற முடியாது''.

''நீங்கள் நன்மைகளை உணர்த்தி, அவற்றைச் செய்யும்படி மக்களை ஏவுங்கள்; இல்லாவிடில் அல்லாஹ் மிகப் பொல்லா தவர்களை வேதனையைக் கொண்டு சாட்டுவான்; அப்போது உங்களில் நல்லவர்கள் அந்தக் கூட்டத்திலிருந்து துஆச் செய்தாலும், அதற்குரிய பலன் கிடைப்பதரிது; அன்றியும் ஒரு கூட்டத்தினரிடையே குற்றங்கள் மிகுதியாகச் செய்யப்படும் இடத்தில் ஒருவரும், அதைக் குற்றமெனக் கண்டு தடை செய்யாவிட்டால், பிறகு அவர்க ளெல்லோரையும் சேர்த்து வளைந்துகொள்ளும் ஒரு வேதனையை அல்லாஹ் அவர்களுக்கு அனுப்புவான்; இது போன்ற கூட்டங்களில் வேதனையை அனுப்பப்படாத கூட்டங்கள் எதுவுமிருந்ததில்லை.''

(நா-வா)

''தமது அயலாருக்கு நண்பராகவும், தமது சகோதரர்களால் புகழப்பட்டவராகவும் இருக்கும் ஒருவர், முகத்தாட்சண்யம் காட்டுவாராயின், அவர் சத்தியத்தை விட்டும் விலகியவரேயாவர்.'' என்று இமாம் சுப்யானுத் தவ்ரீ (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

''எவர் நன்மையை ஏவித் தீமையை விலக்குவாரோ? அவர் பூமியில் அல்லாஹ்வுக்கும், அவனது ரஸூலுக்கும் மார்க்கத்திற்கும், (கலீபா) பிரதிநிதியாவர்.''

(நா-வா)

## 2-வது ஹத்யா

## பிறரைத் தீங்கிலிருந்து விலக்குதல்

كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُونَ بِالْمَعْرُوفِ
وَتَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَتُؤْمِنُونَ بِاللَّهِ

**''(விசுவாசிகளே!) நீங்கள்தான், மனித சமுகத்தில் தோன்றிய மிக்க சிரேஷ்டமானவர்கள். (ஏனென்றால்) நீங்கள், (மனிதர்களை) நன்மை யான காரியங்களை (செய்யும்படி) ஏவி, பாபமான காரியங்களிலிருந்து**



**(அவர்களை) விலக்கி, மெய்யாகவே அல்லாஹ்வை விசுவாசிக் கின்றீர்கள்.''**

**(49-9)**

''உங்கள் ஒவ்வோர் உறுப்புக்கள்மீதும், 'ஸதகா' ஏற்பட்டி ருக்கிறது. நற்கருமத்தைச் செய்ய ஏவுவதும் 'ஸதகா'தான். கெட்ட செயலிலிருந்து விலக்குவதும் 'ஸதகா'தான். இன்னும் எந்த ஆண் பிள்ளையாவது, பெண் பிள்ளையாவது கெட்ட செயலிருந்து விலகவில்லையாயின், அல்லா(ஹ்) அவர்களுடைய இருதயத் திலுள்ள ஈமானின் மூன்றிலொன்றை எடுத்துவிடுவான்.''

(நா-வா)

நற்செயல்களைச் செய்வதற்கு ஏவுங்கள், நீங்கள் அவற்றைச் செய்யாதுபோயினும் சரியே; கெட்ட செயல்களை விலக்குங்கள், நீங்கள் தாமே அவற்றிலிருந்து விலகாது போயினும் சரியே.''

(நா-வா)

மேற்காட்டிய ஹதீசை ஆதாரமாக வைத்துக்கொண்டு இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள்:-

''கள் குடிக்கிறவனை விலக்குதல், கள்ளை விற்கிறவன் பேரிலும் கடமையாகும். ஸினாவுக்கு (இச்சைக்கு) கவர்ச்சியைக் காட்டி இழுக்கும் பெண்ணை முகத்தை மூடிக்கொள்ளச் சொல்வதும் விபசாரம் செய்பவனுக்குக் கடமையாகும்'' என்று வரைந்துள்ளார்கள்.

''நற்செயலை ஏவுங்கள், கெட்ட செயலிருந்து விலக்குங்கள். துனியாவை விரும்புவோரையும், இச்சையின் வாய்ப்பட் டோரையும், தம் புத்தியின்மீது பெருமை பாராட்டுவோரையும், நீங்கள் கண்டால், அன்னாரோடு நீங்கள் கூட்டுச் சேராதீர்கள். உங்கள்மேல் மிகக் கவனமாக இருங்கள். உங்களுக்குப் பின் ஒரு காலம் வரும், ஹக்கைப் பற்றிப் பிடிப்பவன் அந்தக்காலத்தில் உள்ளங்கையில் நெருப்பை வைத்துக் கொண்டிருப்பவன் போலிருப்பான். அமல் செய்தவனுக்கு அந்த நாளில் ஐம்பது பேருடைய கூலி உண்டு'' என்று நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அப்போது ''அல்லா(ஹ்)வின் ரஸூலே! அந்த ஐம்பது பேர் எங்களில் ஐம்பது பேர்களா?'' என்று வினப்பட்ட போது ''ஆம்! உங்களில் ஐம்பது பேர்கள்தான்'' என்று கூறினார்கள்.

''உங்களில் ஒருவன் பிறரின் கெட்ட செயலைக்கண்டு, அதைத் தடுப்பதற்குச் சக்தி பெறாமலிருந்தால் அவன் ஆண்டவனை நோக்கி

மூன்று தடவை ''ஆண்டவனே! இது கெட்ட செயல், இதன் மூலம் என்மேல் குற்றங்காணாதே!!'' என்று வேண்டிக் கொள்வானாயின், நற்செயலை ஏவிக் கெட்ட செயலை விலக்குகின்றவனுடைய பலன் உண்டு,'' என நபி பெருமானார் மொழிந்துள்ளார்கள்.

ஸெய்யிதுனா உமர்பாருக் (ரலி) அவர்கள் கூறியிருப்பதாவது:-

''உங்கள் சகோதரர்பால் குற்றங்காணபீர்களாயின், அவர்களுக்கு நற்புத்தி போதித்துத் திருத்தங்கள். அவர்களைப் பாவமன்னிப்புக் கோருவதின் பக்கம் திருப்பும்படி ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள். நீங்கள் உங்கள் சகோதரர்களுக்கு வேண்டி ஷெய்த் தானுக்கு ஒத்தாசையாக இருக்காதீர்கள்.''

அல்லா(ஹ்)வுத் தஆலா நபி யூஷஃ (அலை) அவர்களுக்கு அறிவித்ததாவது:-

''நான் உம்முடைய சமூகத்திலிருந்து 4000 நல்லோர்களையும், 6000 தீயோர்களையும் அழிக்கப் போகின்றேன்'' என்று கூற அதற்கு நபி (ஸல்) அவர்கள்:-

''தீயோர்களை அழிக்க வேண்டியதுதான்; ஆனால், நல்லோர் களை எதற்காக அழிக்க வேண்டும்?'' என்று கேட்டார்க்ள. அதற்கு இறைவன்:-

''நான் எந்த கெட்ட செயல்களுக்காகக் கோபப்படுவேனோ? அந்த கெட்ட செயல்கள்மேல் அவர்களுக்கு வெறுப்பு உண்டாக வில்லை. அன்றியும் அந்தக்கெட்டவர்கள் செய்யும் காரியங்களில் பங்கெடுக்கா விட்டாலும், தடைசெய்ய முனையவில்லை என்று தெரிவித்தான். இதை நபி(ஸல்) அவர்கள் மக்களுக்கு அறிவித்தபோது தீயோர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து பாவ மன்னிப்புத் தேடும்வரை, நல்லோர்கள் பல முயற்சிகள் எடுத்து இறைவனின் கோபத்திற்காளாகாமல் தப்பிக் கொண்டனர்.

''இறுதிநாளில் ஒரு மனிதன் தனக்கு அறிமுகமில்லாத ஒரு மனிதனிடம் வந்தடைவான். அப்போது அவன் ''நீ யார்?'' என்று கேட்க, அதற்கவன் ''இன்ன நாளில் நீ என்னைத் தீய நடத்தையிலிருந்து விலக்கினாயல்லவா? அவன் தான் நான்'' என்று சொல்வான்.

(நா-வா)



'இறுதி நாளில் ஒருவன் வேறொருவனின் மடியைப் பிடித்திழுப்பான்.' அதற்கவன் 'நீ யார்?' எனக்கு உலகத்தில் அறிமுகமில்லையே, எதற்காக என்னைத் தொந்தரவு செய்கிறாய்?'' என்று கேட்பான். அதற்கு முதலாமவன் 'நீ இன்ன இடத்தில் நான் இன்ன பாவம் செய்வதைக் கண்டாய். ஆனால், என்னை விலக்காமல் இருந்துவிட்டாய். நீ விலக்கியிருந்தால் நான் திருந்தி இருப்பேனே!'' என்பான். அப்போது தடுக்காமலிருந்த அவனுடைய நன்மைகளைப் பறித்து, குற்றம் செய்தவனுக்குக் கொடுக்கப்படும்.

(நா-வா)

ஆகவே, ஒருவனது போக்கு கெடுதல் என்று கண்ட மாத்திரத்தில், இயன்றவரைப் பிரயாசை எடுத்துக் கெடுதலிலிருந்து அவனை விலக்கி, நலவின் பக்கம் திருப்புதல் வேண்டும்.

## 3-வது ஹத்யா
## சந்தேகம் தீரும்வரை உபதேசம் புரிதல்

فَذَكِّرْ إِن نَّفَعَتِ الذِّكْرَىٰ ○ سَيَذَّكَّرُ مَن يَخْشَىٰ
وَيَتَجَنَّبُهَا الْأَشْقَى ○

**''(நபியே!) நல்லுபதேசம் (மக்களுக்கு) பயனளிக்கும் வரையில், நீர் உபதேசித்துக் கொண்டே வாரும்; நிச்சயமாக எவன் (அல்லாஹ்வுக்குப்) பயப்படுகின்றானோ? அவன் (இதனைக் கொண்டு) நல்லறிவை அடைவான்; துர்ப்பாக்கியமுடையவனோ, இதிலிருந்து விலகிக் கொள்வான்.''**

''மனிதனே! அறிவுடையோனாக இரு அல்லது அறிவைக் கேட்டு நடப்பவனாக இரு அல்லது அறிவைக் கற்பவனாக இரு; நான்காவதாக இராதே; அதாவது நல்லறிவிலிருந்து விலகிக் கொள்ளாதே. அப்படி நான்காவதாக இருப்பின்; அது உனக்குக் கேட்டை வருவிக்கும்'' (நா-வா)

அறிவு உடையவர் ஆலிமும், முஃமினும் ஆவர்; அறிவைக் கேட்டு நடப்பவன் உண்மை முஃமின்; அறிவைப் படிப்பவன் அறிவுடைய முஃமினாவதற்கு முயல்பவன்; இவற்றில் ஒன்றிலாவது

சேராமல் இருப்பவன், மனித இயல்பற்றவன்; இப்படிப்பட்டவன் தனது தீவினைகளின் பயனைத் தானே அனுபவிப்பான். மேற்காட்டிய நாயக வாக்கியத்தால் அறிந்துக் கொள்ளப்படும் கருத்து இதுவேயாம்.

பூரணமான அறிவுடையோரும் சிலரே; அறிவைக் கற்பவரும் சிலரே. ஆனால் அறிவைக் கேட்டு நடக்கவேண்டியவர் பெரும் பாலோராயிருக்கின்றனர்; ஆகவே அறிவாளிகளின் உபதேச மொழி களைக் கேட்டும், நல்லநூல்களைப் படித்தும், அதன்படி நடப்பதே உண்மை முஃமின்களின் இலட்சணம்.

''ஆலிம்கள் (அறிவுடையோர்) தீர்க்கதரிசிகளின் வாரிசு களாவர்; அவர்கள் உங்களை வழிகெடுக்கமாட்டார்கள்'' என்பது நபி பிரானின் திருவாக்கியம்.

**(ஆகவே) ''உலமாக்களை நிந்திக்கவோ அல்லது பொருட்படுத் தாமலோ அல்லது அவர்களின் வார்த்தைகளைப் புறக்கணிக்கவோ செய்வீர்களாயின், மூதேவியாகிப் பெரும் நெருப்புக்குள் புக நேரிடும்.'' என்று திருகுர்ஆன் போதிக்கிறது.**

திருகுர்ஆனின் ஆதாரங்களோடு, நபிகள் நாதரின் வசனங் களையும் அறிவுடையோர், அறிவில்லாதாரின் இருதயங்களில் நன்கு பதியும்படி செய்து, அவர்களின் சந்தேகங்களையும் நன்கு நிவர்த்தி செய்து நல்வழியில் நடத்த முயல்வது அவசியமாகும்.

படித்த மக்கள், படியாத பாமரர்களுக்கு உபதேசம் புரிவதால், அநேக ஊர்மக்கள் தீய வழிகளைக் கைவிட்டு, நல்வழிகளைக் கடைப்பிடித்து, ஒழுக்கத்திலும் சீர்திருந்தி, வாழ்க்கையில் முன் னேற்றம் அடைகின்றனர். இங்கு ஒரு சம்பவத்தைக் குறிப் பிடுகின்றோம்:-

ஹல்ரத் ஜுனைதுல் பக்தாதீ (ரஹ்) அவர்கள் மக்களுக்கு சமயோசிதமான புத்திமதிகளைப் புகட்டி, அன்னோரை இறைவன் பக்கம் திருப்புவதையே தங்கள் வாழ்க்கையாகக் கொண்டிருந்தார்கள். ஒரு தடவை, மேற்படி ஹல்ரத் அவர்கள் பள்ளியில் பிரசங்கம் புரிந்து கொண்டிருக்கும்போது, ஒருவர் எழுந்து ''நாயகமே! நாங்கள் நேர்வழியைத் தெரிந்து பள்ளிவாசலுக்கு வந்துவிட்டோம். எங்களுக்கு உபதேசம் தேவையில்லை. வெளியிலுள்ள மக்கள் பாவக் கிருத்தி யங்களில் ஈடுபட்டுத் திரிகின்றனர். அவர்களிடம் சென்று உபதேசம் செய்தால் மிக்க உபயோகமாயிருக்குமன்றோ!'' என்று வேண்டினார்.



இதைக்கேட்ட ஹல்ரத் அவர்கள் பள்ளியை விட்டும் புறப்பட்டு, கொஞ்சதூரம் சென்றார்கள். அங்கு ஒரு தோட்டத்திற்குள் மனித சந்தடி கேட்டு அதற்குள் பிரவேசித்தார்கள்.

அங்கு சிலர் குடிப்பதற்காகச் சாராயம் தயார் பண்ணிக் கொண்டிருந்தனர். அவர்கள் ஹல்ரத் அவர்களைக் கண்டதும், சாராயத்தை எடுத்து மறைத்துவிட்டு, ஹல்ரத் அவர்களிடம், வினவலானார்கள். ''நாயகமே! நாங்கள்தான் உலமாக்களின் உபதேசம் வேண்டாமென்று அவர்களை அலட்சியம் செய்து இங்கு ஓடிவந்துவிட்டோமே, இங்குமா! எங்களைத் துரத்திக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?'' என்று அதட்டிக் கேட்டார்கள். அதற்கு ஹல்ரத் அவர்கள், 'நீங்கள் மிரளவேண்டாம். இதோ மறைத்து வைத்திருக்கும் வஸ்துவை நான் அறிவேன்; ஆனால் இதைவிட மிக்க மஸ்துள்ள ஒரு வஸ்துவை நான் தரக்கூடும். உங்களுக்கு அதைப் பெற்றுக்கொள்ள விருப்பமா?'' என்று கேட்டார்கள். ''அப்படி ஒரு வஸ்து இருக்கு மாயின், அதை எங்களுக்குக் கொடுங்கள்'' என வேண்டினர்.

உடனே ஹல்ரத் அவர்கள், அன்னோருக்குச் சில உபதேசங்களை உருக்கமாகப் போதித்து, பின்னர் எல்லோரையும் ஒலுச் செய்வித்து தாங்கள் இமாமாக (முன்னிலையாக) நின்று தக்பீர் கட்டினார்கள். தொழுகையின் கடைசி ஸஜ்தாவில் ஹல்ரத் அவர்கள், ''ஆண்டவா! இவர்களை உனது வாசற்படியில் கொண்டு வந்து சேர்த்துவிட்டேன். இனி அவர்களை நேர்வழியின் பக்கம் திருப்பவேண்டியது உன் பொறுப்பு'' என்று பிரார்த்தனை புரிந்தார்கள். அப்போது அந்த மக்களுக்கு உணர்ச்சி மேலிட்டது. தங்களை மறந்து பேரின்ப மஸ்து பிடித்தவர்களாகி விட்டார்கள். அதன் பின்னர் தங்களின் முந்திய பாவச் செயல்களை நினைத்துப் பச்சாதாப்பட்டு, தெளபாச் செய்து நல்லடியார்களானார்கள்.

## 4-வது ஹத்யா
## விசுவாசிகளுக்குப் பணிந்து நடத்தல்

وَاخْفِضْ جَنَاحَكَ لِمَنِ اتَّبَعَكَ مِنَ الْمُؤْمِنِيْنَ ○

**''உம்மைப் பின்பற்றிய விசுவாசிகளிடம், புஜம் தாழ்த்தி (பணிவாகவும்) நடந்து கொள்வீராக.''**

**"இறுதி நாள் வாழ்க்கையின் வீடானது, பூமியில் மேன்மையையும், பெருமையையும், பிணக்கத்தையும் எவர்கள் விரும்பமாட்டார்களோ? அவர்களுக்காகவே வைத்திருக்கிறோம்." (28:83)**

"பெருமை என் பரிவட்டம். மேன்மை எனது உடை. ஆகவே, எவனாவது இந்த இரண்டிலும் என்னோடு போட்டியிட்டால், அவனை நான் நரகத்தில் தள்ளுவேன்."

(ஹதீது குதுஸி)

நபிகள் நாதர் (ஸல்) திருவாய் மலர்ந்திருப்பதாவது:-

"பணிந்து நடக்காதவன் சுவனம் செல்லமாட்டான். அது மட்டுமல்ல, நரகத்தில் ஒரு வீடு உண்டு. அதற்குள் இவனைப் போட்டுப் பூட்டப்படும். என்றும் தரிசனை கிடையாது" மேலும்,

மூன்று பேர்களோடு அல்லா(ஹ்) அவர்களைத் தனது கிருபா நோக்கால் பார்க்கமாட்டான். அவர்கள் யாரெனில்:

**1. விபசாரம் செய்கிற வயோதிகன்.**
**2. பொய் பேசும் அரசன். (அதிகாரத்திலிருப்பவன்)**
**3. பணிந்து நடவாத பெருமைக்காரன்.**

"இன்னும், எவனொருவன் அல்லா(ஹ்)வை வணங்கித் தாழ்மையுடன் நடப்பானோ! அவன் சுவர்க்கத்தில் மிக உன்னத இடமாகிய 'இல்லிய்யீன்' என்னும் தலத்தில் போய்ச் சேரும்வரை அல்லா(ஹ்) அவனை உயர்த்துவான். மேலும், எவன் ஒருவன் கர்வம் பாராட்டி நடப்பானோ, அவன் நரகத்தில் மிகத் தாழ்ந்த இடத்தில் போய்ச் சேரும்வரை அவனை அல்லாஹுத் தஆலா தாழ்த்துவான்."

(நா-வா)

முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் 'ஸலாம்' சொல்லிக் கொள்ளுதல் பணிந்து நடக்கும் நடத்தையில் மிக முக்கியம் வாய்ந்தது.

**(எவரேனும்) உங்களுக்கு 'ஸலாம்' கூறினால் (அதற்குப் பிரதியாக) அதைவிட அழகான (வாக்கியத்)தைக் கூறுங்கள் அல்லது அதனையே திருப்பிக் கூறுங்கள், நிச்சயமாக அல்லா(ஹ்), யாவற்றையும் கணக்கெடுப் போனாக இருக்கிறான். (4:86)**

'எத்தகைய இஸ்லாம் சிறந்தது'? என ஒருவர் ரஸூல் (ஸல்) அவர்களை வினவினார்; நீர் (வறியார்க்கு) உணவளித்தலும், நீர்



அறிந்தவர்க்கும், அறியாதாருக்கும் 'ஸலாம்' சொல்லுதலுமாம்" என விடையளித்தனர். (மிஷ்காத்)

ஸலாம் சொல்லுதல் சுன்னத்து; ஜவாபு சொல்லுதல் வாஜிபு. இன்னும் ஒவ்வொரு மதத்தரும், ஒவ்வொரு நாட்டினரும், ஒவ்வொரு விதமான காணிக்கை வைக்கும் வழக்கம் அனுசரிக்கின்றனர். நம்முடைய மார்க்கத்தில் 'ஸலாம்' சொல்லுவதே காணிக்கை, இதைவிடச் சிறந்த காணிக்கை வேறில்லை. சுவனவாதிகளுடைய காணிக்கையும் இதுதான் என்று அறிவிக்கப்படுகிறது.

"ஒரு முஸ்லிமிடம் சென்றால், அவரோடு பேசுவதற்கு முன் 'ஸலாமை'க் கொண்டு தொடங்குவதும், கையைப் பிடித்து முஸாபஹா செய்வதும் அவசியமாகும். ஒருவன் ஸலாமுக்கு முன் பேசுவானாகில், முதலில் அவன் ஸலாம் சொல்லுகிற வரையில் அவனோடு மற்றவர் பேச வேண்டாம்." (நா-வா)

ஒருவர் ஸலாம் சொல்லாமல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். நாயகம் (ஸல்) அவரை வெளியே போகச்செய்து, மீண்டும் வந்து ஸலாம் சொல்லி அமரும்படி கோரினார்கள்.

அனஸ் (ரலி) கூறுவதாவது:- நான் பத்து வருடம் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பணிவிடை செய்து வந்தேன். நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு தடவை என்னைப் பார்த்து, "அனஸே! நீ நன்றாய் உனது உடலையும், பிற பொருள்களையும், சுத்திசெய்; அப்போது உனக்கு வயது நீடிக்கும்; நீ எவரிடம் சென்றாலும், ஸலாம் சொல்; அப்போது உனக்கு நன்மைகள் அதிகரிக்கும்; நீ உன் வீட்டிற்குள், உன் வீட்டார் பேரில் ஸலாம் சொல்; அப்போது உன் வீட்டிற்கு நன்மை பெருகும்" என மொழிந்தார்கள். மேலும் அவர்கள் கூறுகிறார்கள்: "நான் பணிவிடை செய்த பத்து வருட காலத்தில், ஒவ்வொரு முறையும் நாயகம் (ஸல்) அவர்களே முந்திக்கொண்டு எனக்கு ஸலாம் சொல்லுவார்கள். ஒரு முறைகூட என்னால் முதலில் அவர்களுக்கு ஸலாம் சொல்லமுடியாமல் போய்விட்டது"

"நீங்கள் வீட்டிற்குள் நுழையும்போதும், வெளியே வரும் போதும் ஸலாம் சொல்லுங்கள். இரு ஸலாமும் வரிசையில் சமமாகவே இருக்கிறது."

"இரண்டு முஃமின்கள் ஒருவருக்கொருவர் கையைப் பிடித்து முஸாபஹா செய்வார்களாயின், அந்த இருவருக்கும் இடையில் எழுபது நன்மைகள் பங்கிடப்படும். அதில், எவர் அதிகமாக முக

மலர்ச்சியோடு இருப்பாரோ' அவருக்கு அறுபத்தி ஒன்பது நன்மைகள் கொடுக்கப்படும். அன்றியும் இரண்டு முஸ்லிம்கள் சந்தித்து ஒருவருக்கொருவர் ஸலாம் சொல்லுவார்களாகில், அவர்களுக்கிடையில் நூறு நன்மைகள் பங்கிடப்படும். அதில் தொண்ணூறு நன்மைகள் ஸலாமை முதலில் தொடங்கியவருக்கும், பத்து நன்மைகள் அதற்குப் பதில் சொன்ன வருக்கும் கொடுக்கப்படும். (நா-வா)

"சவாரிக்காரன் பாதசாரிக்கும், நடப்பவன் உட்கார்ந்திருப்ப வனுக்கும், சிறு கூட்டத்தார் பெரும் கூட்டத்தாருக்கும், சிறியோர் பெரியோருக்கும் பணிவோடு ஸலாம் சொல்லுதல் வேண்டும்."

"ஸலாம் என்பது அல்லா(ஹ்)வின் திருநாமங்களில் ஒன்று. அதை உங்களுக்கிடையில் பரத்திக்கொள்ளுங்கள். மேலும் நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு வைக்காத வரையிலும், சுவர்க்கம் புக மாட்டீர்கள். நிரப்பமான ஈமான் உடையவராகவும் ஆகமாட்டீர்கள். ஆதலின் நான் உங்களுக்கு ஒரு விசயம் சொல்லுகிறேன். அதன்படி நீங்கள் நடந்தால், ஒருவருக்கொருவர் அன்பு வைக்க இடமுண்டாகும். அதாவது உங்களுக்கிடையில் ஸலாமைப் பரவச் செய்யுங்கள்."

"ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுடைய ஸலாமுக்குப் பதில் சொன்னால், அவனுடைய பிழைகளைப் பொறுக்கும்படி மலக்குகள் எழுபது தடவை வேண்டிக்கொள்வார்கள்." இன்னும் "ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமைக் கண்டவுடன் 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று சொன்னால், அவனுக்காகப் பத்து நன்மைகள் குறித்து வைக்கப்படும்." (நா-வா)

ஆகவே, நாம் பணிந்து நடப்பதாகிய நன்மார்க்கத்தை மேற் கொண்டு, நம் சகோதர முஸ்லிம்களுக்கு ஸலாம் கூறி ஸலாமத்துப் பெறுவோமாக.

இந்த உலக மக்கள் ஆண் பெண் சகலரும் மேற்கூறிய நாற்பது ஹத்யாக்களையும், பத்து தகுதியாளர்களுக்கு வேண்டி செவ்வனே கடைப்பிடித்தொழுக வேண்டுமென்ற நோக்கத்தோடு நம் அல்லாமா இமாமும் அரூஸ் அவர்கள் வகுத்துக் காட்டினார்கள்.

*குறிப்பு:-* 'ஹத்யா மாலை'யின் 188-வது பாட்டு முடிய 10 தகுதியாளர் களுக்குரிய 40 ஹத்யாக்களின் விபரம் முடிவுற்றது. பின்னால் அந்த ஹத்யாக்களின் சிறப்புக்களையும், அவற்றை தயார் செய்யத் தவறுவதால விளையும் தீமைகளையும், மற்றும் நல் வாழ்க்கைக்கு அவசியமான பல பொன்மொழி போதனைகளையும் கூறுகின்றார்கள்.



## மகத்தான உபதேசங்கள்

### 19

இந்தப் பத்துபேர் ஹத்யாக்களில்
ஏது குறைந்தாலு மவரவர்கள்
அந்தப் பாவியை வழக்கெடுத்து
ஆக்கினை செய்ய வாரம்பிப்பார்
எந்த மட்டிலும் இயன்றமட்டும்
ஏது ஹத்யாவும் குறைந்திடாமற்
சொந்தமாம் ஸவாதா வானதில்
சோர விடாமலே விழித்துக்கொள்வாய்.

### 20

காதவழி ஸபர் போகிலும்நீர்
கையிலாயுதம் கட்டுச் சாதம
பாதக் குறடொன்றும் பையில்காசும்
பயங்கரத்தினால் தோழ னொன்றும்
ஈதெல்லாம் எடுத் தேகுறநீர்
எப்போதும் மீளாப் பெருவழிக்கு
ஏதைத் தேடுவீரோ துணையாய்
எனக்குத் தெரியாதப்பா மகனே!

### 21

கானலைத் தண்ணீ ரெனக்கருதி
கண்ட பலனேது தாகமல்லால்
மானார்க் கலவியில் பொருளாசையில்
மயங்கித் தயங்கியே போதமற்று
வீணாய்எளியே வாணா ளெல்லாம்
வெட்டி இழவுக்காய்த் தேடித்தேடி
போனார்கள் கோடி கோடிகோடி
போனவிட மெங்கே தடங்களெங்கே?

### 22

அவர்கள் காயிபாய் போனதுபோல்
அவர்கள் மக்களும் போவதுண்மை
சுவரிலா சித்தி ரம்நிற்குமா?
சொல்லில்லாமலே பொருள் நிற்குமா?

எவரும் பொருளதை விரும்பினாக்கால்
எந்தப் பொருளும் கைக்கூடாதென்றே
தவறிப் போகுமுன் தெளபாதனைத்
தங்கரீகமாய் எடுத்துக் கொள்வீர்.

**அரும்பதவுரை:-**

*19.* ஹத்யா =நன்கொடை. ஸவாதா=கட்டுச் சாதம். சோரவிடாமல்=தவறிப்போகாமல்.

*20.* ஸபர்-பிரயாணம்.

*21.* மானார்-பெண்டிர். கலவியர்-புணர்ச்சியர்.

*22.* காயிபாய்-மறைந்து. தெளபா-பாவ மன்னிப்பு.

## தெளபா விளக்கம்

تُوبُوٓا إِلَى ٱللَّهِ جَمِيعًا أَيُّهَ ٱلْمُؤْمِنُونَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ ۝

**''ஓ விசுவாசிகளே! நீங்கள் எல்லாருமாகத் தெளபா (பாவ மன்னிப்பு)ச் செய்து அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்; நீங்கள் வெற்றி பெறலாம்.'**

'**தெள**பாச் செய்பவன், பாவமே செய்யாதவன் போலாகுவான். இன்னும் தெளபாவானது முன்செய்த பாவங்களை அழித்துவிடும்.'' (நா-வா)

தெளபாச் செய்து அல்லாஹ் அளவில் திரும்புவது மனித இயல்புக்கு முதற்படியாகவும், தீன் வழி நடப்பதற்கு ஆரம்பப் பாதையாகவும் அமைந்திருக்கிறது. ''தெளபாவை ஒவ்வொரு மனிதனும் செய்தே தீரவேண்டும்; எதற்கானால் படைக்கப்பட்டது முதல் கடைசிவரையில் பாவம் செய்யாமல் பரிசுத்தமாக இருப்பது மலக்குகளின் நடத்தையாகும். ஆயுள் முழுவதும் பாவத்திலும், விரோதத்திலும், மூழ்கிக்கிடப்பது ஷெய்த்தானுடைய செய்கையாகும். தெளபாவிலும், மனம் நாணி வெட்கிப்பதிலும், பாவமான வழியைவிட்டும் நீங்கி நேர்வழியில் திரும்புவதும், ஆதம் நபி (அலை)



அவர்களுடைய செய்கையாக இருக்கிறது. எனவே, எவனொருவன் தன்னால் நிகழ்ந்த பாவங்களைத் தெளபாவினால் பொறுப்பித்துக் கொள்வானோ? அவன் தன்னை ஆதம் நபி (அலை) அவர்களின் வம்சத்தில் சேர்த்தவனாகிறான். எவன் தன் வாழ்நாள் முழுவதும் பாவத்திலும், விரோதத்திலும், நிலைத்திருக்கின்றானோ? அவன் ஷெய்த்தானுடைய வம்சத்தில் சேர்ந்தவனாகிறான்.

மனிதன் தனது ஆரம்ப காலத்தில், அவனுக்குப் பூரணத்துவமும், போதிய அறிவும் இருப்பதில்லை. அவன் வளர வளர ஷெய்த்தானோடு உறவு ஏற்படவும், ஷெய்த்தானின் குணமான இச்சைகளில் ஈடுபடவும், அதனால் பாவச் செயல்களில் பங்குபெறவும் இடம் ஏற்படுகிறது. அப்பால் அவனுக்கு அறிவு என்ற பொக்கிசம் கிடைக்கப் பெற்றதும், தவறுதலை உணரும் சக்தி ஏற்பட்டு, இறைவன்மீது பயமும் பக்தியும் உண்டாகி, தெளபா அவசியப்படுகிறது. இந்த அடிப்படையிலே தான், இறைவன் மனித வர்க்கத்தின் விசுவாசிகள் எல்லாரையும் அழைத்துத் தெளபாச் செய்யும்படி ஏவியுள்ளான்.

إِنَّمَا ٱلتَّوْبَةُ عَلَى ٱللَّهِ لِلَّذِينَ يَعْمَلُونَ ٱلسُّوٓءَ بِجَهَٰلَةٍ ثُمَّ
يَتُوبُونَ مِن قَرِيبٍ فَأُو۟لَٰٓئِكَ يَتُوبُ ٱللَّهُ عَلَيْهِمْ وَكَانَ ٱللَّهُ عَلِيمًا
حَكِيمًا ۝

**''எவர்கள் தங்கள் அறியாமையால் பாவத்தைச் செய்து (அதனைப் பாவமென அறிந்து) பின்னர், பட்சாத்தாபப்பட்டு அதிசீக்கிரத்தில் (அதிலிருந்து) நீங்கி விடுகின்றார்களோ? அத்தகையோரை மன்னிப்பதே அல்லாஹ்வின் வேலையாகும்; ஆகவே அல்லாஹ் அவர்களை அன்புடன் நேசிக்கின்றான்; அல்லாஹ் நன்கறிந்தோனும், ஞானமுடையோனுமாயிருக்கின்றான்.'' (4:17)**

மனிதனுடைய சொல், செயல், நினைவு, பார்வை, கேள்வி இவைகளால், சிறிய பெரிய பாவங்கள், தன்னை அறிந்தும், அறியாமலும் ஏற்படுவது சகஜம். இவைகளால் நிகழும் பாவத்திறகுப் பரிகாரமாக களங்கமற்ற இருதயத்துடன் பச்சாத்தாபப்பட்டு, இறைவனிடம் மன்னிப்புக் கேட்பதுடன், இனிமேல் பாவங்கள் செய்வதில்லை என்று உறுதி பூணுவதற்குத்தான் தவ்பாவென்று சொல்லப்படும்; இனிமேல் பாவங்கள் நிகழாதிருக்க வேண்டி

பாதுகாவல் தேடுவதும் அவசியமானதே. பாதுகாவல் தேடுவதற்கும் தௌபாவென்று சொல்லப்படும்.

ஹஸ்ரத் லுக்மானுல் ஹகீம் (அலை) அவர்களின் மகன் 'அஷ்கம்' என்பார், தனது தந்தையைப் பார்த்து, ''நான் ஒருவரும் அறியாத தனி இடத்திலிருந்து பாவம் செய்து கொண்டிருந்தால், அதை அல்லாஹ் எப்படி அறிவான்?'' என்று கேட்டதற்கு, அவர்கள் கொடுத்த பதிலை இறைவன் திருமறையில்

يٰبُنَيَّ اِنَّهَآ اِنْ تَكُ مِثْقَالَ حَبَّةٍ مِّنْ خَرْدَلٍ فَتَكُنْ فِيْ صَخْرَةٍ
اَوْ فِى السَّمٰوٰتِ اَوْ فِى الْاَرْضِ يَأْتِ بِهَا اللّٰهُ ۗ اِنَّ اللّٰهَ لَطِيْفٌ خَبِيْرٌ

**''என் அருமை மைந்தா! (நன்மையோ, தீமையோ) அது ஒரு கடுகளவாயிருந்தாலும் சரி, அது ஒரு பாறைக்குள்ளோ அல்லது வானத்திலோ, பூமியிலோ (மறைந்து) இருந்த போதிலும் (உன்னிடம் கணக்குக் கேட்கும்போது), நிச்சயமாக அதையும் அல்லாஹ் கொண்டு வந்துவிடுவான். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் வெகு நுட்பமான அறிவும் (யாவற்றையும்) நன்கு தெரிந்தோனுமாக இருக்கின்றான்'' என விளக்கித் தருகின்றான்.**

**''அல்லாஹு எல்லா மக்களும் தௌபாச்செய்து வெற்றிபெற ஆசைப்படுகிறான்.'' (குர்ஆன்)**

''கியாமத் நாளின் அடையாளங்களிலொன்றான (மேற்றிசை) மக்ரிபிலிருந்து சூரியன் உதிப்பதற்கு முன்னமே, ஒருவன் முறைப்படி தௌபாச் செய்வானாகில், அவனுடைய தௌபாவையும் அங்கீகரிக்கப்படும்.'' (நா-வா)

ஒருபோது நமது நாயகம் ரஸூலே கரீம் ) (ஸல்) அவர்களுடைய மஸ்ஜிதில் ஓர் அரபி வந்து நுழைந்து, **'அல்லாஹும்ம இன்னீ அஸ்தக் பிருக வஅதூபு இலைக்க'** நாயனே! நான் உன்னிடம் பிழை பொறுக்கத் தேடுகிறேன்; இன்னும் உன்னளவில் தௌபாச் செய்து மீளுகிறேன்'' என்று சொன்னவராக, தக்பீர் கட்டித் தொழுதார். அவர் தொழுது முடிந்தபின் ஸய்யிதுனா அலீ (ரலி) அவர்கள் அவரைப் பார்த்து, ''ஓய் மனிதரே! உம்முடைய நாவிலிருந்த நிரம்ப விரைவாகத் தௌபா வெளியாகிறதே? இது பொய்யர்களுடைய தௌபாவாக



இருக்கும்; ஆகவே உம்முடைய இந்தத் தௌபாவும், இன்னுமொரு தௌபா அளவில் ஹாஜத்தாகிறது'' என்று சொன்னார்கள். இதைக் கேட்ட அந்த அரபி திடுக்கமுடையவராக ''யா! அமீருல் முஃமினீன்!! (விசுவாசிகளின் அதிபரே!) தௌபாச் செய்ய வேண்டிய முறை எது; அதை எனக்கு அறிவியுங்கள்'' எனப் பணிந்து வேண்டினார். அதற்கு அலீ (ரலி) அவர்கள் தௌபாவெனும் வழிபாடு ஆறு அம்சங்களைக் கொண்டதாக இருக்கிறது என்று அவருக்கு விளக்கிக் கூறினார்கள்.

1. செய்த பாவத்தை நினைந்து வருந்துதல்.
2. வீணாக்கிய பர்ளான வணக்கங்களை மீட்டுதல்.
3. அநியாயமாக வந்த பொருளைத் திரும்பக் கொடுத்தல்.
4. தன்னுடைய நப்சை பாவத்தில் பழக்கியதைவிட்டும், அதை நேர்வழியில் பழக்குதல்.
5. பாவத்துடைய இன்பத்தை விட்டும் வழிபாட்டுடைய கசப்பை அதற்குச் சுவையாக்குதல்.
6. பாவத்தின் பேரில் நீர் சிரித்த ஒவ்வொரு சிரிப்பிற்கும் பதிலாக, அழுவதுமாக இருக்கும்.

என மொழிந்தார்கள். இதனைச் செவியுற்ற அந்த அரபி வியந்து ஏற்றுக் கொண்டார்.

மேற்கூறப்பட்ட செயல்முறைகளை சரிவர நிறைவேற்றாதவரை தௌபா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒருவன், தனது கடன்களைத் தீர்க்க இயலாதுபோயின் 'எவ்விதமும் சம்பாதித்துக் கொடுத்து விடுவேன்' என்று, நல்ல எண்ணம் பூண்டுப் பொருள் கிடைத்ததும் கொடுத்துவிட வேண்டும். பாடுபட்டுத் தேடியும் கடனைத் தீர்க்க முடியாவிட்டால், கடன்காரர்களிடம் சென்று மன்னிப்புக் கோருதல் நன்று. இங்கு ஓர் சம்பவம், அதாவது:-

புளை லிப்னி இயாளு (ரலி) அவர்கள் தீனைத் தழுவுமுன், ஒரு கொள்ளைக் கூட்டத்தின் தலைவராகயிருந்தார். அவர் அநேக மக்களின் பொருட்களை வழிப்பறிசெய்து வாழ்ந்துக் கொண்டிருந்தார். ஒருநாள் அவர் ஓர் ஊருக்குப் போகவேண்டி வந்தது. அங்கு ஒரு பெரியார்:

**''நல்லுணர்ச்சி பெறும்பொருட்டு, இந்தக் குர்ஆனை நிச்சயமாக நாம் மிக்க எளிதாக்கியே வைத்திருக்கின்றோம்; (இதனைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டோ?'' (54:40)**

என்று உபதேசித்துக் கொண்டிருந்த திருமறை வாக்கியம், அவரது இருதயத்தில் ஒரு அம்புபோன்று பாய்ந்தது. உடனே அவர் மிக்க உணர்வு பெற்று, தமது செய்கைகளைவிட்டும் நீங்கி, முன் செய்த தவறான செயல்களை நினைந்து வருந்தி, தூய்மையான மனத்தால் 'தௌபா' செய்து கொண்டார். பின்னர் அவர், யார் யாருடைய பொருட்களை வழிப்பறி செய்திருந்தாரோ? அவரவர்க்குரிய பொருட்களைத் திருப்பிக் கொடுத்து விட்டார். மேலும் கொடுக்கப் படவேண்டிய பொருள் தம் கைவசம் இல்லாததால், அதற்குரிய வரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். ஒரு யஹூதி மட்டும் 'மன்னிக்கமாட்டேன்' எனறு பிடிவாதம் செய்தான். அவர் எவ்வ ளவோ கெஞ்சிக் கேட்டும் அந்தய ஹூதி ''கொஞ்சம் பொருளாவது தந்தாலன்றி மன்னிக்கப் போவதில்லை'' என்று கூறினான். முடிவில் அவர் ஒருபிடி மண்ணையாவது அள்ளி அவன் வீட்டில் போட்டால் மன்னித்து விடுவதாக ஒப்புக் கொண்டான்.

இதைக்கேட்ட அந்தப்பெரியார் மனங்கலங்கியவராக, ஒருபிடி மண்ணை அள்ளி ''இதோ வாங்கிக்கொள்!'' என்று அவனது சட்டைப் பைக்குள் போட்டார். அவன் அதை எடுத்துப் பார்க்கும்போது அத்தனையும் பொன்னாக இருந்தது. அவன் ஆச்சரியமுற்று அவரைப் பார்த்து, உமது தௌபா அல்லா(ஹ்)வால் நிச்சயம் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்க வேண்டும். ஏனெனில், தவ்ராத் வேதத்தில் ''யாருடைய தௌபா கபூல் ஆயிற்றோ? அவர் மண்ணை அள்ளிக் கொடுத்த போதிலும் பொன்னாகிவிடும்'' என்று சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். இது உம்முயை விசயத்தில் சரியாக இருப்பதால், உம்முடைய மார்க்கமே உண்மையான மார்க்கம் என்று நான் காண் கிறேன்'' என்று கூறிக்கொண்டு தீனுல் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்.

புளைல் (ரலி) அவர்கள் நஹ்ரான் என்ற ஊருக்குப் போயிருந்தபோது, அங்கு கலீப ஹாரூன் ரஷீது, அவரைக் கண்டு ''புளைலே, நேற்றிரவு புளைல் அல்லாஹூவை அஞ்சி, அவனுடைய ஊழியத்திற்குத் தன்னை ஒதுக்கிவிட்டார் என்று ஒருவர் உரக்கக் கூறுவதுபோல் கனவு கண்டேன்'' என்றார்; இதைக்கேட்ட புளைல்:-

''யா அல்லாஹ்! என்று சத்தமிட்டு, ஆண்டவனே; நாற்பது ஆண்டுகளாக உன்னை விட்டு வெருண்டோடி, பாவத்தில் அழுந்திக் கிடந்த ஓர் அடிமையை, உனது வல்லபத்தாலும், இரக்க சிந்தனை யாலும் நேசம் கொண்டாய்,'' எனக் கூறினார்.



புளைலிப்னி இயாளு (ரலி) அவர்களின் மார்க்கப் பற்று மிக உண்மையாக இருந்ததால், அவர்கள் வலிமார்களின் கூட்டத்தைச் சார்ந்தவர் என்று கூறப்படுகிறது. (ததுகிறதுல் அவ்லியா)

தௌபாவை அதன் நியமப்படிச் செய்தால் உடனே கபூலாகும். அப்படி ஒருவன் தௌபாச் செய்வானாகில், அது கபூலாயிற்றா? இல்லையா? என்று சந்தேகிக்க வேண்டாம். அவன், தான் செய்த தௌபா விதிப்படி இருந்ததா? என்பதைத்தான் சிந்திக்க வேண்டும்.

தௌபா நிறைவேற ஷர்த்துகள் நான்கு 1. செய்த பாவத்திற்காக வருந்துவது; பாவங்கள் நினைவில்லாவிட்டால் மொத்தமாக பட்சாத்தாப்படுவது. 2. இனிமேல் பாவச் செயல்களில் மீளமாட்டேன் என்று மனத்தில் உறுதி வைப்பது. 3. விட்டு விட்ட பர்லான வணக்கங்களை உடனடியாக விரைவில் நிறைவேற்றவது. 4. அநீதப் பொருள்களைத் திருப்பிக் கொடுப்பது, ஆகியவைகளேயாகும்.

மனிதன் தன்னுடைய இதயத்தின் உண்மையை உணர்ந்து, அது எவ்வாறானது என்றும், சரீரத்துடன் அது எவ்விதம் சம்பந்தப் பட்டிருக்கிறது என்றும்; அந்த சம்பந்தத்தைத் தரிசிக்காதபடி அது எதனால் மறைக்கப்பட்டிருக்கிறது என்றும், ஆராய்வானாயின் அவன் அந்தத் திரைக்குப் பாவமே காரணம் என்றும், அந்த மறைப்பு நீங்குவதற்குத் தௌபாவே ஏற்றதென்றும், அந்தத்திரை நீங்குவதே தௌபாவின் (கபூலிய்யத்) அங்கீகரிப்பு என்றும் சந்தேகமில்லாது, தெரிந்து தெளிந்துகொள்வான். ஏனெனில், மனிதனுடைய இருதய மானது, அதன் உண்மை உருவத்தில் மலக்குகளுடைய இனத்தைச் சேர்ந்த சுத்தமான ஓர் ஒளிப் பொருளாக இருக்கிறது. இன்னும் அது ஓர் தெளிவான கண்ணாடிக்கு ஒப்பாகும். அதில் அல்லாஹூத் தஆலாவின் ஜமாலைத் தரிசிக்கலாம். ஆனால், இந்தத்தரிசனத்திற்கு அது, இந்த உலகப் பாசமென்ற மாசு நீங்கியதாக இருக்கவேண்டும். அவன் செய்கிற ஒவ்வொரு பாவத்தினாலும், அவனுடைய இருதயம் என்னும் கண்ணாடியின்மேல் ஒரு கறுப்பான இருள் படியும். ஒவ்வொரு வணக்கத்தினாலும் ஓர் ஒளி அதில் சேரும். எப்பொழுதும் இதயம் என்னும் கண்ணாடியில் வணக்கத்தின் ஒளியும், பாவங்களின் இருளும் ஒன்றன்பின் ஒன்றாகவந்து சேர்ந்து கொண்டிருக்கும்.

இருள் அதிகமாயிருந்து அவன் தௌபாச் செய்வானாயின், வணக்கத்தின் ஒளியானது அந்த இருளை அகற்றிவிடும். அப்பொழுது இருதயம் சுயரூபமான சுத்தமாகவும், தெளிவாகவும் மாறும். ஆனால்

இருதயத்துள் இருளானது அடிக்கடி படிவதினாலும், நெடுநாள் நிலைத்து அதில் மூழ்கி தம்பித்துப் போவதினாலும், இருதயமான கண்ணாடியின் பிரகாசம் சூன்யமாகி விடுகிறது; இதனாலேயே,

**"திட்டமாக நன்மைகள் தீமைகளைப் போக்கிவிடும்."** என்று இறைவன் திருமறையின் கூறுகின்றான்.

'ஒரு தீமை விளையுமாயின், ஒரு நன்மையைச் செய். அது அந்தத் தீமையை அழித்துவிடும்.'' *(நா-வா)*

''வானத்தை அளாவும்படியான அத்தனை அளவு பாவச் செயல்களை நீங்கள் புரிந்திருப்பினும், பிறகு முறைப்படி தௌபாச் செய்வீர்களாயின், அல்லாஹ் அந்தத் தௌபாவை கபூல் செய்வான். பாவத்தின் பொருட்டால் சுவர்க்கம் போகிற அடியானுமிருப்பான்.'' என்று நாயகம் (ஸல்) கூறியபோது, 'அது எப்படி யாரஸூலுல்லாஹ்!' என ஸஹாபாக்கள் கேட்க, அதற்கு நபி (ஸல்) அவர்கள்:-

''ஒருவன் பாவத்தைச் செய்த பின்பு, அதைப்பற்றி மனத்தில் நாணமடைவானாயின், அந்த நாணம், அவன் சுவர்க்கத்திற்குப் போகும்வரை, அவன் கண் முன்னே நிற்கும்'' என அருளினார்கள்.

ஒருவன் தன்னிடத்திலுள்ள ஒரு துர்க்குணத்தை ஒழிக்க நாடுவானாயின், அதற்கு ஒரே வழிதான் உண்டு, அதாவது:- அந்தத் துர்க்குணம் அவனைத் தூண்டும்போது, **'அஸ்தக்பி றுல்லாஹல் அளீம்'** என்று கூறி, அதற்கு அவன் மாற்றம் செய்வதுதான். ஒன்றின்மேல் எழும் இச்சையானது, அதன் எதிர் சக்தியினால் இடர்பட்டு நசியும் ஒவ்வொரு பொருளையும், அதன் மாற்று சக்தி அதை இல்லாமலாக்கிவிடும்.

''பாவங்கள் நோய்கள் ஆகும் அவைகளுக்கரிய மருந்து (இஸ்திக்பார்) பிழை பொறுக்கத் தேடுவதாக இருக்கிறது.'' *(நா-வா)*

يَٰٓأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا تُوْبُوْٓا اِلَى اللّٰهِ تَوْبَةً نَّصُوْحًا ؕ عَسٰى رَبُّكُمْ
اَنْ يُّكَفِّرَ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ وَيُدْخِلَكُمْ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ



**''விசுவாசிகளே! நீங்கள் கலப்பற்ற மனத்துடன் பாவத்திலிருந்து விலகி அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள். உங்கள் இறைவனோ? உங்கள் பாவங்களுக்குப் பரிகாரம்செய்து (மன்னித்து) சதா நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதியிலும் உங்களை புகுத்திவிடுவான்.''**

'அஹ்ஸனுல் மவாஇஸு' என்ற பாடலில் கூறப்படுகிறது:-

## பாட்டு

அபுற்த ரெத்தின மான தௌபா வாய்த்திடில்
இமுற்த வீடிரு நான்குமே உன் சொந்தஇல்
1

اَللّٰهُ اَفْرَحُ بِمَتَابِ عَبْدِهٖ فَرَحَ ظَمْاٰنٍ بِمَامِنْ بُعْدِهٖ 2

தன்மை தௌபா பரக்கத்தால் முதல் தோசங்கள்
நன்மையாய் பதலாக்குவான் றஹ்மா னெங்கள் 3

1. அருமையான ரெத்தினம் போன்ற தௌபா வாய்த்திட்டால் இன்பமாகிய சொர்க்கம் எட்டும் உன் சொந்த வீடாகிவிடும்.

2. அல்லாஹு தனது அடியான் தௌபாச் செய்து தன்னிடத்தில் மீளவேண்டும் என்ற தாகவிடாய் கொண்டவன். அதாவது:- ஒருவன் தண்ணீருக்காகத் தவித்துக் கொண்டிருக்கையில் தற்செயலாக அவனுக்குத் தண்ணீர் கிடைத்துவிட்டால் எவ்வளவு சந்தோசம் அடைகிறானோ? அதைவிட அதிகமாக ஆண்டவன் சந்தோசம் அடைகின்றவனாக இருக்கின்றான்.

3. பரிசுத்தமான தௌபாவின் விசேசத்தினால் முந்திய பாவதோசங்களை எங்கள் இரட்சகனான ஆண்டவன் நன்மையாகவே மாற்றிவிடுவான் என்பது பாட்டின் பொருள்.

இறைவனால் பவம் பொறுக்கப்படுவதுவே பெரும்புண்ணியமான பரோபகாரம். அந்தப் பாவங்கள் அனைத்தையும் நன்மைகளாக மாற்றுவதென்றால், அதை விடச் சிறப்பு பெரும் உபகாரம் வேறேது? (இதனால் பாவம் செய்யலாம் என்பது கருத்தல்ல.)

''ஆண்டவன் ஒவ்வொரு காலையிலும் வயோதிகனுடைய முகத்தைப் பார்த்து 'உனக்கு வயது முதிர்ந்து, எலும்பு இளகி, தோல்

மிருதுவாகி, உனக்குத் தவனையும் முடுகிக் கொண்டது. ஆகவே, நீ பாவம் செய்ய என்னில் நின்றும் வெட்கித்துக்கொள். அவ்வாறாயின், வேதனை செய்ய நான் உன்னில் நின்றும் வெட்கித்துக் கொள்வேன்' எனச் சொல்கின்றான்.'' (நா-வா)

''**ஒ**ரு மனிதன் நாற்பது வயதுக்குப் பிறகும், பாவத்தை விட்டும் தௌபாச் செய்யவில்லையானால், ஷெய்த்தான் அந்த மனிதனுடைய முகத்தைத் தடவி, ''ஏ! எனது தந்தையே! இனி ஒரு நாளும் மீட்சி பெறாத அந்த முகம் இதுதான்'' எனக்கூறி சந்தோசித்து மகிழ்வான்.'' (நா-வா)

மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்கள் மஸ்னவீ ஷரீபில் கூறுகிறார்கள்:-

**நக்ள மீதா கோஷி கஸ்தோ தௌபஹா**
**மூஜிபே லஃநத் ஷவத் தர் இந்தஹா**

எவனொருவன் உறுதி மானத்தையும், தௌபாவையும் முறிப்பானோ? அவன் கடைசிக் காலத்தில் அல்லாஹ்வின் முனிவிற்கு இலக்காகுவான்.

**'ஹலகல் முஸவ்விபூன்'** தௌபாவைநினைத்த மாத்திரமே செய்யாமல் பிற்படுத்திக் கொண்டிருப்பவர்கள் அழிந்து போவர், அவர்களைத் திடீரென மரணம் வந்து இழுத்துக் கொண்டு போய்விடும். (நா-வா)

''**பா**வம் செய்தவன் உடனே தௌபாச் செய்வது 'பர்ளு' (கடமை) அவ்விதம் செய்யாவிட்டால், அவன்மீது பாவத்திற்கான குற்றமும், தௌபாச் செய்யாததற்குள்ள குற்றமுமாக, இரு குற்றங்களுக்கு ஆளாகி விடுகிறான்.'' (நா-வா)

وَلَيْسَتِ التَّوْبَةُ لِلَّذِيْنَ يَعْمَلُوْنَ السَّيِّاٰتِ ۚ حَتّٰىٓ اِذَا حَضَرَ
اَحَدَهُمُ الْمَوْتُ قَالَ اِنِّىْ تُبْتُ الْـٰٔنَ وَلَا الَّذِيْنَ يَمُوْتُوْنَ
وَهُمْ كُفَّارٌ ؕ اُولٰٓئِكَ اَعْتَدْنَا لَهُمْ عَذَابًا اَلِيْمًا ○



**''எவர்கள் பாவங்களைச் செய்துகொண்டே இருந்து, அவர்களுக்கு மரணம் சமீபித்தபோது, ''இதோ நான் (என்) பாவங்கைள விட்டு விட்டேன்'' என்று கூறுகின்றார்களோ? அவர்களுக்கும், எவர்கள் நிராகரித்த வண்ணமே இறந்துவிடுகின்றார்களோ? அவர்களுக்கும், பாவமன்னிப்புக் கிடையாது. இத்தகையோருக்குத் துன்புறுத்தும் வேதனையைத் தான் நாம் சித்தப்படுத்தி வைத்திருக்கின்றோம்.''**
(அல்குர்ஆன்)

சகோதரர்களே! ஒவ்வொரு மனிதனும் தனது தினசரி வாழ்க்கையில் இன்றையத் தினம் நான் என்ன என்ன நன்மைகளைச் செய்ய வேண்டும்? எந்த எந்தப் பாவங்களை விட்டும் விலக வேண்டும்? சென்ற நாட்களில் நான் என்னென்ன குற்றங்களைச் செய்திருக்கின்றேன்; அவைகள் நிவர்த்தியாவதற்கு அவசியம் செய்யவேண்டிய செயல்கள், பிரார்த்தனைகள் எவை, என்பனபோன்ற வினாக்களைத் தன்னைத்தானே எழுப்பி, மனத்தால் உணர்ந்து அவைகளுக்குப் பரிகாரம் தேடி வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமது வாழ்க்கையின் சென்ற காலம் போக, வருங்கால வாழ்வு சுருங்கியதாகவும், எப்பொழுது என்ன நேருமென்று நினைக்கக்கூட முடியாததாகவும் இருக்கிறது. ஆகவே, இங்கு நமக்குக் கிடைத்த மகத்தான சமயங்களை வீணே பாழ்படுத்தாமல், சென்ற காலங்களில் நாம் தெரிந்தும் தெரியாமலும் செய்த தவறுகளை நினைத்து, உள்ளச்சத்தோடு தௌபா என்ற புனித சாதனத்தால் அகற்றி, நல்லொழுக்கங்களில் ஈடுபட்டு, அகமும் புறமும் பரிசுத்தத் தன்மையுடன் மறு உலகிற்கேக வேண்டும் என்ற வேண்டுதலோடு, பாவத்தின் விமோசனம் என்ற தௌபாப் பிரார்த்தனையை ஆரம்பிக்க வேண்டும்.

وَاسْتَغْفِرُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ○

**(விசுவாசிகளே!) ''நீங்கள் அல்லாஹ்விடம் மன்னிப்பையும் கோருங்கள்; நிச்சயமாக, அல்லாஹ் மிக்க பிழை பொறுப்போனும் கிருபையுடையோனுமாக இருக்கின்றான்.** **(அல்குர்ஆன்)**

# اَلْاِسْتِغْفَارُ وَالتَّوْبَةُ

○ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ. بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
لَآ اِلٰهَ اِلَّا اللهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللهِ ٣ اَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ
وَاَتُوْبُ اِلَيْهِ ٣ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْتَغْفِرُكَ مِنْ ذُنُوْبٍ كُلِّهَا،
اَوَّلِهَا وَاٰخِرِهَا، ظَاهِرِهَا وَبَاطِنِهَا، سِرِّهَا وَجَهْرِهَا،
لَيْلِهَا وَنَهَارِهَا، صَغِيْرِهَا وَكَبِيْرِهَا، قَدِيْمِهَا وَجَدِيْدِهَا،
وَمِنْ جَمِيْعِ مَا كَرِهْتَ، مِمَّا اَعْلَمُ وَمِمَّا لَا اَعْلَمُ وَمِمَّا
اَنْتَ اَعْلَمُ بِهٖ مِنِّيْ قَوْلًا وَّفِعْلًا، وَخَاطِرًا وَّنَاظِرًا وَسَامِعًا
عَمْدًا، وَخَطَاءً وَنِسْيَانًا وَجَهْلًا، تُبْتُ اِلَيْكَ مِنْ جَمِيْعِهَا
وَلَا اَعُوْدُ اِلَيْهَا اَبَدًا، رَبَّنَا ظَلَمْنَا اَنْفُسَنَا وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا
وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخَاسِرِيْنَ، وَتُبْ عَلَيْنَا يَا رَبَّنَا وَاغْفِرْ
لَنَا وَارْحَمْنَا اِنَّكَ اَنْتَ التَّوَّابُ الرَّحِيْمُ ○ اَللّٰهُمَّ صَلِّ
وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ، وَالْحَمْدُ
لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○



# அல் இஸ்திக்பாறு வத் தௌபா

## பாவத்தின் பரிகாரம்

மூலமும் உரையும்:-

அஊது பில்லாஹி மினஷ்ஷெய்த்தானிர் ரஜீம்
பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர் ரஹீம்.
லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்
ரஸூலுல்லாஹி. 3
அஸ்தகபிருல்லாஹல் அளீம் வஅதூபு இலைஹி. 3

**அல்லாஹும்ம**-இறைவா!, **இன்னீ**-உண்மையாக நான் **அஸ்தக்பிருக**=உன்னிடமே பிழை பொறுக்கத் தேடுகிறேன். **மின்துநூபி குல்லிஹா**- நான் செய்த பாவங்கள் எல்லாவற்றில் நின்றும், **அவ்வலிஹா வஆகிரிஹா**-முன் பின் உண்டான பாவங்கள் எல்லாவற்றில் நின்றும், **ஸிர்ரிஹா வஜஹ்ரிஹா**- இரகசியமான பாவம், பரகசியமான பாவம் எல்லாவற்றில் நின்றும், **லைலிஹா வனஹாரிஹா**-இரவிலும் பகலிலும் நிகழ்ந்த பாவங்களை எல்லா வற்றில் நின்றும், **ஸகீரிஹா வ கபீரிஹா**-சிறு பாவம், பெரும்பாவம் எல்லாவற்றில் நின்றும், **கதீமிஹா வஜதீதிஹா**- பழைய புதிய பாவங்களில் நின்றும், **வமின்ஜமீஇ மாக்கரிஹ்த**-உனது வெறுப்புக்கு இலக்கான பாவங்கள் எல்லாவற்றில் நின்றும், **மிம்மா அஃலமு வமிம்மா லாஅஃலமு**-நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்கள் எல்லாவற்றில் நின்றும், **வமிம்மா அந்த அஃலமு பிஹீமின்னீ**-நாயனே! நீ அறிய நான் செய்த பாவங்கள் எல்லாவற்றில் நின்றும், **கவ்லன் வபிஃலன்**- சொல்லால் செயலால், **வகாத்திரன் வனாளிரன் வஸாமிஅன்**-ஆற்றலால், பார்வையால், கேள்வியால் உண்டான பாவங்கள் எல்லாவற்றில் நின்றும், **அம்தன் வகதஅன்**= வேண்டுமென்றும், தவறுதலாகவும், **வனிஸ்யானன் வஜஹ்லன்**= மறதியாகவும் அறியாமையாலும் செய்த பாவங்கள் அனைத்தில் நின்றும், **துபுது இலைக்கமின் ஜமீஇஹா**=உன்னிடம் தௌபாச் செய்து மீளுகிறேன். அந்தப் பாவங்கள் எல்லாவற்றில் நின்றும் விலகி, **வலா அஊதுஇலைஹா ,அபதா**=இனிமேல் ஒருக்காலும் பாவச்செயல் புரியேன். **ரப்பனாளலம்னா அன்புஸனா**= இறைவா! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். **வஇன்லம் தக்பிர் லனா**

**வதர்ஹம்னா**=நீ எங்களுக்கு பிழைபொறுத்து ரஹ்மத்துச் செய்தருளவில்லையானால். **லனகூனன்ன மினல்காஸிரீன்**=உண்மையாக நாங்கள் நஷ்டவாளிகளாகி விடுவோம். **வதுப் அலைனா யா ரப்பனா**=ஆகையால், எங்கள் இரட்சகா! எங்கள் தௌபாவையும் அங்கீகரித்து, **வக்பிர்லனா வர்ஹம்னா**=எங்கள் பிழைகளையும் பொறுத்து, எங்களுக்கு ரஹ்மத்துச் செய்தருள். **இன்னக்க அந்தத் தவ்வாபுர் ரஹீம்**=நிச்சயமாக நீ அடியார் செய்த தௌபாக்களை அங்கீகரிக்கும் மிகப்பெரிய கிருபையாளனாதலால், எங்கள் பிழைகளைப் பொறுத்து, எங்கள் தௌபாக்களை அங்கீகரித்துக் கிருபை செய்தருள்வாயாக.

**அல்லாஹும்ம ஸல்லி வ ஸல்லிம் அலா செய்யிதினா**
**முஹம்மதின் வ ஆலிஹீ வ ஸஹ்பிஹி அஜ்மஈன வல் ஹம்து**
**லில்லாஹி ரப்பில் ஆலமீன்.**

## 23

கப்ப லேறினும் காடேகினும்
கவிழ்ந்த சிரம் நிமிர்த்தாதிடினும்
அப்போ விதித்ததுக் கதிகமாயோர்
அணுவும் கிட்டாதென் றறிந்திருந்தும்
அற்ப துனியாவின் மாய்கையினால்
அலமலக்க வேச் சாடிச்சாடி
ரப்பை மறந்திடும் கைசேதத்தால்
இரத்தமா யழப் பூண்டுகொண்டாய்.

## 24

நஞ்சாம் ஹவாவான தொடுக்கத்திலே
நஹ்ஸு நாறினில் நூனானது
பிஞ்சா லெழுந்தது அநேகத்தழுமை
பின்னால் வருவது திண்ணமாச்சு
அஞ்சாறுடன் தக்வா ஸுஹ்தை
அருமை தவ்ஹீதாம் மஃரிபத்தை
நெஞ்சா லுறுதியும் நமஸ்காரமும்
நேம நிஷ்டையாய் தவசிருப்பாய்.



*அரும்பதவுரை:-*

23. துன்யா=உலகம். ரப்பு=இறைவன்.

24. ஹவா=துர் இச்சை. ஒடுக்கம்= முடிவு. நஹஸு-கெட்டது நாறு-நெருப்பு அஞ்சாறு-ஈமானின் கடமை ஐந்தும், இஸ்லாமின் கடமை ஆறும். தக்வா-பக்தி. ஸுஹ்து-பற்றற்ற நிலை. தவ்ஹீது-ஏகத்துவம். மஃரிபத்து- (ஒரு பொருளை உள்ளபடி அறியும்) மெய்யறிவு.

உலக ஆசைகள் மிகைக்க மிகைக்க, அதில் விசம் கொஞ்சம் கொஞ்சமாக ஏறிவிடுகிறது. அப்பால் அது மனிதனைத் தீயவைகளில் இழுத்துச்சென்று, முடிவில் சிறுமை என்னும் படுகுழியில் ஆழ்த்தி விடுகிறது. இதனாலேயே முன்னெச்சரிக்கையோடு, நமது தீனுல் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கடைப்பிடித்தொழுக வேண்டியது அவசியமாகும். இவற்றைச் சுருக்கமாகக் கீழே தருகின்றோம்.

**ஈமான்**

إِنَّ الْإِنسَانَ لَفِي خُسْرٍ ۝ إِلَّا الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ

**"(நபியே!) விசுவாசங்கொண்டு நற்கருமங்கள் செய்தவர்கள் நீங்கலாக, மற்றையோர் (தன் ஆயுளை வீணில் செலவு செய்து) நிச்சயமாக நஷ்டமடைந்துவிட்டனர்."**

ஈமானும் இஸ்லாமும் ஒன்றா? அல்லது வேறு வேறா? என்ற ஐயப்பாட்டிற்கு 'ஈமான்' வேறு 'இஸ்லாம்' வேறு என்றே பல அறிஞர்கள் முடிவு கூறியிருக்கின்றனர்.

"இறைவனே இந்த உலகத்தின் படைப்புக்கர்த்தா; அவனையே நாம் வணங்க வேண்டும். அவனையன்றி மற்றெவரையும் வணங்கக் கூடாது; அவனுக்கு இணை துணையில்லை; ஒப்புவமையுமில்லை; நன்மையோ, தீமையோ நாம் செய்யும் வினைக்குத் தக்க பலனை, நாம் அடையும் நாளையே, இறுதி நாளென்றும், அதுவே விசாரணைக் காலமென்றும் கூறப்படுகிறது'' என்ற இந்த விஷயத்தை, ஒவ்வொருவரும் ஒரு சிறிதும் சந்தேகமின்றி உள்ளத்தால் உறுதி

கொள்ளுவது ஈமான் என்றும், அதன்படி ஒழுகுவதற்கு இஸ்லாம் என்றும் கூறுவது பெரும்பாலோரின் கருத்து.

**'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி'** என்னும் மூலமந்திரத்தை வாயளவில் ஒத்துக்கொண்டு, செயலளவில் நேர்மாறாகக் காணப்படின், அத்தகைய ஈமானால் பயன் ஒன்றுமில்லை.

நாயகம் (ஸல்) அவர்கள் அருளியதாக ஹஸன் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:-

"**எ**வர்களிடத்தில் மூன்று குணங்கள் 'காணப்படுகின்றனவோ? அவர்களே ஈமானின் இன்பத்தைப் பூரணமாய்ப் பெற்றுக் கொண்டவராவர்.

அந்தக்குணங்களாவன:-

1. அல்லாஹுவையும் அவனுடைய திருத்தூதரான நபி பெருமானார் (ஸல்) அவர்களையும், ஏனைய எல்லாவற்றைக் காட்டினும் அதிகமாக விசுவாசித்தல்.
2. வேறு எவரையேனும் நேசிப்பதாயின் ஆண்டவனுக்காகவே அவரை நேசித்தல்.
3. குப்ரில் (சன்மார்க்க நிராகரிப்பில்) புகுந்து விடுவதை, நெருப்பில் பிரவேசிப்பதைப்போல வெறுத்து ஒதுக்குதல். (புகாரி ஷரீப்)

## ஈமானுக்குரிய கடமை (பர்ளு)கள் ஆறு

### ஒன்றாவது:- ஆமந்து பில்லாஹி

அல்லாஹு ஒருவன்; அவன் இணை துணையற்றவன்; அவனுக்கு ஒப்புவமையாக ஒரு வஸ்துவுமில்லை என்றும், இன்னும் உருவம், நிறம், சுவை, மணம், விரிதல், சுருங்குதல், கூடுதல், குறைதல், சேர்தல், பிரிதல், தாய் தந்தை, மனைவி மக்கள், முன்பின், வலம் இடம், மேல் கீழ் இவை போன்ற படைப்புகளின் இயல்புகளுக்கு முற்றும் மாறானவன் என்றும், மேலும், அவன் ஹயாத்தானவன், பார்வையானவன், நித்தியமானவன் என்றும் இருதயத்தால் அறுதியிட்டு உறுதி கொள்வதுமாம்.



### இரண்டாவது:- வ மலாயிகத்திஹி

வானவர்கள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள் என்றும், அல்லாஹ்வின் ஏவலாளர்கள் என்றும், அவர்கள் ஆணாகவுமில்லை பெண்ணாகவுமில்லை என்றும், அவர்கள் ஆண்டவனுக்கு மாறு செய்யாதவர்கள் என்றும், அவனால் ஏவப்பட்டதையே செய்வார்கள் என்றும், அவர்கள் அறிவிப்பன யாவும் உண்மையானவை என்றும், நாய், பன்றியைத் தவிர எந்தக் கோலத்தையும் எடுக்கும் சக்தி பெற்றவர்கள் என்றும் உறுதியாக நம்புவதாம்.

### மூன்றாவது:- வகுது பிஹி

அவனது வேதங்கள், ஸுஹ்புகள் யாவும் ஒலி வடிவம் வரிவடிவம் முதலியவைகளைவிட்டும் பரிசுத்தமாக, இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்றதாக, ஆனால், பிறரால் அதுபோன்று ஆக்கப்பட முடியாததாக, கருத்துக்களும், மொழி நடையும் கொண்டு, அவனது தாத்திலிருந்து வெளியான பூர்வீகமான வசனமென்றும், அதில் காணப்படுவன எல்லாம் உண்மையானவை என்றும், அவற்றைத் தனது ரஸூல்மார்கள் வழியாக, மொழிகளால், பலகையில் அல்லது மலக்குகளின் வாயிலாக வெளியாக்கி அருளினான். இவை ஸுஹுபுகள் என்றும்; வேதங்கள் எனவும் இருவகைப்படும். நாகரீகமில்லாத காலத்தில் மக்களது நடத்தைகளில் சிலவற்றைத் திருத்தி அருளப்பட்டவைகளுக்கு ஸுஹுபுகள் என்று பெயர். இது மொத்தம் 110 ஸுஹுபுகள் எனச் சொல்லப்படுகிறது. இவைகள் நபி ஆதம் (அலை)-நபி இத்ரீஸ் (அலை)- நபி நூஹு (அலை)-நபி இப்ராஹீம் (அலை)- (வேதத்தடன்) நபி மூஸா (அலை) ஆகிய நபிமார்களுக்கு அருளப்பட்டன.

நபி மூஸா (அலை)-நபி தாவூது (அலை)-நபி ஈஸா (அலை)-நபி 'முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம்' ஆகிய நபிமார்களுக்கு முறையே 'தவ்ராத்து,' 'ஸபூர்,' 'இன்ஜீல்,' 'புருகான்' ஆகிய நான்கு வேதங்களும் அருளப்பட்டது உண்மை என்றும் இருதயத்தால் நிர்ணயிப்பதாம்.

## நான்காவது:- வறுஸ்லிஹி

உலகம் தோன்றியதிலிருந்து பல பாகங்களிலும் வாழ்ந்த மக்களுக்கு அவரவர்களுடைய மொழியிலேயே இறைவனுடைய நேர்வழியை எடுத்துரைக்கும் நபிமார்கள் 1,24,000-ம் பேர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனர். ஆயினும், திருக்குர்ஆனில் குறிப்பிடப் பட்டிருக்கும் பெருமை பெற்றவர்கள் இருபத்நைந்து நபிமார்களாவர். அவர்கள்:-

| | | |
|---|---|---|
| ஆதம் (அலை) | நூஹு (அலை) | இத்ரீஸ் (அலை) |
| இப்ராஹீம் (அலை) | இஸ்மாயீல் (அலை) | இஸ்ஹாக் (அலை) |
| யஃகூபு (அலை) | யூசுபு (அலை) | லூத் (அலை) |
| ஹூத் (அலை) | ஸாலிஹ் (அலை) | ஷுஐப் (அலை) |
| மூஸா (அலை) | ஹாருன் (அலை) | தாவூது (அலை) |
| சுலைமான் (அலை) | ஐயூப் (அலை) | துல்கிஃப்லு (அலை) |
| யூனுஸ் (அலை) | இல்யாஸ் (அலை) | அல்யஸஃ (அலை) |
| ஸகரிய்யா (அலை) | யஹ்யா (அலை) | ஈஸா (அலை) |

நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்.

இவர்களில் மிக்க மேம்பாடுடையவர்கள் 1. ஆதம் 2. நூஹு 3. இப்றாஹீம் 4. மூஸா 5. ஈஸா 6. அஹ்மத் முஹம்மது (ஸல்) ஆகிய ஆறுபேர்களாவர். இவர்களுக்கு உலுல்அஸ்மி என்று பெயர்.

நேர்வழிகாட்டிகளில் 'நபி' 'ரஸூல்' என்ற இருதரப்பட்டவர் களுண்டு. நபிமார்கள் ஞான வெளிப்பாட்டின் மூலம் மக்களுக்குப் போதிக்க வந்தவர்கள். ரஸூல்மார்கள் ஞான வெளிப்பாட்டுடன் வேதம் கொடுக்கப்பட்டவர்களாவர். அவர்கள் அல்லாஹுவின் பூரண விசுவாசிகள். எவ்வகைப் பாவங்களிலிருந்தும் காக்கப்பெற்றவர்கள். அங்கஹீனம் முதலிய யாதொரு குற்றம் குறைகளுமில்லாதவர்கள் என்று திட்டமாக நம்பிக்கைவைப்பதாம்.

## ஐந்தாவது:- வல் யவ்மில் ஆகிரி

உலக முடிவு நாள் உண்டென்றும், அந்தநாளில் அல்லாஹ் மனிதர்களை எழுப்பிக் கேள்வி கணக்குகள் கேட்டு, விசுவாசிகளான நல்ல அமல் செய்தவர்களை சுவர்க்கத்திலும், அவிசுவாசிகளையும் தீயோர்களையும் நரகத்திலும் புகுதுவிக்கப்படும் என்றும் திடசித்தம் கொள்வதாம்.



## ஆறாவது:-

### வல் கத்ரி கைரிஹி வஷர்ரிஹி
### மினல்லாஹி தஆலா

நன்மையும் தீமையும் அல்லாஹ்வின் நாட்டத்தால் நிர்ணயிக்கப் பட்டு, நிகழ்வன வென்றும், **''வல்பஃதி பஃதல் மவ்த்து''** மரணத்திற்குப் பின் எழுப்பப்படும் என்றும், நிர்ணயம் செய்வதாம்.

ஒவ்வொரு மனிதனின் முடிவுநாள், அவரவர்க்குச் சிறிய கியாமத் நாளாக இருந்தாலும், எல்லோரும் அழிந்துபட்டுத் திரும்ப எழுப்பப்படும் உலக முடிவுநாள் **'கியாமத்துல் குப்ரா'**வாகும்.

# இஸ்லாம்

وَمَنْ يَّبْتَغِ غَيْرَ الْاِسْلَامِ دِيْنًا فَلَنْ يُّقْبَلَ مِنْهُ ۚ وَهُوَ فِي

الْاٰخِرَةِ مِنَ الْخٰسِرِيْنَ ○

***"இஸ்லாத்தையன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பி எடுத்துக்கொண்டால், நிச்சயமாக அவனிடமிருந்து (அது) அங்கீகரிக்கப் படமாட்டாது. மறுமையில் அவன் நஷ்டமடைந்த வனாகவே இருப்பான்."***

***"(அல்லாஹ்வாகிய) அவன்தான் தன்னுடைய தூதரை நேரான வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும், அனுப்பி வைத்தான்; இணைவைத்து வணங்குவோர் (அதனை) வெறுத்த போதினும் (உலகிலுள்ள) எல்லா மார்க்கங்களையும் அந்த சத்திய (இஸ்லாம்) மார்க்கம் ஜெயித்துவிடும்." (61:9)***

***"ஒருவனுக்கு அல்லாஹ் நல்வழி காட்ட நாடுவானாகில், அவன் மனத்தை இஸ்லாத்தில் விரிவாக்குவான்."***

***"எவனுடைய இருதயத்தை இஸ்லாத்தை அடைய அல்லாஹ் விசாலப் படுத்துகிறானோ? அவன் தன் இறைவனின் பிரகாசத்திலிருக்கின்றான்."***

***"திட்டமாக அல்லாஹ்வால் ஆக்கப்பட்ட மார்க்கமாவது இஸ்லாமாக இருக்கும்; இஸ்லாமையே உங்களுக்கு மார்க்கமாகத் தெரிந்தெடுத்தேன்; நீங்கள் முஸ்லிம் அல்லாதவராக மரணிக்க வேண்டாம்." (குர்ஆன்)***

இஸ்லாம் எனப்படுவது:- அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு வழிபட்டும், அவன் விலக்கியவைகளைத் தவிர்த்தும் நடப்பது மாகும்.

இஸ்லாம் மார்க்கம் நபி பெருமானார் (ஸல்) அவர்களால் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டதல்ல. ஆதம் அலைஹிஸ்ஸலாம் காலந்தொட்டே இருந்து வருகிறது. அதனால் இப்ராஹீம் நபி (அலை) அவர்களாலேயே பெயர் சூட்டப்பெற்றது. ஆதலால், இதற்கு



***'மில்லத்'* இப்ராஹீம்,** (=இப்ராஹீமுடைய மார்க்கம்) என்று பெயர் கூறப்படுகிறது. இந்தமார்க்கத்திற்கு **'இஸ்லாம்'** என்றும், அதைப் பின்பற்றுவோருக்கு, 'இறைவனுக்கு முற்றும் வழிபட்டோர்' என்ற அர்த்தத்தையுடைய **'முஸ்லிம்'** என்றும் பெயரிட்டவர் இப்ராஹீம் நபியவர்கள் தாம்.

நமது தந்தை இப்ராஹீம் (அலை) அவர்களை விசுவாசித்துப் பின்பற்றியவர்கள்; **'லாஇலாஹ இல்லல்லாஹு இப்ராஹீம் கலீலுல்லாஹ்'** எனக் கூறினர். பின்னர் நமது நாயகம் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றிய நாம் ஒப்புக் கொண்டு செயல்படும் கலிமாக்களின் விபரம் கீழ்வருமாறு.

## முதலாவது கலிமா

**(தைய்யிபு) மணமானது**

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ ۱۰

**'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி.'**

'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; முஹம்மது நபி 'ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வுடைய திருத்தூதராக இருக்கிறார்கள.'

இந்த மணமிக்க கலிமாவைக் கூறுபவர்களாகிய முஸ்லிம்கள் பின்வரும் நான்கு கடமைகளையும் புரிந்து மொழியவேண்டும்.

1. அல்லாஹ் என்ற ஒரு இறைவன் உண்டு என்று உறுதிப் படுத்துவது.
2. அந்த அல்லாஹ்வினுடைய வர்ணனைகளை உறுதிப்படுத்துவது.
3. அந்த இறைவனின் வலுப்பமிக்க செயல்களை உறுதிப் படுத்துவது.
4. இந்தவிதமான அல்லாஹ் ஒருவனுண்டு என்பதை ரஸூல் மார்களால் உண்மையாக்கி வைக்கப்பட்டது என்று உறுதிப் படுத்துவதுமாகும்.

## இரண்டாவது கலிமா

**(ஷஹாதத்து) சாட்சி பகர்தல்**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ
مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

***'அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்க லஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு'.***

உண்மையாக நான அறிந்து சாட்சி சொல்லுகிறேன். நிச்சயமாக வணக்கத்திறகுரியவன் அல்லாஹுவைத்தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையுமில்லை. இன்னும் பிசகற அறிந்து சாட்சி சொல்லுகிறேன். நிச்சயமாக, முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய உயரிய அடியா ராகவும், உண்மைத் தூதராகவும் இருக்கிறார்கள்.

## மூன்றாவது கலிமா

**(தம்ஜீது) பரிசுத்தமாக்குதல்**

سُبْحَانَ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَاللّٰهُ أَكْبَرُ
وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ

***'ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலா இலாஹா இல்லல்லாஹு வல்லாஹு அக்பர், வலா ஹவ்ல வ லா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம்.'***

அல்லாஹ் பரிசுத்தமானவன்; சர்வ புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தானது. மேலும் வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. அவன் மிகப்பெரியவன். இன்னும் பாவங்களை விட்டும் விலகிக் கொள்வதற்கும், நன்மைகளைச் செய்ய பலமும் வல்லமையும் மிக்க உயர்வுள்ள அல்லாஹ்வுடைய உதவி கொண்டே தவிர வேறில்லை.



## நாலாவது கலிமா

**(தவ்ஹீது) ஓர்மைப்படுத்தல்**

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ
يُحْيِيْ وَيُمِيْتُ بِيَدِهِ الْخَيْرُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

***'லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல்முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வ யுமீத்து பியதி-ஹில் கைரு வஹுவ அலாகுல்லி ஷைஇன் கதீர்.'***

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன்; அவனுக்கு யாதொரு இணையு மில்லை, சகல ராசாங்கமும் அவனுக்கே உரித்தானது. இறந்தவர்களை உயிர்ப்பிப்பான்; உயிருள்ளவர்களை மரணமடையச் செய்வான். எல்லா நன்மைகளும் அவன் வசமே. அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் பேராற்றலுள்ளவன்.'

## ஐந்தாவது கலிமா

**(ரத்துல் குப்ரி) குப்ரை விலக்குதல்**

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ أَنْ أُشْرِكَ بِكَ شَيْئًا وَّأَنَا أَعْلَمُ
وَأَسْتَغْفِرُكَ لِمَا لَا أَعْلَمُ إِنَّكَ أَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ تُبْتُ
عَنْهُ وَتَبَرَّأْتُ عَنْ كُلِّ دِيْنٍ سِوٰى دِيْنِ الْإِسْلَامِ أَسْلَمْتُ
وَاٰمَنْتُ وَأَقُوْلُ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ -

***'அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மின்அன் உஷ்ரிக்க பிக்கஷைஅன் வஅன அஃலமு வ அஸ்தஃக் பிருக்க லிமாலா அஃலமு இன்னக்க அந்தத் அல்லா முல்குயூப் துப்து அன்ஹு வதபர்ரஃது அன்குல்லிதீனின் ஸிவா தீனில் இஸ்லாம் வ அஸ்லம்து வ அகூலு லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி.'***

அல்லாஹ்வே நான் உன்னை அறிந்தவனாகயிருக்கும் நிலைமையில், உனக்கு வேறு எந்த பொருளையும் இணை வைக்காமல் இருப்பதற்கு உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன், நிச்சயமாக, நீதான் மறைவானவைகளை மிக அறிந்தவன். நான் உன்னைக் கொண்டு இணைவைப்பதென்னும் ஷிர்க்கைவிட்டும் தவ்பா செய்து, மனம் திரும்பினேன். இஸ்லாமிய சன்மார்க்கத்தைத் தவிர்த்து, மற்றைய சகல மார்க்கங்களையும் விட்டு நான் நீங்கிவிட்டேன். இன்னும் நான் (உனக்குப்) பணிந்தேன் (இஸ்லாமில் ஆனேன்) மேலும் வணக்கத் திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹுத் தஆலாவின் திருத்தூதராக இருக் கிறார்கள்' எனப் பொருள்படும் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி என்று மொழிந்தவனாக (ஈமான்) உறுதி கொண்டேன்.

மேற்கூறிய கடமை மொழிகளையும் கூறி இஸ்லாத்தைத் தழுவிய ஒருவர் கீழ்க்காணும் ஐந்து நியமனங்களையும் உணர்ச்சியோடு ஏற்று அனுஷ்டானத்தில் கொண்டு நடந்து வரவேண்டும்.

## இஸ்லாத்தின் நடைமுறை விதிகள் ஐந்து

### புனியல் இஸ்லாம் அலாகம்ஸின்

1. **ஷஹாதது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹி.** உண்மையில் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும் சந்தேகமற விசுவாசித்தல்.

2. **வ இகா முஸ்ஸலாத்தி.** தொழுகையை நியமமாய்த் தொழுது வருதல்.

3. **வ ஈத்தா உஸ்ஸகாத்தி.** ஏழைகளுக்காக தனவந்தர்கள் செலுத்தும் கட்டாய வரி.

4. **வ ஸவ்மு ரம்ளான.** ரமலான் மாத நோன்பு நோற்றல்.

5. **வ ஹஜ்ஜுல் பைத்தி மனிஸ்த தாஅ இலைஹி ஸபீலா.** சக்தியுள்ளோர் (ஹஜ்ஜு) மக்கா யாத்திரை செய்தல்.



இவைகள் ஐந்தும் ஒவ்வொருவர் மீதும் (பர்ளு) கடமையாகும். ஆனால்,

ஒன்றாவதாகிய கலிமா ஷஹாதத்தை பக்குவ வயது வந்ததும், மனத்தில் நினைத்து, மனமார விசுவாசித்து வாயால் மொழிவது, (இஸ்லாத்தில்) முதற் கடமையாகும்.

## தக்வா, தவ்ஹீது, ஸுஹ்து, மஃரிபத்து

### தக்வா (பக்தி)

***"(விசுவாசிகளே!) நீங்கள் அல்லாஹ்வுக்கு பயப்பட வேண்டியவாறு மெய்யாகவே பயப்படுங்கள், முற்றிலும் அவனுக்கு வழிபட்டவர்களாக அன்றி, நீங்கள் இறந்துவிட வேண்டாம்."***

***(3:102)***

அன்பும் பயமும் ஒன்றாகக் கலந்து திரண்ட நிலைக்குத்தான் தக்வா என்பர். இதனை ஓர் உதாரணத்தின் மூலம் விளங்கிக் கொள்வது நலம். ஒரு எசமானனிடமிருந்து பலனை எதிர் பார்க்கும் ஒரு ஊழியன், தன் எசமானனின் மனம்போல் நடந்து, அவரது அன்பையும், அவருக்கு வெறுப்பானவற்றைச் செய்வதால் என்ன தீங்குகள் நேருமோ? என்ற அச்சத்தால் செய்யாமலும், அவரது பிரியத்தைச் சம்பாதிப்பதுபோல், சிருட்டி கர்த்தாவின் ஏவல் விலக்கல்களைக் கைக்கொண்டு அவன்பால் பக்தி செய்தலாம்.

**"திடனாக உங்களுக்கு முன், வேதத்தைக் கொடுக்கப்பட்டவர்களுக்கும், உங்களுக்கும் அல்லாஹுவை தக்வாச் செய்யுங்கள் என்று நாம் வஸிய்யத்துச் செய்தோம்."**

**"விசுவாசிகளே! நீங்கள், தக்வாச் செய்யும் நியமப்படி அல்லாஹுவைத் தக்வாச் செய்யுங்கள்."** ***(கலாமுல்லாஹ்)***

இந்தத் திருவாக்கியங்கள் அல்லாஹ்வுக்கு வழிபட வேண்டும், மாறு செய்யக் கூடாது; அவனை ஞாபகம் செய்ய வேண்டும், மறத்தல் கூடாது; என்று நமக்கும் முந்தைய வேதத்துடையவர்கட்கும் அருளப்பட்ட உபதேசமாகும் என்று அறியக் கிடக்கின்றது.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்கள்:-

'தக்வா' என்பது பாவத்தில் சிறியதையும், பெரியதையும் விட்டொழிவதாகும். முட்களைக் கண்டு பயந்து, பார்த்து மெதுவாக அதன்மேல் நடப்பது போன்று, நீ எந்தச் செயலையும் செய். சிறிய பாவத்தைச் சாதாரணமானதாக நினையாதே. எதற்கென்றால், மலைகள் சரள் கற்களால் திரண்டதாக இருக்கும். நன்மை சிறிய தாயினும் அதனைச் செய். ஆனால், தீமை சிறிதானதாயினும் அதனை விட்டுவிடு. தேன் ஒரு சொட்டாயினும் இன்பத்தைக் கொடுக்கும்; நஞ்சு ஒரு சொட்டாயிருப்பினும் அது உயிரைக் கெடுக்கும். ஆதலால் நன்மையையும் தீமையையும் பகுத்தறிதல் வேண்டும்'' என்பதாம்.

உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்:-

தக்வாவின் அர்த்தமாவது:- அல்லாஹ் ஹராமாக்கினதை விடுவதும், பர்லாக்கினதை எடுத்து நடப்பதுமாம். அப்பால் இந்த இரண்டு காரியங்களுக்கும் அதிகமாக ஒரு அடியான் நடந்து கொள்ளும் நன்னடத்தைப் பிரதியாக, அல்லாஹ் கொடுப்பதாவது **'கைருன் அலா கைரு'** நன்மைக்குமேல் நன்மையாகும் என்பதாம்.

**''எவர்கள் தங்கள் இறைவனுக்கு தக்வாச் செய்து (பயந்து) கொண்டிருந்தார்களோ? அவர்களை (அந்தநாளில்) கூட்டம் கூட்டமாக சுவர்க்கத்தின்பால் கொண்டு வரப்படும். அதன் சமீபமாக அவர்கள் வரும் சமயத்தில், அதன் வாயில்கள் திறக்கப்பட்டு; அதன் காவலாளர்கள் அவர்களை நோக்கி, உங்களுக்கு சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக; நீங்கள் பாக்கியவான்களாகிவிட்டீர்கள். நீங்கள் இதில் நுழைந்து, என்றென்றுமே இதில் தங்கிவிடுங்கள்'' என்று கூறுவார்கள். (39:73)**

**''அதற்கவர்கள் புகழடங்கலும் அல்லாஹ்வுக்குரியனவே! அவன் தன்னுடைய வாக்குறுதியை எங்களுக்கு உண்மையாக்கி வைத்தான்; சுவனபதியில் நாங்கள் விரும்பிய இடமெல்லாம் சென்றிருக்க, அதன் பூமியை எங்களுக்குச் சொந்தமாக்கி வைத்தான்'' என்று கூறுவார்கள். நன்மை (தக்வாச்) செய்தோர்களின் கூலி இவ்வாறு நன்மையாகவே ஆயிற்று.'' (39:74)**

## தவ்ஹீது (ஏகத்துவம்)

**''ஜின்களையும், மனுவையும் (எனக்கு வழிபட்டு) என்னை வணங்குவதற்கன்றி (நான் அவர்களை) படைக்கவில்லை.'' (51:56)**



சுருங்கக் கூறுமிடத்து, உன்னுடையது என்னுடையது என்று எந்தப் பொருளையும் உடைமை பாராட்டுவதையும், இறைவனைத் தவிர உள்ள மற்ற எல்லாவற்றையும், தன் இருதயத்திலிருந்து அகற்றி, அல்லாஹ் ஒருவன் என்ற நம்பிக்கையைச் சிந்தையில் திடப்படுத்தி, அவனையே வணங்குவதில் மனத்தை ஒருமைப்படுத்துவதே தவ்ஹீதின் நிலை.

## ஸுஹ்து (பற்றற்ற நிலை)

**''நிச்சயமாக முஃமின்களுக்கு சுவனபதி உண்டு. அதைக் கிரயப் படுத்துவதற்காக அன்னாரின் உடலையும், உயிரையும், பொருளையும் அல்லாஹ் அவர்களிடம் கிரயத்திற்கு வாங்கினான்; இந்தக் கிரயம் உங்களுக்கு மங்களமாவதாக; இதனால் மறுமையில் சந்தோஷம் பெறத்தக்க பெரிய லாபத்தைக் காண்பீர்கள்.'' (குர்ஆன்)**

**''என்னுடைய அருள் பொருந்திய அடியானை முதன்முதலில் நஷ்டத்தைக் கொண்டும், மனைவி மக்களின் கஷ்டத்தைக் கொண்டும், ஏனையவர்களால் அச்சமூட்டுவது கொண்டும், சில சமயம் பசியினால் பீடிக்கும்படிச் செய்தும், பரிசோதனை பண்ணுவேன். அது சமயம் என்னுடைய உண்மையான பக்தன் 'எது வரினும் வரட்டும்; எல்லாம் ஆண்டவன் செயல்; அந்த ஒப்பற்ற நாயனின் பொருத்தமும், சந்தோஷமும்தான் எனக்கு வேண்டும்; மற்றவை யாவும் அனாவசியம்' என தைரியமாய் சொல்லுவான்.'' (குர்ஆன்)**

''இவ்வுலகம் விசுவாசிகளுக்கு சிறைச்சாலையாகவும், அவிசுவாசிகளுக்கு சுவனபதியாகவுமிருக்கிறது.'' (நா-வா)

இந்தத்திரு வாக்கியங்கள் இந்த உலக விஷயத்தில் ஸாஹிதீன்களுடைய நிலைமையைக் கூறுகின்றன. அவர்கள் இந்த உலகிலுள்ள பொருட்கள் அனைத்தும் அழிந்துவிடுகின்றன; மனிதன் மரணிக்கும் சமயம் அவனுக்கு உலகத்தோடுள்ள தொடர்பும் நீங்கிவிடுகிறது. அன்றியும், இந்த உலகம் என்றும் நிலைத்திருப்பதில்லை; ஆனால், மறு உலகமோ! பரிசுத்தம் வாய்ந்தது; அழியாமலே என்றென்றும் நிலைத்திருப்பது; ஒருபோதும் முடிவு காணப்படாதது'' என்று அந்த ஸாஹிதீன்கள் கருதுவதால், இந்த உலகை, மறு உலக வாழ்வுக்குப் பகரம் அல்லாஹ்வுக்குக் கிரயமாக விற்கிறார்கள். இது மாத்திரமா! அவர்களுக்கு இந்த உலகம் மிக இலேசாகவும், வெறுக்கத்

தக்கதாகவும் இருக்கிறது; ஆதலால், இந்த உலகினும் பன்மடங்கு மேம்பாடுடையதாக மறு உலகைக் காண்கிறார்கள். இந்த நிலையை யுடைய பெரியாரைத்தான் ஸாஹிதீன் (பற்றற்றவர்) எனக் கூறுகிறோம். ஸுஹ்து என்பதுவும் இதுவே.

## மஃரிபத் (ஒரு பொருளை உள்ளபடி உணரும் மெய்யறிவு)

அல்லாஹ் என்ற தாத் ஆனது (அசல் அல்லது மூலப் பொருள்) எந்தவிதப் பொருள்களைக் கொண்டும் நிர்ணயிக்க, அதாவது திடப்படுத்த முடியாத ஓர் உள்ளமைப் பொருள்.

அஃது, பாரம்பரிய நூல்கள் வாயிலாகவும், புத்தியின் சக்தியினால் ஏற்படுகிற அறிவின் மூலமாகவும், சிந்தனா சக்தியினால், மனத்தில் தோன்றுகின்ற தோற்றத்தினாலுண்டாகிற ஆதாரங்கள் மூலமாகவும், உறுதியாயிருக்கின்ற ஓர் உள்ளமைப் பொருள் ஒன்றுண்டு என்று சொல்லுவதுதான் அல்லாஹ்வின் தாத் (அசல்).

இந்தப்பொருள் அல்லாத, மற்றவை யாவும், இல்லாப் பொருள்; இதைத்தான் உள்ளமைப் பொருள் ஒன்று உண்டு என்பவர்களின் கூற்று.

"**நா**ன் மறைபொருளாக இருந்தேன், பின்னர் நான் அறியப்பட நாடி படைப்புகளைப் படைத்தேன்." (ஹதீது குதுஸி)

"**தீ**னில் முதல் கடமையாவது அல்லாஹ்வை ஐயமற அறிவதாம்." (நா-வா)

"**தி**ட்டமாக அல்லாஹுவுத் தஆலா ஆதமை தன் சூரத்தின்மேல் படைத்தான்; ஆகவே, ஓ இன்ஸானே! நீ உன் நப்சை அறி - அப்படி அறிந்தாயாகில் உன் நாயனை அறிவாய்." (நா-வா)

மஃரிபத் இருவகைப்படும்:- ஒன்றாவது **'மஃரிபத் தன்ஸீஹி'** ***(லைஸக மித்லிஹி ஷைஉன்)*** 'அவனைப்போல் ஒரு வஸ்துவு மில்லை' என்றும், ***(வ லம்யகுன்லஹு குப்வன் அஹத்)*** 'அவனுக்கு ஒரு வஸ்துவும் நிகரில்லை' என்றும், இன்னும் அவனது தாத்துக்கு மட்டு திட்டம் ஒன்றும் இல்லை என்றும் அறிதலாம்.

இரண்டாவது:- **மஃரிபத்து 'தஷ்பீஹி'** அதாவது அவனது தாத்தைப் பொறுத்தமட்டில் மட்டுத்திட்டம் இல்லை. ஆனால்,



அவனது இயல்புகளால் நிகழும் **'தஜல்லிய்யாத்'**துகளை (தோற்றத்தைப்) பொறுத்தமட்டில் மட்டுத்திட்டம் உண்டென்று அறிதலாம்.

ஒரு மனிதனிடம் **மஃரிபத் தன்ஸீஹிய்யி** மாத்திரம் உண்டாகியிருந்தால், அது சம்பூர்ணம் ஆகாதென்றும், **மஃரிபத் தஷ்பீஹீ** மாத்திரம் இருந்தால் அது குழப்பத்திற்கு இடமளிக்கிறது என்றும், சொல்லப் படுகிறது. ஆரிபுகளில் சிலர் அறிவித்திருப்பதுபோல், சம்பூர்ண மஃரிபா வாகிறது, **தன்ஸீஹுவும் தஷ்பீஹுவும்** கூடி உருவான களங்கமற்ற பூரண அறிவு.

அவன் தனது **'தஜல்லிய்யாத்** (பரஞ்சோதி)களால் **தஷ்பீஹின்** காரணமாகப் பலவித **'மளாஹிறு'** (தோற்றம்)களில் வெளியாகின்றானாயினும், அவனது அசல் உள்ளமையும், இயல்பும் என்றும் இருந்தபடியே இருக்கிறது என்றும், **'தன்ஸீஹ்'** அவனது தாத்தால் உண்டானதென்றும் **'தஷ்பீஹ்'** அவனது **'மள்ஹறரால்'** உண்டான குணமல்லாது வேறல்ல என்றும், இன்னும் அவன் இந்த இரண்டையும் விட்டு விலகிய கலப்பற்ற தனிப்பொருள் என்றும் அறிதல்.

**"நபியே! அவர்கள் செய்யும் கருமங்களைவிட்டும் நாயன் தூய்மையானவன் என்று கூறுவீராக."**

***(கலாம் ஷரீப்)***

என்ற திருவாக்கியத்திற்கேற்ப நமது நபி(ஸல்) அவர்களும்-

"**அ**ல்லா(ஹ்) ஆதியில் தன்னோடு எத்தகைய வஸ்துவு மில்லாது தன்னந்தனியாகவே இருந்தான்; இப்போதும் அவன் அப்பொழுது இருந்தபடியே இருக்கிறான்" என்று திருவுளமானார்கள்.

# செல்வம் நிலையற்றது

## 25

சுருங்கும் 'இக்பா'லின் சொற்புரட்டி
  சொல்ல லாபகா வானதுபோல்
திர்ஹம் தீனாரின் ஒடுக்கமது
  தீங்காய் ஹம்நாறா முனதுசிந்தை
மருளும் தஹபுக்கும் பில்ளத்துக்கும்
  மாலுக்கும் மஃனாவைப் பாரு
பொருளை வெறுப்பாயிப் பொருளைக்கொண்டு
  போதும் உபதேசம் உனக்கிதுவே.

**அரும்பதவுரை:-**

இக்பால்-முன்னோக்கல். லாபகா- ஸ்திரமற்றது. திர்ஹம்-வெள்ளி நாணயம், தீனார்-தங்க நாணயம். ஹம்-துக்கம். நாறு-நெருப்பு. தஹபு-தங்கம் பில்ளத்-வெள்ளி, மால்-சொத்து மஃனா-பொருள்.

مَا عِنْدَكُمْ يَنْفَدُ وَمَا عِنْدَ اللَّهِ بَاقٍ ط

**''உங்களிடமுள்ள (பொருள்கள்) யாவும், செலவழித்துவிடும்; அல்லாஹ்வினிடத்திலுள்ளவைகளோ (என்றென்றும்) நிலை பெற்றிருக்கும்.'' (அல்குர்ஆன்)**

ஐந்து எழுத்துக்களாகிய **'இக்பால்'** என்ற அரபிப் பதத்துக்கு 'முன்னோக்குதல்' என்று பொருள். இந்த எழுத்துக்களைப் புரட்டிப் படித்தால் அது **'லாபகா'** என்றாகும்; அதன் பொருள் நிலையற்றது என்பதாம். இதுபோல் **திர்ஹம்** (-வெள்ளி நாணயம்), **தீனார்** (-தங்க நாணயம்) இந்த இரு சொற்களின் ஈற்றசைகளைப் படித்தால் **'ஹம்'** என்றும் **'நாறு'** என்றும் ஆகும். இதன் பொருள் துக்கம், நெருப்பு என்பதாம். இந்த வண்ணம் திர்ஹத்தின் மேல் ஆசையுற்று, அதை அளவுக்கு மிஞ்சி திரட்டுவதற்காக மதிமயங்கித் திரிகின்றவர்கள், முடிவில், முடிவற்ற துக்கத்தாலும், தீனாருக்கு வேண்டித் தம் அரும்



வாழ்க்கையைத் தியாகம் செய்பவர்கள், இறுதியில் கொடிய நெருப்பாலும் பீடிக்கப்படுவார்கள் என்ற உண்மை புலப்படும். இவை இரண்டும் தான் இந்தவிதம் துன்பத்தைத் தரும் என்று நினைக்க வேண்டாம்; உலகில் காணப்படும் மற்றைய செல்வங்களும் முடிவில் துக்கத்தையும் நாசத்தையும்தான் கொண்டுவரும். இங்கு இதுபற்றிய சம்பவம் ஒன்று நமது கவனத்திற்குக் தரப்படுகிறது.

## நன்றி மறவேல்

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:-

பனீ இஸ்ராயில்களில் ஒரு குட்டரோகி, ஒரு வழுக்கைத் தலையன், ஒரு குருடன் ஆகிய மூவர் இருந்தனர். அவர்களை இறைவன் சோதிக்க நாடி, அவர்களிடம் ஒரு மலக்கை அனுப்பி வைத்தான். அந்த மலக்கு முதலில் குட்டரோகியிடம் வந்து, ''உனது விருப்பம் என்ன? எது தேவை?'' என்று கேட்டார். அதற்கவர் எனது இந்த வியாதியின் காரணத்தால் மக்கள் எல்லாம் என்னை வெறுக்கிறார்கள். அடுத்து நெருங்க விடுகிறார்களில்லை. ஆதலால், என் வியாதி நீங்கி, என் மேனி நன்றாக வேண்டும் என்பதே என் விருப்பம்'' என்றார். உடனே அந்த மலக்கு அந்த மனிதனின் மேனியைத் தடவினார். அதே நேரத்தில் அவரின் மேனி முழுவதும் அழகுள்ளதாகிவிட்டது. பின்னர், ''உனக்கு எந்தப் பொருளின்மீது விருப்பம்?'' எனக்கேட்டார். அதற்கவர், ''ஒட்டகத்தின் மீதுதான் விருப்பம்'' என்றார். அதற்கேற்ப ஒரு சினை ஒட்டகையைக் கொடுத்து, அல்லாஹ் இதில் பரக்கத்துச் செய்வானாக'' எனக் கூறிச் சென்றார்.

பின்பு வழுக்கத்தலையனிடம் வந்து, ''உனது விருப்பம் என்ன?'' என்று கேட்டார். அதற்கவர், தலை வழுக்கையாகயிருப்பதால், அது என் அழகைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. என் தலையில் உரோமம் முளைக்க வேண்டும். அதுவே எனக்கு விருப்பம்'' என்றார். உடனே அந்த மலக்கு, அந்த மனிதனின் தலையைத் தடவினார். அதே நேரத்தில் தலையில் முடி முளைத்து நன்றாகிவிட்டது. பின்பு ''உனக்கு எந்தப் பொருளின்மீது ஆசை?'' எனக் கேட்டார். அதற்கவர் ''எனக்குப் பசுவின்மீது விருப்பம்'' என்றார். அதன்படி ஒரு சினைப்பசுவைக் கொடுத்து, அல்லாஹ் இதில் பரக்கத்துச் செய்வானாக,'' என்று கூறிச் சென்றார்.

அதன்பின் குருடனிடம் வந்து, ''நீர் என்ன விரும்புகிறீர்? உமது தேவை என்ன?'' என்று கேட்டார். அதற்கவர், ''இறைவன் என் கண்களை நன்றாக்க வேண்டும்; நான் எல்லோரையும் பார்க்க வேண்டும் இதுவே என் ஆசை'' என்றார். அதன்படி அந்தமலக்கு அந்த மனிதனின் கண்களைத் தடவினார். உடனே கண் தெரிந்தது. பின்பு ''உனக்கு எந்தப் பொருளின்மீது விருப்பம்?'' என்று கேட்டார். அதற்கவர், ''எனக்கு ஆட்டின் மீதுதான் விருப்பம்'' என்றார். அதற்கேற்ப ஒரு சினை ஆட்டைக் கொடுத்து, ''அல்லாஹ் இதில் பரக்கத்துச் செய்வானாக'' என்று கூறிச் சென்றுவிட்டார். இந்த மூவரின் ஒட்டகம், பசு, ஆடு ஆகியவைகள் குட்டிகள் ஈன்று பெருகிவிட்டன. சில வருடங்களுக்குப்பின்:-

இறைவனின் உத்தரவுப்படி, அந்த மலக்கு முன்பு வந்த உருவத்தில் அந்த குட்டரோகியிடம் வந்து, நான் ஒரு பரதேசி, பிரயாணத்திற்குரிய சாமான்கள் எல்லாம் முடிவடைந்து விட்டன. நான் என் ஊர் செல்வதற்கு அல்லாஹ்வையும், உன்னையும் தவிர வேறு வழியில்லை. ஆதலால் உனக்கு அழகிய மேனியையும், நிறத்தையும் கொடுத்த இறைவனின் பேரால், உன்னிடத்தில் ஒரு ஒட்டகம் கேட்கிறேன், கொடுப்பீரானால் அதன் மீது ஏறி என் ஊர் செல்ல வசதியாகும்'' எனக்கேட்டார்.. அப்போது அந்தமனிதன், ''எனக்கு வேறு பல கடமைகளிருக்கின்றன. ஆதலால் உமக்குக் கொடுக்க வசதியில்லை. நீர் சென்றுவிடும்'' என்றுரைத்தான். அப்போது அந்தமலக்கு ''ஏ மனிதனே உன்னை நான் அறிவேன். நீ குட்டரோகியாக இருக்கவில்லையா? அதனால் மக்களெல்லாம் உன்னை வெறுக்கவில்லையா? நீர் யாது மற்ற ஏழையாக இருந்தபோது, இறைவன் உனக்கு இவ்வளவு பாக்கியங்களையும் கொடுக்கவில்லையா?'' என்று எடுத்துக் கூறினார். அதற்கவன் ''ஓஹோ! அப்படியா சொல்கிறீர்? இந்தப் பொருட்களெல்லாம் தலைமுறை தலைமுறையாக என் மூதாதைகள் மூலம் கிடைத்தவைகள்'' என்றான். அதற்கு அந்த மலக்கு ''நீ பொய்யனாக இருந்தால் இறைவன் உன்னைப் பழையபடி ஆக்குவானாக'' என்று கூறினார்.

பின்பு வழுக்கத்தலையனிடம் வந்து, குட்டரோகியிடம் கேட்டது போலவே கேட்டார்.. அதற்கு அவனும் குட்டரோகி போலவே பதில் சொன்னான். அப்போது அந்தமலக்கு, ''நீ பொய்யனாக இருந்தால் இறைவன் உன்னை முன்பு போலவே ஆக்குவானாக'' என்று கூறினார்.



பின்பு குருடனிடம் வந்து, ''நானொரு வழிப்போக்கன், பிரயாணச் சாமான்களெல்லாம் முடிந்துவிட்டன. எனது ஊர் செல்வதற்கு அல்லாஹ்வையும் உன்னையும் தவிர வேறு வழியில்லை. ஆதலால் எந்த இறைவன் உனக்கு மறுமுறையும் கண்ணுக்குப் பார்வையைக் கொடுத்தானோ, அந்த இறைவன்பேரில் ஒரு ஆடு கேட்கிறேன்; நீர் கொடுப்பீரானால், அதன் மூலம் நான் என் ஊர் செல்ல வழி ஏற்படும்'' எனக் கேட்டார். அப்போது அந்த மனிதன், ''ஆம், நான் குருடனாக இருந்தேன். இறைவன் எனக்குப் பார்வையைக் கொடுத்து, இவ்வளவு பாக்கியத்தையும் கொடுத்தான். ஆதலால், உமது மனம் விரும்பும் அளவு எடுத்துக் கொள்வீராக. இறைவன்மீது ஆணையாக நான் உம்மைத் தடுக்கமாட்டேன்'' என உரைத்தான். அந்த மலக்கு உமது பொருளை நீரே வைத்துக் கொள்ளும், எனக்குத் தேவையில்லை. இறைவன் உங்கள் மூவரையும் சோதிக்க நாடினான். சோதனை முடிந்துவிட்டது'' எனக் கூறிச் சென்றுவிட்டார்.

(பிஹிஷ்தீசேவர்)

(முந்திய இருவரும் நன்றி மறந்ததால், பழைய நிலையை அடைந்தனர். மூன்றாமவர் நன்றி மறவாமையால், அவரின் பொருட்கள் நிலைத்தன. அல்லாஹ்வின் திருப்தியும் கிடைத்தது.)

## பொன்னாசையின் விளைவு

ஈஸா நபி (அலை) அவர்கள் தம் சிஷ்யன் ஒருவனோடு காட்டின் வழியாக ஒரு ஊருக்குப் பிரயாணம் செய்தபோது, களைப்பின் மிகுதியால் ஓர் ஆற்றங்கரையில் தங்கி, தாம் கொண்டு வந்த மூன்று ரொட்டிகளில் இரண்டை ஆளுக்கொன்றாகத் தின்று, ஒன்றை மீதி வைத்தனர். ஈஸா அவர்கள் வெளியில் சென்று சற்று நேரத்திற்குப்பின் வந்து பார்க்கும்போது மீதி ஒரு ரொட்டியும் காணாமையால், சிஷ்யனைப் பார்த்து, ''அந்த ரொட்டி எங்கே?'' என்று வினவ, அதற்கவன் நான் அறியேன் என்றனன்.

பின்னர், அங்கிருந்து புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கையில், கொல்லப்பட்ட ஒரு மானைப் பார்த்து''ஓ மானே! நீ அல்லாஹ்வின் உத்தரவு கொண்டு உயிர்பெற்றெழு'' என மொழிந்தார். அந்தமான் உடன் உயிர் பெற்றெழுந்து சென்றது. நபி அவர்கள் அவனை நோக்கி, ''உனக்கு இந்த அற்புதத்தைக் காண்பித்த ஆண்டவன்மீது ஆணையாக,

அந்த ரொட்டி எங்கே? சொல்'' என்றார்கள். அதற்கவன் எனக்குத் தெரியாது என்றான்.

அதன் பின், அங்கிருந்து தண்ணீர் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்த ஒரு சிறு ஆற்றங்கரையை அடுத்தபோது, ஈஸா(அலை) அவர்கள் அந்த மனிதனின் கையைப் பற்றிக்கொண்டு இருவருமாக நீர்மேல் நடந்து அக்கரை சேர்ந்ததும், அவனை நோக்கி ''உனக்கு இந்த அற்புதத்தைக் காட்டிய இறைவன்மீது சத்தியமாக, அந்த ரொட்டி எங்கே போயிற்று?'' என மீண்டும் வினவினார்கள். அவன் முன்போலவே ''அதை நான் அறியேன்'' என்றான்.

பின்பு, அங்கிருந்து ஒரு மணல் வெளியை இருவரும் அடைந்தனர். ஹஸ்ரத் அவர்கள் அங்கு கொஞ்சம் மணலைக் குவித்து ''அல்லாஹு<sup>ச்</sup>வின் வல்லமைகொண்டு இந்தக்குவியல் பொன்னாகக் கடவது'' என்று கூற, அந்தமணல் குவியல் முற்றிலும் பொன்னாக மாறியது. அதனை மூன்று பங்குகளாகப் பிரித்து அந்த மனிதனிடம் ''இதில் ஒரு பங்கு உனக்கும், ஒன்று எனக்கும், மற்றொரு 'பங்கு அந்த ரொட்டியை எடுத்தவனுக்குமாகும்'' என மொழிந்தார்கள். உடன்தானே அவன் ''பொன்னாசையினால், அந்த ரொட்டியை எடுத்தவன் நானே'' என்று ஒப்புக் கொண்டான். ஈஸா(அலை) அவர்கள் ''இந்த மூன்று குவியல்களையும் நீயே எடுத்துக் கொள்'' என்று கூறியவர்களாக அங்கிருந்து சென்றனர்.

அந்தப்பேராசைக்காரன் மிக்க மகிழ்ச்சியோடு இவ்வளவு பொன்னையும் ஊர் கொண்டு சேர்ப்பது எங்ஙனம்? என்று யோசனையில்லாழ்ந்திருக்கும் போது, அந்த வழியாக வந்த இருவர் அந்த மனிதனையும், பொற்குவியல்களையும் கண்டு, பிரமித்து, அதனை அபகரிக்க எண்ணி, அவனைக் கொல்ல எத்தனித்தனர். இதனையுணர்ந்த அவன் ''எனக்கு நீங்கள் சகோதரர்கள்' வீணாக என்னைக் கொல்ல வேண்டாம்; இந்தமூன்று குவியல்களையும் ஆளுக்கொன்றாக எடுத்துக்கொள்வோம்'' என்று பணிந்து கூறியவனாய்த் தங்களது பசிக்கு உணவு வாங்கிவர பக்கத்திலுள்ள ஊருக்குச் செல்லலானான்.

போகும்போது தன் மனத்திற்குள் தனக்குரிய இரண்டு பொற் குவியல்களை அவர்களுக்குக் கொடுக்க மனமற்றவனாக எவ்விதமும் அந்தப்பாதகர்களை ஒழித்துக்கட்டத் தீர்மானித்து, உணவைத் தான் வயிறார உண்டபின், அவர்களுக்காக வாங்கிய உணவில் விஷத்தைக் கலந்துகொண்டு வந்தான். இங்கு இவன் இவ்வாறு செய்ய, அங்கு அந்த இருவரும் எல்லாப் பொன்னையும் தாமே அபகரிக்க எண்ணி, அவன் வந்ததும், அவனைக் கொன்றுவிட வேண்டுமென்று முடிவுசெய்து, உணவு கொண்டு வந்ததும், அவனைக் கொன்று தீர்த்தனர். பின்னர், அந்த இருவரும் பசியின் கொடுமை தணிந்ததும் பங்குவைக்கலாம் என்ற நினைப்புடன் உணவை அவாவுடன் உட்கொள்ள உணவில் கலந்த விஷம் தலைக்கேறி அங்கேயே சாய்ந்து மடிந்தனர்.



பின்னர், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தம் சிஷ்யர்களுடன் அந்த வழியாக வரும்போது, பொற்குவியல்கள் அப்படியே இருப்பதையும், பக்கத்தில் மூவர் மடிந்து கிடப்பதையும் கண்டு மிகவும் துக்கித் தவராக, தோழர்களுக்கு அதனைக்காட்டி, ''என் தோழர்களே! ஆசையினால் வந்த மோசத்தைப் பாருங்கள்!'' என்று முன் நிகழ்ந்த வற்றைக் கூறி, நீங்களும் உலக ஆசைகளைவிட்டும் உங்களைத் தவிர்த்து கொள்ளுங்கள்'' என்று அறிவுறுத்தினார்கள்.

ஆகவே, இந்த நிகழ்ச்சியினால், மனிதன் மகா சக்தியுடை யவனாக இருந்தபோதிலும், அவன் தன் தேவைக்கு மேல் அதிகமான பொருட்களில் இச்சை வைத்து, அதனோடு நெருங்கிப் பரிமாறுவதால் இந்த அகிலத்தில் பெரும் கொடுமைகள் நிகழ்வதுபோன்றும், மறுஉலகிலும் பெருங்கஷ்டங்கள் நிகழும் என்பதை நமது திருமறை அச்சுறுத்துகின்றது.

***''(பொன் வெள்ளியாகிய) அவற்றை நரக நெருப்பால் பழுக்கக் காய்ச்சி, அவற்றைக் கொண்டு அவர்களுடைய நெற்றிகளிலும், அவர்களுடைய விலாக்களிலும், அவர்களுடைய முதுகுகளிலும் சூடிட்டு உங்களுக்காக நீங்கள் சேகரித்து வைத்திருந்தவை இவைகள்தான்; ஆகவே, நீங்கள் சேகரித்து வைத்திருந்த இவற்றை (சிறிது) சுகித்துப் பாருங்கள்'' என்று கூறப்படும் நாளை (நபியே! நீர் அவர்களுக்கு ஞாபகமூட்டும்) (9:35)***

சகோதரர்களே! பொருளாசையானது, இம்மையிலும், மறுமை யிலும், மானிடனை நாசப்படுத்தக்கூடிய நஞ்சு ஊட்டப்பட்ட கருவி களாக இருப்பதால், அவற்றின் மீதுள்ள பற்றுதலை ஒழித்து, ''போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்ற திருப்தியோடு வாழ்பவர்கள், இகபரம் இரண்டிலும் இன்ப வாழ்வை எய்துவர் என்பது திண்ணம்.

## பழங்காலக் குபேரர்களின் கதி

### 26

போதும் பொருளெச் சொன்னவரார்?
 போகா திருந்தவர் எவர்சொல்லப்பா?
ஏது கணக்கிலும் எத்தாமுதல்
 ஈந்தான் இறையவன் காரூனுக்கு
வாதுரை ஹாமான் பிர்அவ்னுக்கு
 வகுத்த வாழ்வு கொண்டவர்களொரு
போதும் போதுமென் றுரைக்கவில்லை
 போனவர் யாரும் மீண்டதில்லை.

**அரும்பதவுரை:-**

போகாதிருந்தவர்- மரணிக்காமலிருந்தவர். காரூன், ஹாமான், பிர்அவ்ன் என்பவர்கள்- முற்காலத்தில் அளவிறந்த செல்வமுடைய விதண்டாவாதிகள்.

وَقَارُونَ وَفِرْعَوْنَ وَهَامَانَ وَلَقَدْ جَاءَهُم مُّوسَىٰ بِالْبَيِّنَاتِ
فَاسْتَكْبَرُوا فِي الْأَرْضِ وَمَا كَانُوا سَابِقِينَ ۝ فَكُلًّا أَخَذْنَا
بِذَنبِهِ فَمِنْهُم مَّنْ أَرْسَلْنَا عَلَيْهِ حَاصِبًا وَمِنْهُم مَّنْ أَخَذَتْهُ
الصَّيْحَةُ وَمِنْهُم مَّنْ خَسَفْنَا بِهِ الْأَرْضَ وَمِنْهُم مَّنْ أَغْرَقْنَا
وَمَا كَانَ اللَّهُ لِيَظْلِمَهُمْ وَلَٰكِن كَانُوا أَنفُسَهُمْ يَظْلِمُونَ ۝

***''காரூனையும், பிர் அவ்னையும், ஹாமானையும் (நாம் இவ்வாறே அழித்துவிட்டோம்) நிச்சயமாக, மூஸா, இன்னோருக்குத் தெளிவான அத்தாட்சிகளையே கொண்டு வந்திருந்தார். எனினும், இவர்கள் (அவைகளை நிராகரித்துவிட்டு) பூமியில் பெருமை கொண்டு நடந்ததினால் (நம் வேதனைக்குள்ளானார்கள். அதிலிருந்து) தப்பித்துக் கொள்ள முடியவில்லை.'' (29:39)***



***''அவர்கள் ஒவ்வொருவரையும் அவர்கள் பாவத்தின் காரணமாகவே நாம் (பலவாறாகப்) பிடித்துக்கொண்டோம். அவர்களில் (ஆது மக்களைப் போன்ற) சிலர்மீது நாம் கல்மாரி பொழிந்தோம், அவர்களில் (ஸமூது மக்களைப் போன்ற) சிலரை இடிமுழக்கம் பிடித்துக் கொண்டது. அவர்களில் (காரூன் போன்ற) சிலரை நாம் பூமியில் ஆழ்த்திவிட்டோம். அவர்களில் (பிர்அவ்ன் ஹாமான் போன்ற) சிலரை (நீலாற்றில்) மூழ்கடித்தோம். அல்லா(ஹ்) அவர்களுக்கு அநீதி செய்யவில்லை. எனினும் அவர்கள் (யாவரும்) தங்களுக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டனர்.'' (29:40)***

**காரூன்:-** இவன் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய சிறிய தகப்பனாரின் மகன். இவன் முதலில் சிறிதுகாலம் மூஸா (அலை) அவர்களைப் பின்பற்றியவனாக இருந்து, பின்னர்.

***''ஏராளமான பொக்கிஷங்களை நாம் அவனுக்குக் கொடுத்தோம்; அவைகளின் சாவிகளை மாத்திரம், பலவான்களான எத்தனையோ பேர்கள் மிகக் கஷ்டத்தோடு சுமக்க வேண்டி இருந்தது.'' (28:76)***

இவ்வாறு இறைவன் அவனுக்கு அளித்தவற்றின் மமதை யாலும், செல்வச் செருக்காலும் நபி அவர்களுடைய கொள்கை களுக்கும், போதனைகளுக்கும் விரோதமாக நடந்ததுமன்றி, அன்னார்க்கும் பல இன்னல்களை விளைவித்து மரணமடைந்தான்.

**ஹாமான்:-** இவன் 'பிர் அவ்ன்' என்ற அரசனது மந்திரி.

**பிர் அவ்ன்:-** எகிப்து நாட்டு அரசன்.

பிர் அவ்ன் என்பது ஒரு இயற்பெயரல்ல. ஈரான் நாட்டு அரசர்களுக்குக் 'கிஸ்ரா' என்றும், ரூம் தேசத்து அரசர்களுக்குக் 'கைஸர்' என்றும், துருக்கி தேசத்து மன்னர்களுக்கு 'காக்கான்' என்றும், அபிஸீனியா சக்கரவர்த்திகளுக்கு 'நஜ்ஜாஷீ' என்றும், எமன் தேசத்து அரசர்களுக்கு 'துப்பஉ' என்றும், அந்தந்த நாட்டு அரசர்களைக் குறிக்கும் பரம்பரைப் பெயர் உண்டாகியிருப்பது போன்று, 'அமாலிகா' என்ற வர்க்கத்தின் அரசர்களுக்குப் பொதுவாக 'பிர் அவ்ன்' என்றப் பட்டப்பெயர் வழங்கி வரப்பட்டது.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் காலத்தில் எகிப்து நாட்டை ஆண்டுவந்த பிர் அவ்னின் இயற்பெயர் 'வலீது' என்பதாம். இவன் தகப்பன் பெயர் 'மிஸ்அபு.' இந்தப் பிர்அவ்ன் 400 வருடங்களுக்கு

மேலாக வாழ்ந்திருந்தான் எனச் சொல்லப்படுகிறது. இவனும், மந்திரி ஹாமானும், வம்பன் காரூனும், மூஸா (நபி) அவர்களுக்கு இழைத்த துன்பங்களுக்கு வரையறை கிடையாது. இவர்களுக்கு இறைவனால் அளிக்கப்பட்டிருந்த செல்வங்களுக்கும் மட்டுத்திட்டம் கிடையாது.

இவ்வாறிருந்தும், அவர்கள் அந்தச்செல்வங்களால் திருப்தி அடைந்தனரா? இல்லை; மேலும் மேலும் செல்வம் தேடுவதிலயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். அளவுக்கு மிஞ்சிய செல்வங்களால் செருக்குற்று, நபி மூஸா அவர்களுக்குப் பல அநீதிகளைப் புரிவதற்குத் துணிந்தனர்.

**"நிச்சயமாக பிர் அவ்னுடைய மக்களிடம் பல எச்சரிக்கைகள் வந்தன. நம்முடைய திருஷ்டாந்தங்கள் யாவையும் அவர்கள் பொய்யாக்கிக் கொண்டே வந்தார்கள். ஆகவே மிக்க சக்திவாய்ந்த பலசாலி பிடிப்பதைப்போல், நாம் அவர்களைப் பிடித்துக் கொண்டோம்." *(54:41-42)***

நபி அவர்களின் சாபமும் சூழ்ந்தது, முடிவில் இறைவனது கட்டளைப்படி, பிர் அவ்னும் அவனது கூட்டத்தாரும் நீலாற்றிற்குள் மூழ்கடிக்கப்பட்டனர். காரூனும் அவனைச் சார்ந்தவர்களும் பூமிக்குள் ஆழ்த்தப்பட்டனர். அவர்களுடைய செல்வங்கள் யாவும் மண்ணுக் கடியில் புதையுண்டன.

இவை சம்பந்தமான சின்னங்கள் இந்தக் காலத்திலும்கூட எவ்வளவோ பூமிக்குள்ளிருந்து புதைப்பொருளாக எடுக்கப்படுவது போதிய அத்தாட்சியகும்.

**நம்ரூத்:-** ஒரு காபிர் அரசனின் பெயர். அவன் ஹல்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் காலத்தில், ஈராக் நாட்டின் உறுதியான சுதந்திரமான அரசனாக இருந்தான். அவனே நபி இப்ராஹீம் (அலை) அவர்களை நெருப்பில் தள்ளியவன். அல்லாஹ்வின் அருளுக்கிணங்க அதில் அவர்களுக்கு எந்தவிதத் தீமையும் விளையவில்லை. அந்த அரசன் தானே கடவுள் என்று வாதித்தான். பல சூழ்ச்சிகளைக் கையாண்டு, தன்னை மனிதர்கள் வணங்கும்படி செய்வித்தான். கடைசியாக, அல்லாஹ் தற்பெருமையும், தலைவெறியும் கொண்டிருந்த அவனுக்கு அவனது தற்பெருமைக்குரிய தண்டனையைக் கொடுத்தான்; மிகச்சிறிய ஒரு பிராணியால் அவனை நிர்மூல மாக்கினான். ஒரு கொசு அவனது மூக்கின் வழி மூளைக்குள் புகுந்து



மண்டை ஓட்டைத் துளைத்து விட்டது. அது அவனது மரணத்துக்கு ஏதுவாயிற்று.

சிந்தியுங்கள்! இத்தகைய வன்மை மிக்க அரசர்களின் குபேர சம்பத்துகளும், ஆடம்பர ஆட்சிகளும் அன்னாரின் மிருகத்தனமான கொடுமையின் காரணத்தால் அழிந்தொழிந்தன.

**"நாம் நம்முடைய தூதர்களை ஒருவர்பின் ஒருவராக அனுப்பிக் கொண்டேயிருந்தோம். எந்த வகுப்பாரிடம் நம்முடைய தூதர் வந்த போதிலும், அவர்கள் அவரைப் பொய்யாக்கிக் கொண்டேயிருந் தார்கள்.ஆகவே நாமும் (அந்த வகுப்பார்களை) ஒருவருக்குப்பின் ஒருவராக அழித்துக் கொண்டே வந்தோம். அவர்கள் அனைவரையும் (பின்னுள்ளோர் பேசக்கூடிய) வெறும் சரித்திரமாக்கிவிட்டோம். ஆகவே விசுவாசம் கொள்ளாத (இத்தகைய) மக்களுக்குக் கேடுதான்." *(23:44)***

## ஹலாலான உணவு

### 27

மண்ணா லமைந்தவன் பசியும் தாகம்
    மண்ணைக் கொண்டல்லால் முடிவதில்லை
எண்ணா தெண்ணங்கள் எண்ணி எண்ணி
    இழந்தான் ஆவிஎல்லாம் அபதாய்க்
கண்ணால் கண்டதெல்லாம் கதைபோல்
    கரத்தில் காட்டுமக் காரணத்தை
நண்ணாய் சூறத்துத் தத்பீபுலே
    நாயன் சொன்னதை யோதிப்பாரே.

### 28

அல்ஹாக்கு முத்தக் காதுரிலே
    அல்லாஹ் உரைத்ததின் பயனையொத்து
அல்ஹாதிர் ரசூல் ஹதீதுதன்னில்
    அன்னாசு நியாமெனவும் சொன்னார்
சொல்ஹாத் தோழனே ஏதுமாகை
    தோணுதோ உன்றன் சிந்தைதனில்
பல்காவிய மெடுத் தோதிடினும்
    பயனைக் காண்கிலேன் ஹா! புதுமை,

**அரும்பதவுரை:-**

27. அபதாய்- வீணாய், சூரத்துத் தத்பீப்-குர்ஆன் 83-ம் அத்தியாயத்தின் பெயர்.

28. அல்ஹாக்கு முத்தக் காதுரி-குர்ஆன் 101-ம் அத்தியாயத்தின் பெயர். ஹாதி-வழிகாட்டி, ஹதீது -நாயகவாக்கியம் அன்னாசு-மனிதர். நியாயம்-உறக்கம். பல்காவியம்-பல நூல்கள்.

كُلُوا وَاشْرَبُوا وَاعْمَلُوا صَالِحًا

**"நீங்கள் உண்ணுங்கள்; பருகுங்கள்; நல்ல அமல்களைச் செய்யுங்கள்."**

ஆண்டவன் ஹக்கு தஆலா. தன்னை அடிபணிந்து வணக்கம் புரிவதற்காக மானிட வர்க்கத்தையும், இந்த மானிட கோடிகளின் சுகவாழ்வின் நிமித்தம், உலக சம்பவத்தையும், அதி அற்புதமாக படைத்தருளி, சர்வ சாதனத்தையும் கொண்டு மானிடர்கள் இரு விதமான பரிபக்குவமடைய வேண்டுமென்று ஏற்படுத்தியுள்ளான். அவற்றுள்:- 1. அனுதினமும் அந்த அல்லாஹ~வை பக்தி பூர்வமாய்த் தொழுது, துதித்து நாம் ஆத்ம பரிசுத்தம் பெற்றுய்ய வேண்டும் என்பது. 2. உலக வாழ்வுக்கு மூலாதாரமாக வேண்டப்படும், சாதனங்களை நியாயமான முறையில் சம்பாதித்தும், நல்லவிதமாக அனுபவித்தும், மறுவுலக வாழ்வுக்காக நற்செயல்களைச் செய்வதற்கும், வறியோரைப் பாதுகாப்பதற்குமாக சேமித்து வைக்க வேண்டுமென்பதாகும். இவை மனிதனின் உன்னத முறைகளாகும் என்பது மேற்கூறிய இறை வசனத்தின் கருத்து.

உலக வாழ்விற்கு உணவு இன்றியமையாதது; ஏனெனில், மனிதர்கள் தங்களின் ஜீவ முக்திக்கு வேண்டி ஆண்டவனுடைய தீதாராகிய தரிசனையை நாடிச் செல்கிறார்கள். ஆதலால், அவர்கள் உணவு உண்ணுவது தீனுடைய காரியங்களில் மிக அவசியமான ஒன்றாகும். இதனாலேதான் அல்லாஹ் உணவையும், வணக்கத்தையும் ஒருங்கே, சேர்த்தே கூறியுள்ளான்.



**"ஏ நம்பிக்கைக் கொண்டவர்களே! ஆண்டவன் உங்களுக்கு அளித்துள்ள ஆகாரங்களில் நின்றும், நல்ல பரிசுத்தமானவைகளையே புசிப்பீர்களாக; நீங்கள் உண்மையில் அவனையே வணங்குபவர்களாக இருப்பீர்களாயின், அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திக் கொள்ளுங்கள்" (அல்குர் ஆன்)**

"ஒருவன் ஹலாலான ஆகாரத்தைக் கூடுமானவரை தெரிந்து புசிக்க மாட்டானோ? அதுவரை அவனது வணக்கம், பக்தி முதலியவைகள் ஆண்டவனால் அங்கீகரிக்கப்படமாட்டாது." (நா-வா)

ஹலான உணவு அல்லது ஹராமான உணவு, இந்த இரண்டில் எதை நீங்கள் உபயோகிக்கின்றீரோ, அதற்குரிய பலனையே அடைவீர். சுத்தமும் நல்வழியிலும் தேடியதுமான உணவினால் நற்குணம் உண்டாகும். ஹராமும் விருத்திக்கேடுமுள்ள உணவினால் கெடுதியே விளையும், மார்க்கக் கடமைகளும் வீணாய்ப்போகும். பிரார்த்தனைகளும் அங்கீகரிக்கப்படாதொழியும்.

ஹராமான உணவை எவனொருவன் உண்டானோ, அவனது தேக உறுப்புக்கள் அவன் நாடினும் நாடாவிடினும், அவனுக்குத் தெரியினும், தெரியாமல் போயினும் பாவங்கள் பண்ணுவதிலேயே ட தகின்றன. எவன் உண்ணும் உணவு ஹலாலாக இருக்கின்றதோ, அவனுடைய அவயவங்கள் வணக்கத்தை மேற்கொள்ளுகின்றன; நலமான விஷயங்களில் பக்க பலமாகவும் இருக்கின்றது.

(இஹ்யாவுல் உலூம்)

ஏன்? உணவுப் பொருட்கள் உடலோடு சேரக்கூடியதாகும்; உடலுடைய உறுப்புக்கள் ஒவ்வொன்றும் வணக்கத்திற்குரியன வாகையால், அதில் கூடியமட்டும் தெரிந்து ஹலாலான உணவுகளையே சேர்க்க வேண்டும்.

## ஹலாலான இறைச்சி

**"அல்லாஹ்வின் பெயர் சொல்லி அறுக்கப்படாததை நீங்கள் புசிக்காதீர்கள். நிச்சயமாக அவ்வாறு செய்வது யோக்கியமாகாதது."**

ஷெய்த்தான் தனது நண்பர்களைத் தூண்டிவிட்டு, இதற்குப் பல குதர்க்கமான வியாக்கியானங்கள் கொடுத்து, அல்லாஹ்வுக்கு மாறுசெய்ய வைப்பான். அதை ஏற்று நீங்கள் விக்கிரக

தொழும்பர்களாக மாறும் நிலைக்குப் போய்விட வேண்டாம் என்று திருமறை தரும் கருத்தைக் கவனியுங்கள்.

***(விசுவாசிகளே! அறுக்கும்போது) ''அல்லாஹ்வுடைய பெயர் கூறப்படாதவற்றை நீங்கள் புசிக்காதீர்கள். நிச்சயமாக அது (பெரும்) பாவமாகும். (இதில்) உங்களுடன் தர்க்கிக்குமாறு நிச்சயமாக ஷெய்த்தான் தன்னுடைய நண்பர்களைத் தூண்டுகின்றான். நீங்கள் அவர்களுக்கு வழிப்பட்டால், நிச்சயமாக நீங்களும் (அவர்களைப் போல்) இணைவைத்து வணங்குவோர் தாம்.'' (6:121)***

***(விசுவாசிகளே!) ''நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வுடைய வசனங்களை விசுவாசித்தவர்களாகயிருந்தால் (அறுக்கும்போது) அல்லாஹ்வுடைய பெயர் கூறப்பட்டவற்றையே புசியுங்கள்.'' (6:118)***

இறைவனிட்ட கட்டளை இவ்வாறிருக்க, தற்காலத்தில் பல நாட்டு முஸ்லிம்களும், ஹலால் அல்லாத இறைச்சியைப் புசிப்பதுடன், குர்ஆனின் முன் அறிவிப்பின்படி குதர்க்க வியாக்கியனமும் செய்கின்றனர். அன்னாரின் வாதம் தவறானதாகும்.

ஒரு பிராணியின் இறைச்சி ஹலாலாகுவதற்குச் சில சட்டங்கள் இருக்கின்றன. இதற்கு மாற்றமாக, ஒரு முஸ்லிமே ஒரு பிராணியை அறுத்தால் கூட, அதை உண்பது ஹராமாகும் என்றிருக்க, முஸ்லிம் அல்லாதார் அறுப்பதை எங்ஙனம் உண்ண முடியும். தவிரவும் ஷரீஅத்தில் கூறப்படும் முறைப்படி அறுத்தால் மாத்திரமே, இரத்தம் முற்றாக வெளியேற வாய்ப்பு இருக்கிறது. ஷரீஅத்து முறைக்கு மாறாக இறக்கும் பிராணிகள் எல்லாவற்றிலும் சாவுக்குப் பின்னுள்ள வலிப்பு (POST MORTEM RIGIDITY OR POST MORTEM STIFFNESS) என்ற மரத்துப் போகுதல் ஏற்படுகிறது.

பிராணிகளை அறுப்பதற்குப் பின்வரும் வழிமுறைகள் இருக்கின்றன.

*1.* அறுப்பவர் முஸ்லிமாக இருக்க வேண்டும். ஆண், பெண், சிறுவர், உம்மத்தர் யாரும் முறைப்படி அறுத்தால் உண்ணலாம்.

*2.* அறுக்கும் கத்தி, கண்ணாடி போன்ற ஆயுதங்கள் கூர்மையாக இருக்கவேண்டும். ஆயுதங்களின் உதவியாலன்றி அழுத்தத்தினால் செத்தால் உண்பது ஹராம்.



*3.* அறுப்பவர், 'பிஸ்மில்லாஹ்' சொல்லவேண்டும். ஹனபி மத்ஹபில் பிஸ்மி சொல்ல மறந்துவிட்டாலும், ஷாபிஈ மத்ஹபில் வேண்டுமென்றே விட்டுவிட்டாலும், உண்பது ஆகும். (ஏன்? முஸ்லிமாக இருப்பதால் தான்)

*4.* கழுத்தின் முடிச்சுக்குக் கீழேயுள்ள உணவுக்குழல், காற்றுக்குழல் இரண்டும் துண்டிக்கப்பட வேண்டும்.

*5.* அறுக்கப்படும் சமயத்தில் பிராணிக்கு நிலையான உயிர் இருக்க வேண்டும். (வேட்டை ஆடும் பறவை, மிருகங்கள் சம்பந்தமாக வேறுபல சலுகைகள் உள்ளன. விரிவான நூல்களில் இது விஷயம் நிரம்பப் பார்க்கலாம்.)

*அன்றியும்:* அறுத்தவர்கள் யாரென்று அறியப்படாததை உண்பதும் ஹராம். எந்த இறைச்சியையும் 'பிஸ்மி' சொல்லிக் கொண்டு உண்டால், கூடிவிடும் என்று சிலர் கூறுவது தவறாகும்.

தற்கால யூதர்களிடையே'கோஷர்' என்ற மாமிச உணவு வழக்கத்தில் இருந்து வருகிறது. இந்த உணவு அனேகமாக விமானங்களிலும் கிடைக்கும். கோஷர் இறைச்சி யூதர்களின் முறைப் படி அறுக்கப்பட்டாலும், அது இஸ்லாமிய முறைக்குள் அமைந்ததாக இருப்பதால் அதை உண்பது ஹனபி மத்ஹபின் படி ஆகும்.

தற்கால யூதர்களும், கிறிஸ்தவர்களும் சட்ட ரீதியான வேதத்துடையவர்கள் அல்லர் என்ற கருத்து ஷாபிஈ மத்ஹபின் இமாம்களிடம் இருந்து வருவதால், அன்னார் அறுத்த மாமிசத்தை உண்பதுகூடாது என்று விலக்கியுள்ளார்கள்.

## விலக்கப்பட்டத் தொழில்கள்

*போதைப் பொருள்கள்:* இவைகளைத் தனியாக அல்லது சிற்றுண்டி சாலைகள், உணவகங்கள், அன்றி வாணிகப் பொருள்களுடன் வைத்துப் பரிமாறுதலும், பன்றி இறைச்சி, திருடப்பட்ட பொருள்கள், வட்டித்தொழில், நாய், பன்றி இவற்றின் தோல்கள் (இவை பாடம் பண்ணப்பட்டாலும் சுத்தமாவதில்லை) சினிமா, நாடகம் இவைகளில் நடித்தல், அதற்குச் சம்பந்தப்பட்ட உபகரணங்கள், இசைக்கருவிகள், சுவாமிப்படங்களை பிரஸ்தாபித்தல், ஜும்ஆவுடைய நேரத்தில் கடை திறந்திருந்து தொழில் செய்தல், தட்டுப்பாடான காலத்தில் உணவு தானியங்கள்,

அத்தியாவசிய பண்டங்கள் ஆகியவற்றைப் பதுக்கி வைத்தல் போன்றவை தடுக்கப்பட்ட பொருட்களும், தொழிலுமாகும்.

சுவாமிப் படங்களுக்குப் பிரேம் போட்டுக் கொடுப்பது, காபிராக்குவதைத் தூண்டி, முஸ்லிமாக விரும்புகிறவரை தடுப்பதைப் போன்ற குற்றமாகும்.

சில முஸ்லிம்கள் விலக்கப்பட்டவைகளைத் தம் கடையில் வைத்து விற்காவிட்டால், தமது தொழில் பாதிக்கப்படும் என்று கருதுவதும், அவற்றில் யாதேனுமொன்றை தொழிலாகக் கொண்டவர், இந்த வாய்ப்பு தமக்கு இல்லாவிட்டால் குடும்ப வாழ்க்கையே சீணித்து விடும் என்று எண்ணுவதும் தவறான எண்ணமாகும்.

இன்னும்:- சாராயம் காய்ச்சுபவனுக்குக் கொடி முந்திரிப்பழம் விற்பதும், உருவ வழிப்பாட்டுக்குச் செல்பவனுக்கு பழம், தேங்காய், பூ, வாசனை திரவியம் போன்றவை விற்பதும், இவை அன்றி, தவறான செய்கைகளுக்குப் பயன்படுத்தப்படுமென்று தனக்குத் தெரியும் பொருள்களை விற்பதும் 'ஷாபிச' மத்ஹபின்படி ஹராமாகும். ஆனால் ஹனபி மத்ஹபில் ஹலாலான பொருள்கள் எதையும் யாருக்கும் விற்கலாம் என்று சட்டம் இருக்கிறது.

## பண்ட மாற்று

பிலால் (ரலி) அவர்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்களிடம், ''நல்ல பேரீத்தம் பழம் கொண்டு வந்து கொடுக்கவும், நாயகம் (ஸல்) அவர்கள் அதை வாங்குமுன் ''உமக்கு இது ஏது?'' என்று வினவ, அதற்கவர் 'என்னிடம் மட்டமான பேரீத்தம் பழம் இருந்தது. அதில் இரண்டு மரக்கால் கொடுத்து இதில் ஒரு மரக்கால் வாங்கினேன்.'' என்றார். அதைக் கேட்ட நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் ''கைசேதமே! இதுதான் வட்டி. இப்படிச் செய்யாதிரும், உம்மிடமிருந்த பேரீத்தம் பழத்தை ஒரு விலைக்கு விற்று, இந்தப் பேரீத்தம் பழததை, ஒரு விலை கொடுத்து வாங்கும் ''என்று கட்டளை பிறப்பிததார்கள்.''

பேரீத்தம் பழத்தைப் பேரீத்தம் பழத்திற்குப் பதிலாகவும், உப்பை உப்பிற்குப் பதிலாகவும், மணிக்கோதுமையை மணிக் கோதுமைக்குப் பதிலாகவும், தங்கத்தை தங்கத்திற்குப் பதிலாகவும், வெள்ளியை வெள்ளிக்குப் பதிலாகவும், அந்தக் கைக்கு இந்தக்



கையாக வியாபாரம் செய்யுங்கள். ஏற்ற வாட்டமாக விற்பது வட்டியாகும்.

(நா-வா)

அளக்கப்பட்ட பொருளிலும், நிறுக்கப்பட்ட பொருளிலும் ஒருவருக்கொருவர் மாற்றும்போது, இனம் ஒன்றாக இருந்தால், தவணை வைக்காமல் உடனடியாக சரிக்குச் சரியாக விற்க வேண்டும்.

அதாவது:- ஒருவர் வெள்ளை நெல் ஒரு மரக்காலும், மற்றவர் சம்பா நெல் ஒரு மரக்காலும் சரிசமானமாக உடனடியாக மாற்றிக் கொள்வது குற்றமில்லை. ஒருவர் ஒரு மரக்காலும், மற்றவர் ஒன்றே கால் மரக்காலும் அல்லது இரண்டும் ஒவ்வொரு மரக்காலுமாகத் தவணை வைத்து வாங்குவதும் ஹராம். ஆனால், ஒவ்வொன்றிற்கும் ரூபாய் கிரயம் வைத்து அல்லது கைக் கடன் என்று வாங்குவதும் குற்றமில்லை. (இந்நூல் 179-ம் பக்கத்தில் குறிப்பிட்டப்படி ஒத்தி அடமானம் ஆகியவையும் வட்டியே.)

இவை வட்டி, ஹராம் நுழையாமல் இருப்பதற்குள்ள வழி முறைகளாகும்.

''வட்டி வாங்குகிறவனுடைய வியாபாரத்தில், அல்லாஹ் பரக்கத்தை நீக்கி விடுகிறான்''. ''வட்டி தின்னுகிறவன் அல்லாஹ் வுடனும், அவனது ரஸூலுடனும் சண்டை செய்கிறவனாக இருக்கும்'' என்று அண்ணல் நபி (ஸல்) மொழிந்துள்ளார்கள்.

'பாவிகளை நரக வேதனையைவிட்டும் உரிமையிடப்படும் 'ரமலான்', 'லைலத்துல்கத்ரி' போன்ற புனிதமான நாட்களில், வட்டி தின்றவன் விடுதலைபெறமாட்டான், அவனைக் கூடுதல் வேதனைக்கு ஆளாக்கப்படும். (இப்னு ஹஜர், /ரலி)

ஹலாலான ஆகாரமும் ஹராமான வழியால் வந்து சேருமானால் அதுவும் ஹராமேயாகும். பொதுப்படையாக ஹலாலான ஆகாரம் எனப்படுவது, யாரையும் மோசம் பண்ணாமலும், வட்டி வாங்காமலும், திருடாமலும், கொள்ளை அடிக்காமலும், வஞ்சிக் காமலும், வகை மோசம் பண்ணாமலும், சோம்பலாக யாசகம் புரியாமலும், உழைத்துச் சிரமப்பட்டு நியாயமான முறையில் சம்பாதித்த பொருளுக்கே சொல்லப்படும். ஒவ்வொரு மனிதனும் இப்படிப்பட்ட நேர்மையான முறையில்தான் தம்மாலியன்ற ஒரு வர்த்தகத்திலோ, ஒரு கைத்தொழிலிலோ, உத்தியோகத்திலோ

ஈடுபட்டு, பொருள் ஈட்டி தன் தன் வாழ்க்கையை நடத்தி வர வேண்டும் என்று ஏவப்படுகிறோம்.

## வியாபார ஒழுக்கங்கள்

'அல்லாஹ் வர்த்தகத்தை (ஹலால்) ஆகுமாக்கி வைத்து வட்டியை (ஹராம்) விலக்கிவிட்டான். (2-275)

ஹலாலான சம்பாத்தியத்தின் மூலம் பொருள் தேடுதல் முதன்மையான மதக்கடமைக்கு அடுத்த கடமையாகும். (ஹதீது)

உணவுப் பொருள்களுக்காக வர்த்தகம் செய்வதும், கஷ்டப்பட்டு சம்பாதிப்பதும், ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் சுன்னத்தும், ஸஹாபாக்களின் வழக்கமுமாகும்; ஆகவே, நம் வாழ்விற்கு ஆதாரமான உணவுப் பொருட்களைச் சம்பந்திப்பதற்கு வியாபாரம், கைத்தொழில், மற்றும் பல தொழில்களைக் கைக்கொள்வது, ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.

நம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், இளமையிலிருந்தே வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். அவ்வாறே ஹல்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களும் துணி வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஹல்ரத் உமர் கத்தாப் (ரலி) அவர்கள் அரேபியாவில் கட்டிடங்கள் அமைப்பதற்கான கற்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்வதை முக்கியத் தொழிலாகக் கொண்டிருந் தார்கள். ஹல்ரத் உதுமான் (ரலி) அவர்களும், ஹல்ரத் அலீ (ரலி) அவர்களும் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். இன்னும் மகத்துவம் வாய்ந்த மற்றைய சஹாபாக்களும், ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டு, ஒவ்வொரு நாளும் 8 அல்லது 10 மணி நேரம் கஷ்டப்பட்டு உழைத்து, அதில் கிடைக்கம் வருவாயில், தாங்களும், தங்கள் குடும்பத்தினரும் சாப்பிடுவதுடன், ஏழைகளுக்கும் கதியற்றோருக்கும் உதவி புரிந்தும் வந்தார்கள்.

வியாபாரம் ஓர் உயரிய தொழிலாகும்; அதில் நீதியையும், நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டியதவசியம். அதிகாலையில் விழித்துத் தொழுகை முதலான தனது கடமைகளை எல்லாம் சரிவரச் செய்து கொண்டபின், ''இறைவா! நான் வியாபாரத் தொழிலில் ஈடுபடப் போகின்றேன். வர்த்தக விஷயத்தில் நான் முறைகேடாக நடக்காமலிருப்ப தற்கும், எனது பெற்றோர்களும், மனைவி மக்களும்,



உரிமையாளர்களும் உண்டு, சுகித்து, நன்றி கூறி, உன்னை வணங்குவதற்கும் வேண்டி; இந்த வியாபாரத்திலிருந்து எங்களுக்குப் போதிய வருவாயை நீ அதிகப்படுத்தி அருள்வாயாக'' எனப் பிரார்த்தனை செய்தவனாகத் தொழிலில் பிரவேசித்தல் வேண்டும்; இந்தப் பிரார்த்தனைக்கேற்ப வியாபார விஷயத்தில் நேர்மையை அனுசரிக்க வேண்டியதும், முக்கியக் கடமை யாகும். கூட்டு வியாபாரத் தில் பங்காளிகளுக்கிடையே ஒத்த அபிமானமும், நீதியும், எப்போதும் இருத்தல் அவசியம். இது விஷயத்தில் தவறிழைப்பது பற்றி இறைவன் திருமறையில் கண்டிப்புச் செய்து கூறுகிறான்.

**''விசுவாசிகளே! உங்களுக்குள் சம்மதத்தின் பேரில் நடைபெறும் வர்த்தக மூலமாக அன்றி உங்களில் ஒருவர் மற்றவரின் பொருள்களைத் தவறான முறையில் விழுங்கிவிட வேண்டாம்; அன்றி (இதற்காக) உங்களில் ஒருவருக்கொருவர் (சச்சரவிட்டு) வெட்டிக்கொள்ள வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ், உங்கள்மீது மிக்க அன்புடை யோனாக இருக்கின்றான்.'' (4:29)**

இறைவன் விதித்த கட்டளைப்படியே, நேர்மை தவறாது நடத்திவரும் வியாபாரத்திலிருந்து கிடைக்கும் ஊதியத்தில் நின்றும், ஒரு பாகத்தில் உங்கள் குடும்பச் செலவுகளை நடத்துங்கள். மற்ற இரு பாகங்களைத் தொழில் அபிவிருத்திக்கும், ஆண்டவனுக்குகந்த, தான தருமச் செலுவுகளுக்கும் பயன்படுத்துங்கள்.

மிதமிஞ்சிப் புசிப்பது விலக்கப்பட்டிருப்பது போன்று, மித மிஞ்சிய வருமானங்களைத் தீய வழிகளிலும், அந்தமான காரியங் களிலும் செலவிடுதல் விலக்கப்பட்டிருக்கிறது.

வியாபாரத் துறையில் அல்லாஹ்வின் அருள் சதாபொழியக் கூடியதாயிருப்பதால், அது விஷயத்தில் ஷரீஅத்தின் வழிமுறைப்படி நடப்பதாலும், பாத்தியப்பட்டவர்களுக்குச் சேர வேண்டிய பெருள்களைக் கொடுத்து விடுவதாலும், நம்மை அறியாமலே செல்வம் வந்து சேருகின்றது; இங்ஙனம் சேரும் செல்வங்கள்ன் மிகுதியால் தருமவான் என்ற பெயரும், மன்னாதி மன்னர்களோடு சமமாக வீற்றிருக்கக்கூடிய பாக்கியமும் கிடைக்கின்றது. இந்த உண்மையை யாரால் மறுக்கமுடியும்.

வர்த்தகத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை, மாற்றமான வழியில் செலவு செய்ய ஈடுபட்டால், தொழிலையும் இழந்து, துக்க

சாகரத்தில் மூழ்குவதுமல்லாமல், தன்னைத்தான் நொந்து, வெறுப்புற்று, புத்தி சுவாதீனமற்றவன்போல் காணப்படுவான். அன்றியும் பிறரிடம் யாசகம் கேட்கவும் துணிவான்.

**''எவரேனும் (அல்லாஹு'வின்) வரம்பை மீறி, அக்கிரமமாக இவ்வாறு செய்தால், நாம் அவனை (மறுமையில்) நரகத்தில் சேர்த்து விடுவோம்; இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிக்க சுலபமானதே.''**

**(4:30)**

அவன் அல்லாஹ்வின் கோபத்திற்குள்ளாகி இறுதியில் நெருப்புக்கு இரையாகுவான் என்பது நமது திருமறையால் அறியப்படும் உண்மையாகும்.

''தன் கை உழைப்பால் சாப்பிடுகிறவர், அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்தவரைப் போலாவார்; மனிதனிடத்தில் கேட்காமலிருப்பதற்கு யார் எனக்குப் பிணை கொடுக்கின்றார்களோ,'' அவர்களுக்கு நான் சுவர்க்கத்திற்குப் பிணையாக இருக்கிறேன்.''

(நா-வா)

இந்த மேன்மை தங்கிய ஹதீதில் இரண்டு விஷயங்கள் கூறப்படுகின்றன. அதாவது, தான் உழைத்துச் சாப்பிட வேண்டும் என்பது ஒன்று. மற்றவர்களிடம் யாசகம் கேட்கக்கூடாது என்பது மற்றொன்று. விசுவாசிகள் பிறரிடம் யாசகம் கேளாமல், தன் கை உழைப்பால் சுய சம்பாத்தியம் செய்வது அவசியம் என்பது இதிலிருந்து தெரியவருகிறது.

ஒருவர் யாசகத் தொழிலை தனது வயிற்றை நிரப்புவதற்குரிய அலுவலாகக் கொள்வாராயின், அவர் இறைவனால் தனக்கு அருளப் பட்ட உடல் வலிமை, அறிவு, ஆற்றல் முதலியவைகளைச் சரியாக உபயோகப்படுத்தாமல் இருக்க வேண்டியதாக ஏற்பட்டு விடுகிறது. அதனால், சோம்பல் உண்டாவதோடு, கிடைத்தவற்றை எல்லாம் உண்பதால் தொத்து நோயாளிகளாக, பூமிக்குப் பாரமாக வாழ் கின்றனர். அந்தோ! நாடு செழிக்க வேண்டுமாயின், நாட்டிலுள்ளோர் யாவரும் வாழவேண்டுமாயின், நாட்டிலுள்ளோர் ஒருவருக்கொருவர் உதவி பல புரியவேண்டுமாயின், தம்மாலியன்ற தொழிலை ஒவ்வொருவரும் செய்தே ஆவேண்டும். இவ்வாறு தொழில் செய்யாது, எந்தவித அலுவலையும் ஆற்றாது, பிறருடைய கையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள், எந்தச் சமூகத்தில் அதிகமிருக் கின்றார்களோ? அந்த சமூகத்தார் ஒருபோதும் முன்னிலைக்கு வரமுடியாது. பிறரது உழைப்பால் தான் வாழ்வது எவ்வளவு மதியீனம் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.



இந்தப்பிரபஞ்சத்தில் காணப்படும் ஒவ்வொரு புழு பூச்சி, பறவை மிருகம் யாவும் ஊர்ந்து நகர்ந்து, பறந்து, ஓடி உழைத்தே தத்தம் வாழ்வை நடத்தி வருகின்றன. சிறிய ஒரு எறும்புகூட சோம்பலாக வேலை செய்யாமலிருப்பதைக் காணமாட்டீர்கள்! மானிடனும் தன் சக்திக் கேற்றவாறு ஏதேனுமொரு தொழிலையோ, வர்த்தகத்தையோ, பற்றிக் கொண்டு அவசியம் பாடுபட்டுப் புசிக்கத்தான் வேண்டும்.

''அல்காஸிபு ஹபீபுல்லாஹ்.'' உழைப்பளி அல்லாஹு'வின் பிரியன்.

(நா-வா

ஒருமுறை நம் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒருவன் வந்து பிச்சை கேட்க, அதற்கு நபி (ஸல்) அவர்கள் அவனிடமிருந்த ஒரு பொருளை விற்கச்செய்து, அவனுக்கொரு கோடாரியை வாங்கித் தந்து, தாங்களே அதற்கொரு கைப்பிடியையும் போட்டுக் கொடுத்துக் காட்டிற்குச் சென்று விறகு வெட்டி விற்றுப் பிழைக்குமாறு கட்டளை இட்டார்கள். இதுதான் இஸ்லாத்தின் போதகரால் நடப்பாக்கிய நெறி.

நபி பெருமான் (ஸல்) அவர்கள் எவரிடத்திலும் உறுதி வாங்குவார்களாயின், பிரதானமாக அநீதி, அக்கிரமம், மோசம், ஏமாற்றுதல், துன்மார்க்க வழியில் சம்பாத்தியம் செய்தல் ஆகியவைகளை ஒழித்து விடும்படி வற்புறுத்துவார்கள்.

ஆகவே, ஆண்டவன் நமக்கு உழைத்துப் புசிக்கவும், தீனிய்யத்தான நற்காரியங்களில் செலவிடவும், சேவைபுரியவும் தன்னருளால் அறிவையும் ஆற்றலையும் தேக சௌக்கியத்தையும் தந்தருள்வானாக.

# அளவு நிறைகளில் மோசம் செய்வோரின் கதி

وَيْلٌ لِّلْمُطَفِّفِيْنَ ۝ الَّذِيْنَ اِذَا اكْتَالُوْا عَلَى النَّاسِ يَسْتَوْفُوْنَ ۝
وَاِذَا كَالُوْهُمْ اَوْ وَّزَنُوْهُمْ يُخْسِرُوْنَ ۝ اَلَا يَظُنُّ اُولٰٓئِكَ
اَنَّهُمْ مَّبْعُوْثُوْنَ لِيَوْمٍ عَظِيْمٍ ۝ يَوْمَ يَقُوْمُ النَّاسُ لِرَبِّ الْعٰلَمِيْنَ ۝

***''அளவில் மோசம் செய்பவர்களுக்குக் கேடுதான். 'அவர்கள் மனிதர்களிடம் அளந்து வாங்கினால், நிறைய அளந்து கொள்கின்றனர்.' 'மற்றவர்களுக்கு அவர்கள் அளந்து கொடுத்தாலும், அலலது நிறுத்துக் கொடுத்தாலும் குறைத்து (அவர்களை நஷ்டப்படுத்தி) விடுகின்றனர்.' 'மகத்தான ஒரு நாளில், நிச்சயமாக அவர்க்ள (உயிர் கொடுத்து) எழுப்பப்படுவார்கள் என்பதை அவர்கள் நம்பவில்லையா?' அந்தநாளில் மனிதர்கள் யாவருமே உலகத்தாரின் இறைவன் முன் (விசாரணைக்காக) நின்று கொண்டிருப்பார்கள்.''***

***(83:1-6)***

***''நீங்கள் நிறையில் வரம்பு மீறாதிருக்கும் பொருட்டு துலாக் கோலை அமைத்தான். ஆகவே, நீங்கள் (சரியான தராசு கொண்டு) நீதமாக நிறுங்கள், எடையைக் குறைத்து விடாதீர்கள்.''***

***(55:8-9)***

நபிகள் நாயகம் (ஸல்) கூறியிருப்பதாவது:-

ஐந்து காரியங்களால் ஐந்து காரியங்கள் உண்டாகின்றன:-

1. **வாக்குறுதியை முறித்தால் பகை வளரும்.**
2. **மார்க்கத்தின் சட்டதிட்டங்களுக்கு விரோதமாகத் தீர்ப்பு செய்தால், வறுமை அதிகரிக்கும்.**
3. **விபசாரம் பெருத்தால், சாவும், கொள்ளை நோயும் உண்டாகும்**
4. **அளவு, நிறை இவற்றில் கூடுதல் குறைவு செய்தால் கொடிய பஞ்சம் உண்டாகும்.**



5. **ஜக்காத் (ஏழைவரி) கொடுக்காமலிருந்தால், மழை பெய்யாது எனலாம்.**

ஒரு மனிதன் தராசு பிடித்து நிறுத்துக் கொடுக்கும் சாமான்களைக் கொண்டு வியாபாரம் நடத்திவந்தான். அவனுக்கு மரணம் சமீபித்தபோது, 'கலிமா தையிப்' சொல்லிக் கொடுக்கப்பட்டது. அதற்கு அவன் ''தராசு'' எனது நாவில் இருந்துகொண்டு கலிமாச் சொல்லவிடாமல் தடை செய்கின்றது'' என்றான். அவனிடம், ''ஏன்? நீ நிறையைச் சரியாக நிறுக்க வில்லையா?'' எனக் கேட்கப்பட்டது. அப்போது அவன் ''ஆம், தட்டில் புழுதி உண்டாகியிருக்கும் நிலைமையில் நிறுத்துக் கொடுத்தேன்'' என்று சொன்னான். வேறு விஷயங்களைக் கேட்குமுன் மரணித்து விட்டான். (ஆமிர் (ரலி)

மாலிக் இபுனுதீனார் (ரலி) அவர்கள் பின்வரும் செய்தி ஒன்றை அறிவித்துள்ளார்க்ள.

எனது அண்டை வீட்டுக்காரர் ஒருவர் மரணத் தறுவாயில் ''தமக்கு முன்னிலையில் இரண்டு நெருப்பு மலைகள் தோன்றுவது போலவும், தாம் அவற்றின் மேல் ஏறும்படி வற்புறுத்தப்படுவ தாகவும்'' சொன்னார். நான் அவரது காரியாதிகளைக் குறித்து விசாரித்தபோது அவர் இரண்டுவித இராத்தல் படிகள் வைத்திருந்தார் என்றும், சாமான் விற்பதற்கு ஒன்றையும், சாமான் வாங்குவதற்கு மற்றொன்றையும் உபயோகித்தார் என்றும் தெரியவந்தது. உடனே நான் அந்த இரண்டு படிக்கற்களையும் தருவித்து அவர் முன்னிலையில் உடைத்துவிட்டு 'இப்போது உமது நிலைமை எப்படி'? என்று வினவினேன். அவர் 'வருத்தம் மிகவும் அதிகப்பட்டுக் கொண்டிருக்கிறது' என்று கூறிக்கொண்டே இறந்து போனார்.

''படிகள் தலையிலும், தராசு நாக்கிலும் எவனது சீவனாம்சம் வைக்கப்பட்டிருக்கிறதோ, அவனிடம் எதையும் கேளாதீர்கள்'' என்று அலீ (ரலி) அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

''ஒரு வியாபாரச் சரக்கை விற்பவன் அதிலுள்ள கெடுதிகளை எடுத்துச் சொல்லவேண்டியது கடமை. இன்னும் அந்தக் கெடுதியை அறிந்திருப்பவனும் எடுத்துச் சொல்லுதல் கடமை. ஆகவே விற்பவனும் அறிந்திருப்பவனும் கெடுதியை விவரிக்க வேண்டியது 'வாஜிபா'கும். இன்னும் ஒரு வியாபாரச் சரக்கின் கெடுதியை மறைக்க முயல்பவன் சதாகாலம் அல்லா(ஹ்)வின் கோபத்திற்காளாகுவான்.

இன்னும் விற்கிறவனும், வாங்குகிறவனும் வியாபார விசயத்தில் உண்மையை வெளிப்படையாகச் சொல்லிப் பொருத்தமாக நடந்து கொண்டால், அந்த இருவரின் வாங்கல் கொடுக்கலில் 'பரக்கத்து' உண்டாகும். உண்மைக்கு மாறாகப் பொய்சொல்லி ஏமாற்றினால், பரக்கத்துக் குறைந்துபோகும். ஆகவே, இது விசயத்தில் நான் உங்களுக்கு அல்லா(ஹ்வை பயந்து கொள்ளும்படி எச்சரிக்கை செய்கின்றேன்.'' (நா-வா)

ஸுபைர் இப்னு அவாம் (ரலி) அவர்களுக்கு வியாபாரத்தில் அதிகலாபம் கிடைத்துக் கொண்டிருந்தது. அதற்குக் காரணம் என்னவென அவர்களிடம் மற்ற வியாபாரிகள் கேட்டபோது, ''கெட்ட சரக்கை வாங்கமாட்டேன்; நிறையிலும், அளவிலும் நீதம் தவறமாட்டேன்; அதிக லாபம் கருதமாட்டேன்; ஆதலின் எனக்கு வியாபாரத்தில் ஆண்டவன் 'பரக்கத்து' செய்தான்; இனியும் செய்வான்'' என்று விடை கொடுத்தார்கள்.

வியாபாரத்தில் லாபம் கிடைப்பது புத்தி, சாமர்த்தியத்தால், அன்று. உண்மையும் நேர்மையுமே வியாபாரத்தில் அதிக லாபத்தைக் கொடுக்கும்.

சிலர் நீதி தவறிச்செய்யும் தொழில், கால வேறுபாடுகளாலும் சூழ்நிலையாலும், காரூன், ஹாமான், பிர் அவ்ன் முதலிய அதமர்களுக்கு வாய்த்ததுபோல், பெருஞ்செல்வம் வாய்த்து விடுகிறது. அன்னோர் தமது புத்தி விசாலத்தால் செல்வம் தேடி விட்டதாக எண்ணி இறுமாப்படைந்து, செல்வச் செருக்கால் பெருமை பேசுவதுமல்லாமல், அநேக நியாயக்கேடான வேலைகளிலும் ஈடுபடத் துணிந்து, இறுதியில் அழிக்கின்றனர்.

**''நீங்கள் கப்ருகளை சந்திக்கும்வரையில், (பொருளை) அதிகப்படுத்திக் கொள்ளும் பேராசை (அல்லாஹ்வை விட்டும்) உங்களை பராக்காக்கிவிட்டது. (அவைகள் என்ன, என்பதை) பின்னர் நீங்கள் நன்கறிந்து கொள்வீர்க்ள. (அவைகளின் பலன்களையும் பின்னர்) நீங்கள் நன்கறிந்து கொள்வீர்கள். அறிந்து கொள்ளுங்கள். (அதன் பலனை) சந்தேகமற நீங்கள் அறிவீர்களாயின், நிச்சயமாக நரகத்தையே நீங்கள் (உங்கள் கண்முன்) காண்பீர்கள். சந்தேகமற, மெய்யாகவே அதனை நீங்கள் (உங்கள் கண்ணால்) கண்டுகொள்வீர்கள். (உங்களுக்கு இறைவன் புரிந்த) அருளை (நீங்கள் எந்த வழியில் செலவு செய்தீர்கள்**



**என்பதை)ப் பற்றியும், பின்னர் அந்த நாளில் நிச்சயமாக நீங்கள் கேட்கப்படுவீர்கள்.**

(குர்ஆன் ஸூரத்துல் காதுரு)

உலகத்துடைய அபரிமிதமான ஆசையை ஒழிப்பதற்குப் பரிகாரம் தேடவேண்டும். உலகத்தின் உண்மை நிலையை அறிந்தவன் அதனை ஆசிக்கமாட்டான். ஏனெனில், அதன் இன்பம் அற்ப நாளுக்குடையது. மரணத்தினால் திடீரென அழிந்துபோகும். சில சந்தர்ப்பங்களில் அந்த இன்பம் துன்பமாக மாறி பெருந்தொல்லை களையும் தரும். அதனால் கலக்கமில்லாத சுத்தமான இன்பம் எப்போதும், எவருக்கும் உண்டாவதில்லை. ஒருவன் இந்த உலகத் தினுடைய அற்ப வயதையும் மறு உலகத்தினுடைய நீண்ட வயதையும் துல்லியமாக நிறுப்பானாகில், துனியாவுக்காக ஆகிரத்தை விற்க முற்படமாட்டான். இதற்கேற்ப நபி பெருமான் (ஸல்) கூறுகிறார்கள்.

**''அன்னாசு நியாமுன் பஇதா மாத்தூ இன்தபஹூ''** ''மனிதர்கள் இந்த உலகத்தில், இறுதிகால சம்பவங்களை மறந்தவர்களாக உறங்குகிறார்கள். மரணத்திற்குப்பின் அவைகளைத் தெரிந்து கொள்வதற்காக விழிப்பார்கள்'' என்பது மேற்கூறிய ஹதீதின் கருத்து.

தோழர்களே! உணர்வு பெறுவீர்களாக! உங்களுக்கு எந்த மாத்திரம் உபதேசங்களைப் புகட்டினும், நீங்கள் அவைகளை இருதயத்தில் பதித்துப் பலன் பெறாதிருப்பதுபற்றி ஆச்சரியப்படாதிருக்க முடிய வில்லை. ஆகவே, இந்த உபதேசப் பொக்கிஷத்தை உங்கள் இருதயங் களில் நன்கு பதியவைத்து, இதன்படி நடவாது போகுவீர்களாயின் நீங்கள் இந்த இகலோக வாழ்க்கையால் முடிவில் கைசேதப்பட்டு வருந்த வேண்டியது வரும். இவ்வாறில்லாமல் இறைவன் நம்மை பாதுகாத்தல் வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

## ஹத்யா ஷரீபின் முடிவுரை

**29**

இந்த உபதேசம் ஆர்ப்புமட்டும்
　　ஈமானுள்ளோர்கருப் போதும்போதும்
எந்தக் கிதாபையும் குதுபாவையும்
　　எடுத்து ஓதினும் முனாபிக்குக்கு
சிந்தையில் செல்லா திருப்பதனால்
　　தீர்த்தேன் இந்தமட்டில் வஃளை
சொந்த பைமுதலா யிதனைச்
　　சொர்ணம் வாய்த்ததென் றெடுத்துக்கொள்வாய்.

***அரும்பதவுரை:-***

*ஈமான்- விசுவாசம், குதுபா-பிரசங்கம், முனாபிக்கு-நயவஞ்சகர் வஃளு-அறவுரை.*

وَذَكِّرْ فَاِنَّ الذِّكْرٰى تَنْفَعُ الْمُؤْمِنِيْنَ ○

***(நபியே!) "நீர் (மக்களுக்கு) நல்லுபதேசம் புரிவீராக; நிச்சயமாக (அந்த) நலலுபதேசம் விசுவாசிகளுக்குப் பயனளிக்கும்."***

என்ற இந்தத்திருமறை வாக்கியத்திற்கேற்ப, இந்த நூல் பக்த விசுவாச சோதர சோதரிகளுக்குப் போதிய பயன் அளிக்க வல்லது. ஈமானில்லாதவர்களுக்கு, எவ்வளவு உபதேசங்களை எடுத்துரைத்த போதிலும், அவர்கள் அவற்றைச் சிந்தையில் எடுத்துக் கொள்ள மாட்டார்க்ள. அவர்களே? அவிசுவாசிகளாயிற்றே!

நன்னம்பிக்கையுடையவர்களே! இந்த நூல் ''ஹத்யா ஷரீபில்'' அமைந்துள்ள நன்மொழிகளைப் பொன்மொழிகள் எனக்கொண்டு, உங்கள் இதயக் கமலத்துள் நன்கு பதியவைப்பது மாத்திரமல்ல,

***''அல்லாஹ்வுக்கும் வழிபடுங்கள்; (அல்லாஹ்வுடைய) ரசூலுக்கும் வழிபடுங்கள்; (அவர்களுக்கு மாறு செய்யாது) எச்சரிக்கையாக இருங்கள்; (இதனை) நீங்கள் புறக்கணித்து விட்டால் (நம்முடைய கட்டளைகளை உங்களுக்குத்) தெளிவாக எடுத் துரைப்பது மட்டிலுந்தான் நம் தூதர்மீது கடமையாகும் என்பதை, நிச்சயமாக நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.'' (5:92)***

என்ற வேதவாக்கில் கூறிய கட்டளையின் நிறைவு உங்களிடம் பூரணமாகப் பிரதிபலிக்கும்படி நடப்பீர்களாக!



## 'ஹத்யா மாலை' அளித்தோர்

**30**

வகுதைப் பிறந்துகீ ழக்கரையில்
　　வாசம்செய் தவ்வூ ரடங்குமெங்கள்
தகுதி ஷெய்குனா அப்துல் காதிரு
　　ஆலிம் ஸாஹிபின் காதிமானோன்
மிகுதி பாவத்தை விரும்பும்பாவி
　　மிஸ்கீன் செய்யிது முஹம்மதென்போன்
பகுதி பகுதியாய்ப் பனுவல் செய்தான்
　　பலன் கொள்ஹத்யா மாலைதனையே.

***விளக்கம்:-***

*வகுதைப்பதி எனப் பெயர் விளங்கும் காயல்பட்டினத்தில் பிறந்து கீழக்கரை என்னும் புனித நகரில் வாழ்ந்து, ஷரீஅத்து, தரீகத்து, ஹகீகத்து, மஃரிபத்து, ஸுஹ்து, தௌஹீது முதலிய ஞான அமுதை மக்களுக்குப் புகட்டி, கீர்த்தியும் புகழும் பெற்று (அரூஸியாஹ்) தைக்காவில் மறைந்து வாழும் கல்விக் கடல் ஷெய்கு அப்துல் காதிரு ஆலிம் (தைக்கா) ஷாஹிப் அவர்களின் தொண்டனும், பாவங்கள் அணுகாமல் பாதுகாவல் தேடுபவனும், எளிமைத் தனத்திலேயே என்றும் ஆதரவு வைப்பவனுமாகிற, செய்யிது முஹம்மது (மாப்பிள்ளை லெப்பை ஆலிம்) என்ற பெயருடையோனாகிய நான், தமிழக முஸ்லிம்கள், ஆண் பெண் இருபாலாரும் நேர்வழியைச் சுலபமாக விளங்கிப் பயன்பெற வேண்டும் என்ற ஆவலோடு, எம் பெருமானார் கிரஸுலேகரீம் (ஸல்) அவர்களின் ஹதீதை ஆதார மாகத் தழுவி 'ஹத்யா மாலை' ஆகிய இந்த நூலைக் கோவை செய்தேன்.*

## பிரார்த்தனைத் தூது

اِنَّ اللّٰهَ يُحِبُّ التَّوَّابِيْنَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِيْنَ ○

***''தௌபாச் செய்கிறவர்கள்மீதும், (இருதய) சுத்தமுள்ளவர்கள் மீதும், அல்லாஹ் உவப்பு வைக்கிறான்.''***

*உள்ளச்சத்துடன் கெஞ்சி இரந்து துஆக் கேட்பதானது, இபாதத் (வணக்கங்)களின் கருவூலமாக இருக்கிறது. அன்றியும், ''துஆ,*

இபாதத்துகளின் சத்தாக இருக்கும்'' என நபி பெருமானார் (ஸல்) கூறியுள்ளார்கள்.

இதற்காகத்தான், அல்லாஹ் தன் அடியார்கள்மீது வணக்கங்களை விதியாக்கியது. அவர்கள் தன்னை தியானிக்கிறார்களா? என்றறிவதற் காகவேதான்.

அடிமை எனப்படுவது, அடியான் தன்னுடைய தாழ்ந்த நிலையையும், சர்வ வல்லமையுள்ள அல்லாஹ்வினுடைய உயர்ந்த நிலையையும் உணர்வதினாலுண்டாகும் தன்மைக்கே கூறப்படும். இந்த இரண்டு நிலைமைகளும் துஆவில் காணப்பட வேண்டும்.

அல்லாஹுவின்மீது ஒருமனப்பட்டு, மனத்தைத் திருப்பித் தாழ்மையுடன் களங்கமற்ற இருதயத்தோடு கெஞ்சி, அழுது, இரங்கி துஆக் கேட்கேவேண்டும். ஏனெனில், இருதய இளக்கமானது ரஹ்மத் (அருள்) உடைய வாசல் திறப்பதற்குக் காரணமாக இருக்கிறது.

"மறதியாகவும் பல பராக்கிலுமிருக்கும் இருதயமுடையோனது எந்த பிரார்த்தனையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.'' (நா-வா)

இதற்கேற்ப இங்கு ஓர் சம்பவம் கவனிக்கத்தக்கது.

முன்னொரு காலத்தில் பனீ இஸ்ராயீல் கூட்டத்தில் ஒரு தடவை பஞ்சம் உண்டானது. மழைக்காகப் பிரார்த்தனை செய்யும்பொருட்டு மக்கள் பல தடவையும் வெளிப்புறங்களில் கூடி துஆச் செய்தார்கள். அவர்களின் துஆ கபூலாக (அங்கீகரிக்கப்பட)வில்லை. பின்னர் அந்தச் சமூகத்தின் நபிக்கு அல்லாஹ் வஹீ மூலம்.

''உங்களுடைய இருதயம் துர்க்குணங்களால் அசுத்தமாகவும், உங்கள் வயிறு ஹராமான உணவால் நிரம்பியதாகவும், உங்கள் கைகள் நியாயமற்ற செய்கைகளில் ஈடுபட்டு கறை தோய்ந்தவையாகவும் இருக்கின்றன. இந்த இழி நிலைமையிலா துஆக் கேட்கப் புறப்பட்டீர்கள்? எனது கோபப்பார்வை உங்கள் மீது அதிகரித்து, நீங்கள் என்னைவிட்டும் அப்புறப்பட்டு விட்டீர்கள்; என்று உமது சகாக்களுக்குத் தெரிவித்து விடும்'' என அறிவித்தான்.

இதைக்கேட்ட அந்தச் சமூகத்தார் பரிதவித்து, அகம், புறம் இரண்டும் பரிசுத்தமுடையவர்களாக பச்சாதாபத்தோடு, ஒரு மனப் பட்டு அழுது மன்றாடி பாவமன்னிப்புத் தேடியபின் துஆ விரந்தனர். அப்போது, அவர்கள்மீது அல்லாஹுவின் கருணை சுரந்து, போதிய அளவு மழை பொழிந்து, பஞ்சம் தீர்ந்து விமோசனம் பெற்றார்கள்.



ஆகவே பிரார்த்தனைக்கு முன்னே தன்னுடைய தவறுகளை உணர்ந்து பச்சாதாபப்பட்டு, அதற்குப் பரிகாரமான மன்னிப்புக் கேட்கவேண்டும். அன்றியும், அவ்வாறான பாவங்களில், மேலும் ஈடுபடாமல் தன்னைக் காத்துக்கொள்ள, திடசித்தம் வைக்கவும் வேண்டும். அதோடு கல்பை அல்லாஹ் அளவில் ஒப்படைக்கவும் வேண்டும். ஏனெனில், அநேகம் துஆக்கள் கபூலாகாமல் இருப்பதற்குக் காரணம், பச்சாதப்பட்டு பாவமன்னிப்புக் கேட்டபின், அதே பாவத்தைத் திரும்பச் செய்வதாலேயே ஆகும்.

துஆவை பிஸ்மி ஓதி ஆரம்பித்து, முன்னும் பின்னும் ஹம்தும் ஸலவாத்தும் ஓதவேண்டும்; ஹம்து ஓதாவிடில் அந்தக் காரியம் பொலிவுபெறாது.

"ஒருவன் துஆவுக்கு முன்னும், பின்னும் ஸலவாத்து ஓதுவானாகில், அவனுடைய துஆ கபூல் செய்யப்படும். அல்லாஹ் மிகவும் சங்கை பொருந்தியவன்; ஆகையால், தன்னிடத்தில் ஒப்படைத்த ஸலவாத்தை மாத்திரம் கபூல் செய்து மற்றவைகளை விட்டுவிட மாட்டான்.''

"துஆக் கேட்கும்போது இரண்டு கைகளையும் மேனோக்கி ஏந்திக் கொண்டிருத்தல் வேண்டும். கடைசியில், அந்தக் கைகளை முகத்தின்மேல் தடவிக் கொள்ள வேண்டும்; ஏனெனில், அல்லாஹுவின் சமூகத்தில் ஏந்திய கையை, இரக்கமுள்ள அவன் வெறுமையாகத் திருப்பிவிட மாட்டான்.''

கேட்கும் துஆக்கள் கபூல் செய்யப்பட்டு விட்டாலும், அதன் பலன் கிடைக்கத் தாமதமாகலாம், மூஸா நபி (அலை) அவர்கள் பிர்அவ்னையும், அவன் கூட்டத்தாரையும் அழிக்கும்படி கேட்ட துஆவை, உடனேயே அதைக் கபூல் செய்துவிட்டதாக அல்லாஹ் அறிவித்தான். இந்த விபரம் குர்ஆனில் வருகிறது. அதோடு கூடவே 'நான் கபூல் செய்துவிட்டாலும், (அதன் பலன் தாமதமாகிறது என்பதினால்) நீங்கள் தவறாகப் போய்விட வேண்டாம்.'' என்ற கருத்தையும், அந்த ஆயத்திலேயே அல்லாஹ் வலியுறுத்துகிறான். இவ்வாறு கபூல் செய்ததாக அறிவித்ததற்கும், பிர்அவ்னையும் அவனது கூட்டத்தார்களையும் அழித்ததற்கும், இடையில் 12 வருட கால இடைவெளி இருந்ததாக தப்ஸீருடைய உலமாக்கள் கூறுகிறார்கள்.

துஆக் கேட்பதின் பலன்கள் பலவிதமாக இருக்கின்றன என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

எவனொருவன் முறைப்படி துஆக் கேட்கிறானோ, அவன் அவசியம் நான்கு வஸ்துக்களில் ஏதாவதொன்றைப் பெறுவான். அவை:- 1. அந்த துஆ அப்படியே கபூலாகும். 2. அவற்றில் சில கபூலாகும். 3. அது கபூலாகாது போய்விட்டாலும், அதற்குப் பதிலாக வேறொரு காரியம் நிறைவேறும். (அதாவது:- ஒரு குழந்தை ஒரு பொருளைக் கேட்டு அழுகிறது. அந்தப் பொருளை, அந்தக் குழந் தைக்கு கொடுப்பது சரியில்லையென்று பெற்றோர்கள் நினைக் கிறார்கள். ஆகவே, குழந்தை அழுகிறது என்பதற்காக, அதற்கு நன்மை தரக்கூடிய வேறு ஒரு பொருளை அவர்கள் கொடுப்பார்களல்லவா? அதுபோலவே பெற்றோர்களைவிட அதிக இரக்கமும், முன் யோசனையுமுள்ள அல்லாஹ் நாம் கேட்பதை தராவிட்டாலும், அதைவிட அதிக நன்மையை தரக்கூடிய வேறொன்றை நமக்குத் தருவான்) 4. இது ஒன்றும் நிறைவேறா விட்டாலும் துஆக் கேட்டதற்காக வேண்டி ஒரு தீங்கையாவது அல்லாஹ் தடுத்து நிறுத்தி விடுவான்.'' என்று நபி பெருமானார் (ஸல்) நவின்றுள்ளார்கள்.

நாம் கேட்ட துஆ கபூலாகுமோ? ஆகாதோ? என்ற சந்தேகத் துடன் துஆச் செய்யாது, நிச்சயமாகக் கபூலாகும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் பிரார்த்திக்க வேண்டும்.

"நீங்கள் 'துஆ' கபூலாகும் என்ற நம்பிக்கை வைத்தவர்களாகவே அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரியுங்கள்.'' (நா-வா)

சதாவும் தொடர்ச்சியாக துஆச் செய்ய வேண்டும். நான் அநேக தடவை துஆக் கேட்டிருக்கிறேன். அது கபூலாகவில்லை என்று நினைக்க வேண்டாம். ஆகவே, ஏற்றுக் கொள்ளப் பொருத்தமான சந்தர்ப்பத்தையும், அதை அடியாருக்கு ஆக்கித்தரும் முறையையும் அல்லாஹ் மிகவும் அறிந்தவனாக இருக்கிறான்.

மேற்கூறிய முறைகளையொட்டி மனமொப்புதலுடன் துஆ இறைஞ்சி, நமது வேண்டுகோள்களை இறைவனிடம் பெறுவோமாக.

தொழுகையிலும், மற்றுமுள்ள எல்லாச் செயல்களிலும், அவரவர் பழக்க வழக்கங்கள் ஒவ்வொன்றிலும், அல்லாஹுவைத் தூய்மைப் படுத்தலெனும் தஸ்பீஹ், துதித்தலெனும் தஹ்மீது, ஓர்மைப்படுத்துதலெனும் தஹ்லீல், பெருமைப்படுத்துதலெனும் தக்பீர், கண்ணியப்படுத்தலெனும் தம்ஜீது, நமது ரஹ்மத்திற்குரிய ஸலவாத்தும் ஸலாமும் ஆகிய, இவைகள் போன்ற நற்சொற்களைக் கொண்டு வல்லோனை திக்ரு செய்வதினாலும், ஞாபகப்படுத்



துவதினாலும் நமது நலம் பெருகவும், வரவிருக்கும் இடையூறுகள் நீங்கவும், ஒவ்வொரு நாளும், நமது நடைமுறையில் கைக்கொண்டு, நாம் நடத்தல் வேண்டும் என்று போதிக்கப்படுகின்றோம்.

அவை அனைத்தையும் இந்த அத்தியாயத்தில் விவரிப்பது அசாத்தியமாதலின், மனிதனுக்கு இன்றியமையாத காரியங்களில், நம் நபிகள் நாதர் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகள், இமாம்கள் மற்றைய மேதைகளும், செயலாற்றியதுமன்றி, நமக்கு அன்பளிப்பாக அருளிச்செய்த பிரார்த்தனைகளில் பல துஆக்கள் அரபியிலும், அதே மொழியைத் தமிழிலும் கீழே தரப்படுகின்றன. ஆனால், அரபியை விடத் தமிழில் சில எழுத்துக்கள் குறைவின் காரணமாக, இந்தஇரு மொழிகளைக் கூறுவதில் உச்சரிப்பு, ஒன்றுக்கொன்று சற்று வித்தியாசப்படலாம். ஆகவே, அரபி தெரியாத அன்பர்கள், தெரிந்தவர்களிடத்தில் அந்தந்த உச்சரிப்புகளை அறிந்து தெரிந்து மொழிவது மிக அவசியமாகும், என்பதை இந்த நூல் ஆரம்பத்திலும் வேண்டப்பட்டுள்ளது.

## பிரார்த்தனைப் புதையல்

**ஒரு வேலையைத் ஆரம்பிக்கும்போது,**

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ۝ بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ

**அவூது பில்லாஹி மினஷ் ஷெய்தானிர் ரஜீம் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் அல்லாஹும்ம ஸல்லி அலா செய்யிதினா முஹம்மதின்.**

**அல்லாஹுவின் பெயரைக் கேட்கும்போது,**

جَلَّ جَلَالُهُ

**ஜல்ல ஜலாலுஹு**

**நபி பெருமானார் (ஸல்) பெயரைக் கேட்டதும்,**

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلِّمْ

**அல்லாஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதின் வ ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லிம்.**

தும்மியதும்,

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ○

அல்ஹம்து லில்லாஹ் ரப்பில் ஆலமீன்.

கொட்டாவி வரும்போது வாயில் புறங்கையை வைத்து,

اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

அவூது பில்லாஹி மினஷ் ஷெய்த்தானிர் ரஜீம்.

வீட்டிலிருந்து வெளியாகும்போது,

بِسْمِ اللّٰهِ رَبِّيْ اَعُوْذُ بِكَ اَنْ اَضِلَّ اَوْ اُضَلَّ اَوْ اَظْلِمَ
اَوْ اُظْلَمَ اَوْ اَجْهَلَ اَوْ اُجْهَلَ عَلَيَّ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
لَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ،

பிஸ்மில்லாஹி ரப்பீ அஊது பிக அன் அளில்ல அவ் உளில்ல அவ் அள்லிம அவ் உள்லம அவ் அஜ்ஹல அவ் உஜ்ஹல அலைய்ய பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்.

பள்ளியில் நுழையும்போது,

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ اِغْفِرْ ذُنُوْبِيْ وَافْتَحْ لِيْ
اَبْوَابَ رَحْمَتِكَ اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ

'அல்லாஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதின் இக்பிர் துநூபி வப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்'.



பள்ளியிலிருந்து வெளியாகும் போது,

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ مِنْ فَضْلِكَ رَحْمَتِكَ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின் பள்லி ரஹ்மதிக.

சகோதர முஸ்லிமைக் கண்டதும்.

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهٗ

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்ம துல்லாஹி வபர காத்துஹு.

வாகனங்களில் ஏறும் போது,

سُبْحَانَ الَّذِيْ سَخَّرَلَنَا هٰذَا وَمَا كُنَّا لَهٗ مُقْرِنِيْنَ

சுப்ஹனல்லதி ஸக்கர லனா ஹாதா வமா குன்னா லஹு முக்ரினீன்.

கப்பலில் ஏறும்போது,

بِسْمِ اللّٰهِ مَجْرٖيهَا وَمُرْسٰهَا اِنَّ رَبِّيْ لَغَفُوْرٌ رَّحِيْمٌ ○

பிஸ்மில்லாஹி மஜ்ரீஹா வமுர்ஸாஹா இன்ன ரப்பி லகபூருர் ரஹீம்.

வாகனங்களிலிருந்தும், உயரத்திலிருந்தும் இறங்கும்போது

رَبِّ اَنْزِلْنِيْ مُنْزَلًا مُّبَارَكًا وَّاَنْتَ خَيْرُ الْمُنْزِلِيْنَ ○

ரப்பி அன்ஸில்னி முன்ஸலன் முபாரகன் வ அந்த கைருல் முன்ஸலீன்.

உயரத்தில் படியில் ஏறும்போதும்,
விமானத்தில் செல்லும்போதும்

اَللّٰهُمَّ لَكَ الشَّرَفُ عَلٰى كُلِّ شَرَفٍ

அல்லாஹும்ம லகஷ்ஷரபு அலா குல்லி ஷரபின்.

வியாபாரத்தில் பிரவேசிக்கும்போது,

بِسْمِ اللّٰهِ تَوَكَّلْتُ عَلَى اللّٰهِ اَلْاَمَانَ عِنْدَ اللّٰهِ لَاحَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ

பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹ் அல்அமான
இந்தல்லாஹ் லா ஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹ்.

மழை பெய்யும்போது,

اَللّٰهُمَّ اجْعَلْهُ سَقْيًا هَنِيْئًا وَصَبًّا نَافِعًا وَاجْعَلْهُ سَبَبَ رَحْمَتِكَ وَلَا تَجْعَلْهُ سَبَبَ عَذَابِكَ

அல்லாஹும் மஜ் அல் ஹு ஸக்யன் ஹனீஅன்
வஸப்பன் நாபிஅன் வஜ்அல்ஹு ஸபப ரஹ்மதிக
வலாதஜ்அல்ஹு ஸபப அதாபிக.

இடிசத்தம் கேட்கும்போது,

سُبْحَانَ مَنْ يُسَبِّحُ الرَّعْدُ بِحَمْدِهٖ وَالْمَلٰٓئِكَةُ مِنْ خِيْفَتِهٖ

ஸுப்ஹான மன் யு ஸப்பி ஹுர் ரஃது பிஹம்திஹி
வல் மலாஇகது மின் கீபதிஹி

தர்மம் கொடுக்கும்போது,

رَبَّنَا تَقَبَّلْ مِنَّا اِنَّكَ اَنْتَ السَّمِيْعُ الْعَلِيْمُ ○

ரப்பனா தகப்பல் மின்னா இன்னக அந்தஸ் ஸமீஉல் அலீம்.

கண்ணாடி பார்க்கும்போது,

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ خَلَقَنِيْ فَاَحْسَنَ خَلْقِيْ وَصَوَّرَنِيْ فَاَحْسَنَ صُوْرَتِيْ

அல்ஹம்து லில்லாஹில்லதி கலகனீ ப அஹ்ஸன கல்கீ
வஸவ்வறனீ ப அஹ்ஸன ஸூரதீ.



புதுத்துணி அணியும்போது,

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ كَسَانِيْ هٰذَا وَرَزَقَنِيْهِ مِنْ غَيْرِ حَوْلٍ مِّنِّيْ وَلَا قُوَّةٍ

அல்ஹம்து லில்லா ஹில்லதீ கஸானீ ஹாதா வரஸகனீஹி
மின் கைறி ஹவ்லின் மின்னீ வலா குவ்வத.

(இந்த நேரத்தில் இன்னா அன்ஸல்னா ஸூரத்து ஓதுவது உத்தமம்.)

இரணப் பெருக்கத்திற்கு,

اَللّٰهُمَّ يَا غَنِيُّ يَا حَمِيْدُ يَا مُبْدِئُ يَا مُعِيْدُ يَا رَحِيْمُ يَا وَدُوْدُ اَغْنِنِيْ بِحَلَالِكَ عَنْ حَرَامِكَ وَبِطَاعَتِكَ عَنْ مَّعْصِيَتِكَ وَبِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ

அல்லாஹும்ம யாகனிய்யு யாஹமீது யாமுப்திஉ
யாமுஈது யாரஹீமு யாவதூது அக்னினீ பிஹலாலிக
அன்ஹராமிக வபிதாஅதிக அன் மஃஸியதிக வபி பல்லிக
அம்மன் ஸிவாக்க.

கடன் தீருவதற்கு,

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ وَاَعُوْذُ بِكَ مِنَ الْعَجْزِ وَالْكَسَلِ وَاَعُوْذُ بِكَ مِنَ الْجُبْنِ وَالْبُخْلِ وَاَعُوْذُ بِكَ مِنْ غَلَبَةِ الدَّيْنِ وَقَهْرِ الرِّجَالِ ○

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல்ஹம்மி வல்
ஹஸன்; வ அஊதுபிக மினல் அஜ்ஸி வல் கஸலி
வ அஊதுபிக மினல் ஜுப்னி வல்புக்லி அ அஊதுபிக
மின் கலபதித்தைனி வ கஹ்ரிர் ரிஜால்.

உணவருந்தும்போது,

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۝
اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ

அஊது பில்லாஹி மினஷ் ஷெய்தானிர் ரஜீம். பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்.

உணவருந்திய பின்,

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَطْعَمَنَا، وَاَنْعَمَنَا وَسَقَانَا وَاٰوَانَا
وَهُوَ سَيِّدُنَا وَمَوْلٰنَا

அல்ஹம்து லில்லா ஹில்லதி அத் அமனா வ அன் அமனா வ ஸகானா வ அவானா வ ஹுவ ஸய்யிதுனா வ மவ்லானா.

வானம் பூமியில் ஏதாவது அற்புதத்தைக் கண்டால்,

سُبْحَانَ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاللّٰهُ اَكْبَرُ
وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيمِ

ஸுப் ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம்.

துக்கம் நீங்கவகள்க.

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ الْعَلِيُّ الْعَظِيمُ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ رَبُّ الْعَرْشِ
الْعَظِيمِ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ رَبُّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَرَبُّ
الْعَرْشِ الْكَرِيمِ ۝

லாஇலாஹ இல்லல்லாஹுல் அலிய்யுல் அளீம்,
லா இலாஹ இல்லல்லாஹு ரப்புல் அர் ஷில் அளீம்,
லா இலாஹ இல்லல்லாஹு ரப்புஸ் ஸமாவாதி வல் அர்ளி வரப்பில் அர்ஷில் கரீம்.



ஒருவரின் மவுத்தை அறிந்ததும்,

سُبْحَانَ الْحَيِّ الَّذِيْ لَا يَمُوْتُ اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

ஸுப்ஹானல் ஹையில்லதீ லாயமுத்து இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

பார்வையால், கேள்வியால் சிறிய பாவங்கள் நிகழ்ந்தால்,

اَسْتَغْفِرُ اللّٰهَ الْعَظِيمَ

அஸ்தக் பிருல்லாஹல் அளீம்.

புதிய பிறையைக் கண்டதும்,

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُمَّ اَهِلَّهُ عَلَيْنَا بِالْاَمْنِ وَالْاِيمَانِ وَالسَّلَامَةِ
وَالْاِسْلَامِ رَبِّيْ وَرَبُّكَ اللّٰهُ

அல்லாஹு அக்பரு அல்லாஹும்ம அஹில்லஹு அலைனா பில் அம்னி வல் ஈமானி வஸ்ஸலாமதி வல் இஸ்லாமி ரப்பீ வரப்பு கல்லாஹ்

மலபாதைக்குச் செல்லும்பொழுது,

بِسْمِ اللّٰهِ اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَآئِثِ

பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம இன்னி அஊது பிக மினல் குபுதி வல் கபா இதி.

மலபாதை கழித்து வெளிவரும்பொழுது,

غُفْرَانَكَ اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ اَذْهَبَ عَنِّي الْاَذٰى وَعَافَانِيْ

குப்றானக அல்ஹம்து லில்லா ஹில்லதி அத்ஹப அன்னில் அதா வ ஆபானி.

மல ஜல பாதை கழித்துச் சுத்தம் செய்யும்பொழுது,

اَلْحَمْدُ لِلّٰهِ اَللّٰهُمَّ حَصِّنْ فَرْجِيْ وَيَسِّرْ اَمْرِيْ

*அல்ஹம்து லில்லாஹி அல்லாஹும்ம ஹஸ்ஸின் பர்ஜீ வயஸ்ஸிர் அம்ரீ.*

வீட்டில் நுழையும்பொழுது,

بِسْمِ اللّٰهِ مَاشَاءَ اللّٰهُ لَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ

*பிஸ்மில்லாஹி மாஷா அல்லாஹ் லாகுவ்வத இல்லா பில்லாஹி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்ம துல்லாஹி.*

நித்திரை செய்யும் முன்,

بِاسْمِكَ رَبِّيْ وَضَعْتُ جَنْبِيْ اَنْتَ رَبِّيْ اَنْتَ حَسْبِيْ طَهِّرْ قَلْبِيْ وَاغْفِرْ ذَنْبِيْ

*பிஸ்மிக ரப்பீ வளஃது ஜன்பீ அந்த ரப்பீ அந்த ஹஸ்பீ தஹ்ஹிரு கல்பீ வக்பிர் ஸன்பீ.*

நித்திரையிலிருந்து எழுந்ததும்,

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ اَحْيَانَا بَعْدَ مَا اَمَاتَنَا وَاِلَيْهِ النُّشُوْرُ

*அல்ஹம்து லில்லா ஹில்லாதி அஹ் யானா பஃத மா அமாதனா வ இலைஹின்னு ஷூரு.*

இந்த பிரார்த்தனைகளை, ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் மனனம் செய்து, அந்த அந்த சந்தர்ப்பங்களில் உபயோகப்படுத்த வேண்டும். அவ்விதம் உபயோகப்படுத்துவதால், கஷ்டங்கள், நோய்கள் வரவிருக்கும் ஆபத்துகள் அகலும்; செல்வமும் செழிப்பும் அதிகரிக்கும். அன்றியும், பல நன்மைகளும் மனச் சாந்தியும் வாய்க்கப்பெறும் என கூறப்படுகிறது. நமக்கு வேண்டுவதும் அதுவே.



# வேண்டுகோள்

## 31

எனக்கும் தாய்தந்தை இனத்தவர்க்கும்
என்னைக் கைதாங்கும் ஷெய்கவர்க்கும்
மனக்கண் திறக்கக்கை தந்தவர்க்கும்
மார்க்க வழிசறு காதவர்க்கும்
கனக்க ரஹ்மத்தும் மக்பிரத்தும்
காவல் பாட்டுடன் சிறப்பருள
சினக்கண் பார்வையும் எய்திடாமல்
செப்பமாய்க் காக்கும் யாரப்பனா.

### ஒரு ஞானாசிரியர் (வழிகாட்டி) தேவை!

**ரஹ்மா (வான இறைவ)னைப்பற்றிய அவ(னுடைய இயல்பி)னைத் தெரிந்தவரிடம் கேட்டறிந்து கொள்க. *(25:60)***

எனக் குர்ஆன் கூறிக்கொண்டிருக்கிறது. அவனது இயல்புகளை அறிந்தவர்கள் காட்டிக்கொடுக்காமல், இறைவன் சம்பந்தப்பட்ட ஞானத்தைப் பெற்றுக் கொள்வது சாத்தியமாகாது.

மேற்கோள்:

**ஆதமுடைய மக்கள் ஹாபீலுக்கும் காபீலுக்கும் இடையே நடைபெற்ற நிகழ்ச்சியை விளக்கும் இடத்தில், காபீலுக்குக் காகத்தை அனுப்பி, மனித உடலை புதைக்கும் வகையைப் போதித்த முறையானது, மனிதனுக்குப் புத்தகப் படிப்பைவிட நேர்முகப் படிப்பினை பயனுள்ளது என்பதையே காட்டுகிறது.**

***(5:27-31)***

இறைவன், வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும்; இரவும் பகலும் மாறி மாறி வரச்செய்வதிலும்; மழை; காற்று, மேகம் இவைகளைக் கொண்டு உயிர்களைப் போசிப்பதிலும், மனிதருக்குள்ள பிரயோசனங்கள் மட்டுமல்ல, அவனுடைய பலபல இயல்பினைச் சுட்டிக்காட்டி, அவற்றை ஆராய்ந்து கண்கூடாக அறிந்துகொள்ள வேண்டி திருக்குர்ஆன் பலவிடங்களில் நம்மை பணித்திருப்பதன் நோக்கமும் இதுவேதான்.

மிகப்பலர் தெரிந்துகொள்ள முடியாத மறைவான ஞானம், ஒருசில மகான்களுக்கு இறைவனுடைய அருளால் கிடைத்திருப்பதாகும். அத்தகைய ஞானத்தை **''எனது சொந்த ஞானம்''** என்று இறைவனே பெருமையோடு கூறுகிறான். அத்தகைய ஞானத்தையும், நல்ல ஞானாசிரியர் (காமிலான ஷெய்கு) ஒருவர் மூலமே பெற்றாக வேண்டும் என்பதற்குத் திருமறையில் சான்றுகள் பல உண்டு.

**வேறு** எந்த நபிமாரும் பெற்றில்லாத பாக்கியமாக, **இறைவனோடு** இந்தப்புவியில் ஸினாய் மலையிலே **நேரடியாக உரையாடிய** மகத்துவம் பெற்றவர் நபி மூஸா (அலை) **ஆவார்கள். அத்தகைய** வரம்கூட இறைஞான வழிகாட்டியாக ஹல்ரத் கிளுறு **(அலை)** அவர்களைப் பின்பற்றும்படி அல்லாஹுவால் **கட்டளையிடப்பட்டார்கள்.** இதன் மூலம், ஒரு ஞானாசிரியரைக் **கொண்டுதான், இறைவனது சொந்த** ஞானமாகிய மெய்ஞ்ஞானப் **பாக்கியத்தைப் பெறமுடியும்** என்பது உறுதியாகிறது என்பதைக் கவனிக்க **வேண்டும்.**

குர்ஆன் *(18:66-83)*

அகிலத்தாருக்கெல்லாம் அழகிய முன் மாதிரியாக அல்லாஹுவால் அருளப்பெற்ற அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு, ஹிராக் குகையிலும், அதன் பின்னரும், அல்லாஹு தன் அமரராகிய ஜிப்ரீல் (அலை) அவர்களை ஞான வழிகாட்டியாக அனுப்பி, மா நபி (ஸல்) அவர்களுக்கு வெளிப்பாடுகளை அருளிக் கொடுத்திருக்கிறான். இதனை ஆழ்ந்து சிந்திப்போர், ஆத்மீக வழிகாட்டி ஒருவரின் அவசியத்தை மறுக்கவே முடியாது.

''நான் ஞானமென்னும் நகரமாக இருக்கிறேன், அலீ (ரலி) அதன் நுழைவாயிலாக இருக்கிறார்'' என்ற பொன் மொழியின் மூலம், நாயகம் (ஸல்) அவர்கள், ஞான விசாலம் என்ற பெருநகரில் புக விரும்பும் ஒருவர், ஒரு ஞான வழிகாட்டி மூலமே புகமுடியும் என்பதைச் சூசமாக குறிப்படுவதைச் சிந்திப்பவர்கள் தெளிவடையவே செய்வர்.

பெருநகரம் ஒன்றின் படத்தின் துணைகொண்டே, அந்த நகரத்தின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் யாவற்றையும் கண்டு வருவது முடியாத காரியம் என்பதும், ஆனால் அந்த நகரத்தைப்பற்றித் தெரிந்த பாரம்பரியப் பழக்கமுள்ள, முறையான, நம்பிக்கையான



அனுமதிபெற்ற ஒரு வழிகாட்டியைத் துணையாகக் கொண்டு, எல்லா இடங்களையும் கண்டு வருதல் சாத்தியம் என்பதும் எவராலும் மறுக்கமுடியாததென்று.

சொல்லுருவான உபன்யாசங்களின் மூலமும், எழுத்துருவான நூல்களின் மூலமும், மார்க்கம் உரைக்கின்ற ஞானங்கள் அனைத்தையும் அறிந்துகொள்ள முடியும் என்ற கருத்து முற்றிலும் சரியானதல்ல. உபன்யாசங்களும் நூல்களும் திசைகாட்டும் கைகாட்டிகளேயன்றி வழிகாட்டிகளல்ல.

குர்ஆனையும் ஹதீதையும் படித்த மேதைகளுக்கு, ஆத்மீகத் துறையில் ஞானாசிரியர் தேவையில்லை என்று கூறுபவர்கள், இந்த விஷயத்தை சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும்.

ஆன்மீக வழிகாட்டி என்ற பெயரில் சிலர், தவறான மார்க்கத்தைக் காட்டி, சீடர்களை வழி கெடுத்துவிடும் அபாய நிலையும் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. தவறுக்குக் காரணமாகவுள்ள வழி காட்டிகளின் தனிப்பட்ட குறைக்கு, அவர்களைக் கண்டிக்காமலிருக்கவும் முடியாது. இதற்காக, ஆன்மீக ஞானத்தை அடைவதற்கு ஒரு வழி காட்டியைத் தொடர்வதே அபாயம் என்று முடிவுகட்டி விடவும் கூடாது. அப்படி முடிவு கட்டுவது விமானப் பிரயாணத்தில் விபத்து வாய்ப்பு உண்டு என்பதற்காக விமானப் பிரயாணத்தையே வெறுக்கும் செயலாகவே முடியும்.

எனவே, ஆன்மீக ஞானம்பெற வேண்டும் என்ற தாகம் உடையவர்கள், தங்களுக்கு ஒரு நல்ல அனுபவமிக்க வழிகாட்டியைத் தீர்மானிப்பதில் கவனமாக இருக்கவேண்டும்.

உண்மையான ஆன்மீக வழிகாட்டி, மார்க்க சம்பந்தப்பட்ட கட்டாயக் கடமைகளைக் குறைத்து நிறைவேற்றிக் கொள்ளுமாறு, தமது முரீது (சீடர்)களுக்கு சலுகையளிப்பவராக இருக்க முடியாது. ஆனால், கட்டாயக் கடமைகளை நிறைவேற்றுவதோடுகூட, மேலதிகமாக செய்ய வேண்டிய பக்தி வழிகளையும், முரீதினுடைய மனப்பக்குவத்திற்கு ஏற்றதுபோலக் காட்டவே செய்வார். ஆகவே:-

நம்பிக்கைக்குரிய ஒருவரை, பரம்பரையாக ஆன்மீகச் சுடரேற்றி வந்த அருங்குலத்துதித்த ஒருவரை, தன்னம்பிக்கையுடன் எந்தப்பிரச்சினைகளையும் தீர்க்கவல்ல ஒருவரைத் தெளிவு செய்து,

அத்தகைய உத்தம குருவை ஞான வழிகாட்டியாக மன, மெய், மொழிகளால் பின்பற்றுபவர்கள், மிக இலகுவில் எவ்விதச் சிரமமுமின்றித் தங்கள் இலட்சியத்தில் வெற்றி பெற்று, முக்தி அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. இதனையே இமாமுல் அரூஸ் மாப்பிள்ளை ஆலீம் அவர்கள் நமக்கு உணர்த்தியது மட்டுமல்லாமல், தங்களது ஞானகுரு (ஷெய்கு) அவர்களையும் எடுத்துக்காட்டி, நாம் ஒவ்வொருவரும் அவசியம் ஒரு காமிலான ஷெய்கைப்பெற்று, மார்க்கவழி பிசகாமல் நடக்கவேண்டும் என்று உபதேசம் தந்து:

وَابْتَغُوا الْقَادِرِىْ صِرَاطًا سَوِيًّا اِنَّ فِيْهِ الْوُصُوْلَ لِلّٰهِ سَهْلًا

"குதரத்துள்ள அல்லாஹ்வின் அருளன்பை காதிரிய்யா எனும் (தத்துவம் பெற்ற, ஸுன்னத் வல்ஜமா அத்தின் அடிப்படையிலுள்ள எந்த தரீக்காவாயினும் சரி) நேரிய பாதையின் மூலம் அடையுங்கள் என்று வழிகாட்டி இருக்கிறார்கள்.

## ஆசித்தோர்:

*மாமேதை அல்லாமா மாப்பிள்ளை ஆலிம் அவர்களுடையவும், அவர்களின் பின் சந்ததிகளுடையவும் ஞான முன்னோர் (வழிகாட்டி) களின் திருப்பெயர்கள் கொண்ட (ஸில்ஸிலா) அரபி பைத்தை அரூஸிய்ய-துல் காதிரிய்யா(ஹ்)வின் காவலராக இருந்து, கடமை யாற்றி வருகின்ற உத்தம பக்தர்கள் பலரின் வேண்டுதலுக்கிணங்க இங்கு தரப்படுகிறது.*



## 32

ஆயிரத் திருநூற்றி எண்பத்தா
ராண்டு ரஜபு பத்தாம்திகதி
காபிலாக்கினேன் இந்தநூலை
ஹக்கை நாடினோ ரெல்லாருக்கும்
தாயும் காயிமாம் நிற்குமொரு
தாத்தின் ஸிபாத்தைத் தோத்திரவு செய்தே
வாயிலும் கல்பிலும் அவன்தன்
வல்ல திக்ரினை நடத்திவைப்பான்.

**விளக்கம்:-**

இறைவனை நாடி அவனது தத்துவார்த்தத்தை சதா இருதயத்தில் கொண்டு, சொல் செயலால், அவனது திக்ரில் நடக்க நல்லுதவி தேடுபவர்கள் அனைவருக்கும் ஓர் நல்விருந்தாக ஹிஜ்ரி 1286 ரஜபு 10-ம் நாள் *'ஹத்யா மாலை'* என்ற இந்த உபதேச நூலை எழுதி நன்கொடையாக அளித்துள்ளேன். ஏ! அருளாளா!! இதனைக் கொண்டு பயன்பெற அன்னார்களுக்கு நேர்வழி காட்டுவாயாக!

## 33

நல்ல அழகானமுத்திரையும்
நாவில் கலிமாவும் ஒடுக்கத்திலே
சொல்ல உதவியும் சோபனமும்
சொர்க்க வாழ்வுடன் லிகாவும் தந்து
அல்ல லகற்றியே காத்தருள்வாய்
ஆண்டவா ரப்புல் ஆலமீனா
ஸல்லி ஸல்லிமன் ரப்பி அலா
ஷாபீயீ வ ஆலிஹ் இலாஹீ.